THE

RIPON READERS

TAMIL SERIES : No. VII

ரிப்பன்
தமிழ் வாசக புத்தகம்
7

THE MODERN PRINTING WORKS
EDUCATIONAL PUBLISHERS
MOUNT ROAD, MADRAS

THE

RIPON READERS

TAMIL SERIES

EDITED BY

T. CHELVAKESAVAROYA MUDALIAR, M.A.,

PROFESSOR OF TAMIL, PACHAIYAPPA'S COLLEGE,

MADRAS.

No: VII.

PRINTED AND PUBLISHED AT

THE MODERN PRINTING WORKS

MOUNT ROAD, MADRAS

Price Annas TWELVE.] [விலை அணா 12

PREFATORY NOTE

The success, which the series of Ripon English Readers has met with, has encouraged the Publishers to venture to bring out a similar series of Readers in Tamil. These Readers, eight in number, have been laid out on a comprehensive plan, and are designed to take the pupil from theFirst Standard up to and inclusive of the Fourth Form. The earlier Readers intended for the lower classes, necessitating as they do, elaborate illustrations and carefully prepared diagrammatic representations, are, at present, awaiting completion. The publishers are, therefore, bringing out, for the present, the last four Readers in the series, V to VIII, for the use of Forms I to IV. The prose lessons in these Readers are of varied interest and within the easy grasp of the student. The special features of this series, as will be apparent from a glance at the lessons, are lucidity and simplicity spiced occasionally with a touch of humour. Pedantry has been totally discarded. Special care has been bestowed upon the correct use of Tamil idioms, and by way of facilitating easy reading, *sandhis* have been avoided as far as possible. Many of the lessons are prepared specially to serve as standards of Modern Tamil Prose.

An innovation has been made in the grouping of poetical selections. They are not kept distinct but are interspersed among the prose lessons. Extracts from abstract moral treatises are very few. The selections will be found always simple, while the subject matter is such as to arouse the interest of the pupils. This feature will, it is hoped, create a love for Tamil poetry—a fertile field long neglected by them.

A new departure in this series is the choice selection of elaborately got-up illustrations printed on art paper. No pains have been spared to present to the pupils pictures true to life.

The Modern Printing Works,
Mount Road, Madras.
31st January, 1918.

THE PUBLISHERS.

TABLE OF CONTENTS

பொருள் அட்டவணை

குறிப்பு :—நட்சத்திரக் குறி இட்டிருப்பவை செய்யுள் பாடங்கள்.

பக்கம்

LIST OF ILLUSTRATIONS.

ரிப்பன்

தமிழ் வாசக புத்தகம்

III. பாரம்

கடவுள் வாழ்த்து


"அரும்பொனே, மணியே, என்அன்பே, என்அன்பான
அறிவே, என் அறிவில் ஊறும்
ஆனந்த வெள்ளமே," என்றென்று பாடினேன் ;
ஆடினேன் ; ஆடிநாடி
விரும்பியே கூவினேன் ; உலறினேன் ; அலறினேன் ;
மெய்ச்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி எனஎனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தே னியான்.
இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும், உனை
இடைவிட்டு நின்ற துண்டோ ?
என்றுநீ அன்றுநான் உன்அடிமை அல்லவோ ?
யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினும், கைவிடுதல் நீதியோ ?
தொண்டரொடு கூட்டு கண்டாய்.
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

1. லார்ட் ரிப்பன்

லார்ட் ரிப்பன் இந்தியாவில் வைஸ்ராயாக இருந்தது 1880ஆம் முதல் 1884ஆம் வரையில் நாலரை வருஷகாலம். அதற்குள் அவர் செய்த நன்மைகளும் சீர்திருத்தங்களும் அநேகம். முதலாவது உப்புவரியைக் குறைத்தார். வரி குறைந்தபோது உப்பு முன்னிலும் அதிகமாகச் செலவாகி, துரைத்தனத்துக்குரிய வருமானமும் அதிகரிக்கத் தொடங்கியது. இரண்டாவது இறக்குமதி செய்யப்படும் பஞ்சி சாமான்களுக்கும் வேறு பல சாமான்களுக்கும் கட்டிவந்த வரியை எடுத்துவிட்டார். இந்தக் காரியத்தை ஒழுங்காக முடிப்பதற்குள் அவர் வேலையைவிட்டுப் போகும்படி நேரிட்டதால், இந்த ஏற்பாட்டை அவருக்குப்பின் வந்தவர்கள் அவரிஷ்டப்படி நிறைவேற்ற வில்லை. அவருடைய காலத்தில் விவசாய இலாகா ஏற்பட்டு அநேக நன்மைகள் உண்டாயின. நீர்ப்பாய்ச்சலை விர்த்திசெய்வதற்குரிய ஏற்பாடுகள் உண்டாயின. பயிர்மூல ஜீவனம் செய்பவர்கள் தற்காலத்தில் அநுபவிக்கும் சில நன்மைகளுக்குக் காரணகர்த்தரா யிருந்தவர் அவரே.

இந்தியாவில் கல்வியின் நிலைமையை அறியும்பொருட்டு ஒரு கம்மிட்டியை ஏற்படுத்தி விசாரணைசெய்து, கடைசியாய்ப் பாலசிக்ஷையை அதிகரிக்கச் செய்யவேண்டும், கலாசாலைகளைச் சீர்திருத்தவேண்டும் என்கிற தீர்மானத்தைச் செய்து, அவைகளுக்கு ஆதாரமான அஸ்திவாரத்தைப்போட அடிகோலிவைத்தார். இந்த விஷயத்திலும் பெண்கல்வி விஷயத்திலும் ஜனங்களுக்கு ஊக்கத்தை உண்டாக்கினார்.

இங்க்லிஷ் துரைத்தனம் ஏற்பட்ட பிறகே இந்தியாவில் வர்த்தமான பத்திரிகைகள் ஏற்பட்டன. துரைத்தனத்தார் செய்யும் நன்மைகளைக் குடிகளுக்கு அறிவிக்கவும், குடிகளின்



LORD RIPON :—லார்ட் ரிப்பன்.

குறைகளை வெளிப்படுத்தித் துரைத்தனத்தாருடைய கவனத் தைக் கிரகிக்கவும், உபயோகமான பல விஷயங்களை விளக்க இந்தப் பத்திரிகைகள் சாதனமாயின. துரைத்தனத் தாருடைய செய்கைகளில் அதிகாரிகளால் உண்டாகும் அக் கிரமங்களை வெளியிடுவது வர்த்தமான பத்திரிகைகளுக்குச் சகசம். இங்ஙனம் வெளியிடுவதான இந்த ஸ்வாதீனம் சுதேச பாஷா பத்திரிகைகளுக்கு இருக்கக்கூடாதென்று லார்ட் லிட் டன் ஏற்படுத்திய சட்டத்தை லார்ட் ரிப்பன் ரத்துசெய்து விட்டார். அவர் இந்தியர்களுக்குச் செய்தவைகளில் மஹோப காரமான காரியங்களில் இது முக்கியமானது.

துரைத்தனத்தாருக்குப் பகுதிகட்டுவது தவிர, நாட்டு வாசத்திலுள்ள குடிகள் துரைத்தனத்தாருடைய உதவியை எந்தக் காரியத்துக்கும் எதிர்பார்ப்பதில்லை. ஒரு சிறிய குடி யரசுபோல் தங்கள் காரியங்களைத் தாங்களே நடத்திக்கொள் வது இந்தியாவில் காலங்கண்ட ஏற்பாடு. புதிதாக ஏற்பட்ட ராஜ்யங்களில் இந்த ஏற்பாடு க்ஷீணிப்பதாயிற்று. அந்தந்த அதிகாரத்துக்கு இன்னார் இன்னாரென்று குடிகள் ஒன்று கூடித் தேர்ந்துகொண்டு அவர்கள் மூலமாய் நியாயவிசாரணை முதலாக எல்லா ஸௌகரியங்களையும் நடத்திக்கொள்வார்கள். இங்க்லிஷ் துரைத்தனத்தில் துரைத்தன அதிகாரிகள் அததில் தலையிடத் தொடங்கவே, இந்த ஏற்பாடு தளர்ந்துபோயிற்று. நாட்டு வாசங்களிலும், பட்டண வாசங்களிலும், பழைய ஏற் பாட்டைப்போல், குடிகள் தங்கள் காரியங்களைத் தாங்களே அப்போதப்போது தேர்ந்துகொள்ளும் அதிகாரிகளைக் கொ ண்டு நடத்தலாம் என்கிற சட்டத்தை லார்ட் ரிப்பன் ஏற் படுத்தினர். ரிப்பன் இந்தியாவுக்குச் செய்த நன்மைகளில் முதன்மையானது இதுவே.

இந்தியாவை விட்டுப் போனபிறகும், இந்தியாவைப் பற் றிய விவகாரங்களில் அவர் கடைசிவரையில் இந்தியாவுக்கு

அநுகூலமே செய்துவந்தவர்களில் மிகவும் சிறந்தவர் 1907ஆம் ஜுலைமீ 7உ அவர் தேகவியோகமானபோது, அந்தச் செய்தியைக் கேட்டு இந்தியர்கள் எல்லோரும் வருத்தம் அடைந்தார்கள். அவர் செய்த நன்றியை மறவாமல் தென்னிந்திய ஜனங்கள் அவரைப்போல் விக்கிரகம் அமைத்துச் சென்னையில் மலைச்சாலையில் நிறுத்தியிருக்கிறார்கள்.

2. ராஜபக்தி

ஒவ்வொருவனும் ஜீவித்திருப்பதற்குப் பலருடைய உதவி வேண்டுமாகையால், ஒவ்வொருவனும் தனிமையாக வனவாசஞ்செய்வது முடியாத காரியம். ஆகையால் ஆதிகாலம் தொடங்கி ஜனங்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் கூட்டுறவாய் வாழ்ந்துவருகின்றனர். விவசாயம் நெசவு சிற்பம் தச்சுவேலை கொல்லுவேலை முதலிய பல தொழில்கள் உலகத்துக்கு முக்கியமாகையாலும், அந்தத் தொழில்களை ஒவ்வொருவனும் கற்றுக்கொள்வது அசாத்திய மாகையாலும், அந்தத் தொழிலாளிகள் உள்ள இடங்களில் வசிப்பது ஜனங்களுக்கு அதிக சௌகரியமாயிருக்கிறது.

கூட்டுறவாய் வாழ்கிற ஜனங்கள் ஒருவருக்கொருவர் உபத்திரவம் செய்துகொள்ளாமலும் ஒருவர் சொத்தை ஒருவர் அபகரிக்காமலும் பாதுகாப்பதற்கும், இன்னும் தேசோபகாரமான பல நன்மைகளைச் செய்வதற்கும், ஒவ்வொரு தேசத்திலும் ராஜாங்கம் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள், தங்கள் நன்மைக்காக அரசனை நியமித்துக்கொண்டிருப்பதால், அரசனுடைய கட்டளைக்குக் கீழ்ப்பட்டுநடப்பது அவசியமாகின்றது. ஒரு சிறிய குடும்பத்தில் தலைவன் சொற்படி நடவாத குடும்பஸ்தர்கள் துன்பம் அடைவார்களானால், ஒரு தேசத்தில் அனந்தங் குடும்பங்களுக்குத் தலைவனாகிய அரசன் சொற்படி நடவாதவர்கள் எப்படி க்ஷேமம் அடைவார்கள்?



KING GEORGE V & QUEEN MARY :—ராஜாவும்—ராணியும்.

கமாகிய உடலுக்கு, அரசன் தலையாகவும், பிரஜைகள் பல அவயவங்களாகவும் இருக்கின்றனர். ஆகவே அரசனில்லாத தேசம் தலையில்லாத சரீரத்துக்குச் சமானமாகும்.

சகல சாஸ்திரங்களும் புராணங்களும் சமய நூல்களும் அரசனை விசேஷமாகச் சொல்லுகின்றன. ராஜாவானவன் ரக்ஷக கர்த்தாவாகிய விஷ்ணுவின் அம்சமென்று ஹிந்துக்கள் கொள்ளுகிறார்கள். அரசன் ஜனங்களால் நியமிக்கப்பட்டவனாயினும், அவன் சகலருக்கும் மேலான புருஷ சிரேஷ்டனென்று சகல தேசங்களிலும் நன்குமதிக்கப்படுகிறான். ஆகவே அரசனுக்குக் குடிகள் தாழ்ந்திருக்கவேண்டியவர்களே. அரசனுக்குக் கீழ்ப்படியாத குடிகள் க்ஷேமத்தை அடையார்கள். "மாதாவுக்குச் சுகம் இருந்தால் கர்ப்பத்துக்கும் சுகம்" என்பதுபோல, அரசன் சுகமாயிருந்தால் மாத்திரமே ஜனங்களுக்கும் சுகமுண்டு. ஆதலால் அரசனுடைய க்ஷேமத்தை ஜனங்கள் பிரார்த்திக்க வேண்டும். அரசனுடைய சுகதுக்கங்களைத் தங்களுடைய சுக துக்கங்களாகப் பிரஜைகள் எண்ணி எப்போதும் ராஜபக்தி செய்யவேண்டும். அரசனும் நம்மைப்போல மனுஷனாதலால், அவனிடத்தில் சில குணதோஷங்கள் இருப்பதும் சகஜம். அதற்காக நாம் அரசனை அவமதிக்காமல், அவனுடைய குற்றத்தை நீக்கிக் குணத்தைமாத்திரம் கிரகித்துக்கொள்ள வேண்டும். அரசனுடைய செய்கைகளின் காரணம் நமக்குத் தெரியாத போது, அவன் நல்ல எண்ணத்துடனே செய்கிறதாக ஊகிக்க வேண்டுமே தவிர, விபரீதமாக எண்ணக்கூடாது. அரசன் ஓர் அக்கிரமத்தைச் செய்தாலும், ஒரு மனு மூலமாக அதைப் பரிகரிக்கவேண்டுமே யன்றி, ராஜத்துரோகத்தைக் கனவிலும் சிந்திக்கக்கூடாது. ராஜநிந்தையை நாமும் பேசக்கூடாது; பிறர் பேசவும் இடங்கொடுக்கக்கூடாது.

3. பொருள்

பொருளிலார்க் கின்பம் இல்லை ; புண்ணியம் இல்லை ; என்றும்
மருவுறு கீர்த்தி இல்லை ; மாந்தருட் பெருமை இல்லை ;
கருதிய கருமம் இல்லை ; கதிபெறு வழியும் இல்லை ;
பெருநிலத்திடை நடக்கும் பிணமெனப்படுவர் அன்றே.

நற்பொரு ளறத்தை, இன்ப நலத்தை, ஞானத்தை, மிக்க
சொற்பெறு புகழை, என்றும் துகளறு பெருமைதன்னைப்,
பற்பல ருறவை, நட்பைப், பகைதவிர்த்திடுந் திறத்தைப்,
பொற்புறு கதியையெல்லாம் பொருளலால் தருவதின்றே.

ஆதலால், தருமவாற்றல் அரும்பொருள் ஈட்டி, மேலும்
ஊதியங்கொண் டறஞ்செய்து, உரிய அப்பொருளைக் காத்தல்
நீதி, இவ்வாறு செய்யார் நிதியமும் தேய்ந்து, மற்றும்
ஓது மெய்ந்நலமும் இன்றி, உறுதுயர் அடைகுவாரே.

—பஞ்சதந்திரப்பாடல்.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழியவிடல் —திருக்குறள்.

4. தருமம்

உண்ண உணவும் உடுக்க உடையும் நிற்க நிழலும் இல்லாமல் வருந்துகிற எளிய ஜனங்கள் நம்மைச் சுற்றிலும் பலர் இருக்கின்றனர். அப்படியிருந்தும், செல்வமுள்ளவர்கள் தங்கள்மட்டிலே நல்ல வீடுகளில் வசித்தும், அறுசுவைப் பதார்த்தங்களோடு அன்னம் அருந்தியும், பட்டும் பருத்தியும் உடுத்தும், சும்மா இருப்பது தருமா ? ஒவ்வொருவரும் தம்முடைய வருமானத்தில் கால்பாகத்தைத் தருமத்தின்பொருட்டுச் செலவிடவேண்டு மென்று தருமசாஸ்திரம் விதித்திருக்கிறது. ஆகவே நம்முடைய வருமானத்தில் நம்மால் மீதம்பிடிக்கக் கூடிய ஏதோ ஒரு பாகத்தையாவது வேலைசெய்து பிழைக்கத் திராணியில்லாதவர்களுக்குச் செலவிடுவது நியாயமாகும்.

ஒன்றுஞ் செய்யமுடியாத குருடர் முடவர் முதலான வர்களுக்கு அன்னம் படைத்து வஸ்திரம் கொடுக்கவேண்டும். குடியிருக்க வீடில்லாதவர்க்கு வீடுகட்டிக்கொள்ள உதவி செய்யவேண்டும்: குடிசைகளாகிலும் கட்டிக்கொடுக்கவேண்டும். கையில் ஒன்றுமில்லாத கூலியாள்கள் வியாதியாய் வருந்தினால், தம்முடைய கௌரவத்தைக் கருதாமல், அவர்களைப் போய்ப் பார்த்து, வியாதி இலகுவாகி வேலைசெய்யத் திராணி வருகிறவரையில் அவர்களுடைய பத்தியபரிகாரங்களுக்கு வேண்டியதைக் குறைவில்லாமல் கொடுக்கவேண்டும். அநாதைச் சிறுவர்களுக்கு அன்னவஸ்திரங் கொடுத்து, அவர்கள் யோக்கியமாய் ஜீவனஞ்செய்வதற் கேற்ற கைத்தொழில்களோடு கல்வியும் கற்பிக்கவேண்டும். தானங்களில் வித்தியா தானம் சிறந்தது.

இப்படிப்பட்ட தானங்களைச் செல்வமுடையவர் தனித் தனியாகச் செய்வதனால் அதிக நன்மை உண்டாகாது. பல தனவந்தர்கள் ஒன்றுகூடி விசாரணைக் கருத்தர்களை ஏற்படுத்தி அந்தந்த ஊரில் எவ்வெவ்விதமான தருமம் அவசியமோ அவைகளை நடத்துவது சுலபம். இப்படிப்பட்ட தரும விசாரணைச் சபைகள் ஏற்கெனவே ஏற்பட்டிருந்தால், தனவான்கள் தங்கள்தங்கள்மட்டில் கூடுமானதை அந்தச் சபையாரிடத்தில் கொடுப்பது யுக்தமான காரியம்.

தருமம் செய்ய விருப்பமுள்ளவர்கள் முன்னே தங்கள் சுற்றத்தாரில் நொந்துபோனவர்களுக்கு உதவிசெய்து அவர்களைத் தலையெடுக்கும்படி செய்யவேண்டும். "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்". தாய்தந்தையர் கஷ்டப்படுவதைக் கவனிக்காமல் மற்றவர்களுக்குத் தருமம்செய்வது தகுதியல்ல. ஔவையார் "தந்தைதாய்ப் பேண்" என்று உபதேசிக்கிறார். வேலைசெய்து பிழைத்தற் குரிய சரீரபல முள்ளவர்களுக்குத் திரவிய சகாயம் செய்து அவர்களைச் சோம்பராக்குவது தரும

மல்ல. சுயநன்மையைக் கருதிச் செய்யும் உபகாரமும், ஒரு வர் செய்த உபகாரத்திற்குச் செய்யும் பிரதியுபகாரமும், பிர திஷ்டைக்காகச் செய்யும் உதவியும், தருமம் என்கிற கணக்கில் சேரமாட்டா. தருமம் செய்பவர் தம்மை இன்னாரென்றும் தாம் கொடுப்பது இவ்வளவென்றும் பலரறிய விளம்பரம் செய்வது அநாவசியம்.

தாம் தேடிக் குவிக்கும் பொருள்களாலும் செய்யும் தரு மங்களாலும் எவரும் உண்மையில் பெரியோராவதில்லை. கட வுள் எல்லாம் உடையவர்: மனிதராகிய நாம் அவருடைய உடைமைகள். அவர் பிதா, நாம் புத்திரர். ஆகையால், அவரு டைய பொருள்கள் எல்லாருக்கும் பொதுவானவைகளே. ஆகவே நாம் சகோதரபாவனையுடனே பரஸ்பர விசுவாசம் வைத்து ஒருவருக்கொருவர் துணைநிற்பது நம்முடைய கடமை என்கிற கொள்கையை யாவரும் மேற்கொண்டு நடப்பதே அழகு.

தான தருமம் செய்யாவிட்டால், நாம் தேடிய பொரு ளில் உண்டது போக மிஞ்சியிருப்பதால் யாதொரு நன்மையும் உண்டாகாது. தக்க காலத்தில் மிச்சமான பொருளை உத்தம மான தருமங்களில் செலவிட்டுத் தேடிக்கொள்ளுகிற புண்ணி யமே பரமார்த்தம்.

இல்லிழந்தார் கண்ணிழந்தார் ஈண்டிய செல்வம் இழந்தார்
நெல்லிழந்தார் ஆனிரை தாமிழந்தார்க்—கெல்லுழந்து
பண்ணியூண் ஈய்ந்தவர், பல்யானை மன்னராய்
எண்ணியூண் ஆர்வார் இயைந்து.

கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கான்
முடம்பட்டார் மூத்தார் மூப்பில்லார்க்—குடம்பட்
டுடையராய் இல்லுளூண் ஈத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

5. வரவுக்கு மிஞ்சின செலவு கூடாது

ஆன முதலில் அதிகம் செலவானால்,
மான மழிந்து, மதிகெட்டுப்,—போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

—நல்வழி.

ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை,
போகா றகலாக் கடை.

ஆற்றின் அளவறிந் தீக. அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

—திருக்குறள்.

6. இணக்கமறிந் திணங்கு

I

ஓரரசனுக்கு ஒரே குமாரன் பிறந்திருந்தான். அந்தக் குமாரனை அவ்வரசன் அதிக ஆசாபாசமாக வளர்த்திருந்தான். இளம்பிராயத்திலே தானே ராஜகுமாரன் பலவித்தைகளையுங் கற்றுப் பதினாறு பிராயம் ஆனவளவிலே பற்பல தேசங்களிலே பிரயாணஞ்செய்ய விரும்பினான். அரசனுடைய அநுமதி பெற்றுப் போய், பல தேசாந்தரங்களில் சஞ்சாரம் பண்ணி ஏழுவருஷகாலம் கழிந்தபிறகு திரும்பிவந்தான்.

வந்த பிறகு ஒருநாள் அவன் அங்கங்கே கண்ட கேட்ட விசேஷங்களைப்பற்றிப் பேசியிருந்தான். அப்போது அரசன் "அப்பா, ஏழுவருஷகாலமாக எத்தனையோ தேசாந்தரங்களையும் அபூர்வமான காட்சிகளையும் கண்டு வந்தாய். மனிதனுக்குப் பால்யத்தில் தேடத்தக்கவைகளில் நட்பைப்போல் அருமையானது வேறில்லை. நீ எத்தனை பேரோடு சிநேகம் பண்ணியிருக்கிறாய்? அவர்கள் எப்படிப்பட்டவர்கள்?" என்று கேட்டான். அதற்கு ராஜகுமாரன் "நான் அநேகரோடு சிநேகம் பண்ணியிருக்கிறேன். அவர்களில் மூவர் முக்கிய

மானவர்கள். அம்மூவரில் ஒருவனை நான் என்னுயிருக்கு மேலாக எண்ணியிருக்கிறேன் : ஒருவனை என்னுயிருக்குச் சமானமாக நினைத்திருக்கிறேன். மூன்றாவது சிநேகனை ஒப் பாரியாக மதித்திருக்கிறேன்" என்றுசொன்னான்.

அதைக் கேட்டபோது அரசன், "புடம்போட்டால் பொன்வேறு களிம்புவேறு. பரீக்ஷித்துப் பார்த்தால் சிநே கத்துக் குரியவர் இன்னார் என்பது தெளிவாகும். மூக்கடைத் திருக்கும்போது ஒரு சிட்டிகை மூக்குத்தூள் கொடுத்தவ ரெல்லாம் சிநேகரா? பொழுதுபோக்கு நிமித்தமாக வேடிக்கை யாய்ப் பேசியிருந்தவரெல்லாம் சிநேகரா? உன்னுடைய சிநே கிதர்கள் சிநேகபாத்திர மானவர்களா என்று ஆராய்ந்து பார்த் திருக்கிறாயா?" என்று கேட்டான். அதற்கு ராஜகுமாரன், "அப்பா, 'நீராழம் காணலாம் நெஞ்சாழம் காணமுடியாது' என்கிறார்களே. ஒருவருடைய இதாகிதங்களை அறிவது சுலப சாத்தியமா? எப்படியோ அம்மூவரிடத்தில் எனக்கு மனப் பிடிப்பு உண்டாயிற்று. அதனால் அவர்களைச் சிநேக பாத்திர மாகக் கொண்டேன்" என்று மறுவார்த்தை சொன்னான்.

அதன்மேல் அரசன் "முன் பின் பாராமல் கண்ணை மூடிக்கொண்டு சிநேகம் பண்ணிவிடக்கூடாது. நீ இப் பொழுது சிநேகர் என்றவர்களை ஒரு விதத்திலாயினும் பரீட் சித் தறியவேண்டும். நான் ஒருபாயம் சொல்லுகிறேன், கேள்—செத்த கன்றுக்குட்டி ஒன்றை ஒரு கோணிப்பையி லே போட்டுக் கட்டியெடுத்துக்கொண்டு மாலைவேளையில் இருட் டின பிறகு அம்மூவரில் ஒவ்வொருவனிடத்திலும் போய், 'அப்பா, நான் நம்முடைய ஊரையடுத்த காட்டிலே வேட்டை யாடும்போது, ஒரு மானின்மேல் இலக்குவைத்து அம்புவிட் டேன். ஒரு புதரின்மறைவில் விறகு ஒடித்திருந்த ஒருவன் அம்புபட்டு இறந்தான். இந்த ஸங்கதி வெளிவந்தால் நிஷ்பக்ஷ பாதியான அரசன், ஏககுமார னென்றும் பாராமல் என்னைத்

தலையை வாங்கிவிடுவனே, என்ன செய்வேன். இந்த ஆபத்தில் என்னை நீ காப்பாற்றவேண்டும்' என்றுகேள். இதனால் அவனவனுடைய மனோபாவத்தை உணர்ந்து சிநேகபாத்திரமானவனை அறிந்துகொள்ளலாம்'' என்றான்.

II

ராஜகுமாரன் அப்படியே போய், உயிரினும் உயர்வாக எண்ணியிருந்தவனிடத்தில் அரசன் கற்பித்தபடி நடித்தான். அந்தச் சிநேகிதன் "நீ அநியாயமாக ஒருவனைக் கொன்று விட்டபடியால், உன்னைச் சிரச்சேதஞ்செய்வது நியாயந்தானே. உன்னை ஒளிக்க நான் உடந்தையாயிருந்தால், நானும் அந்தப் பாவத்துக்கு உட்பட்டவனாவேன். நிஷ்காரணமாகக் கொலைப் பாதகத்தை நான் ஏன் தேடிக்கொள்ளவேண்டும். 'கொற்றவனறிதல் உற்றிடத்துதவி' என்று பார்த்தேன். உன்னோடு சிநேகம் பண்ணினதே குற்றமாக இருக்கிறது. சிநேகம் பண்ணின கடனுக்காக வேண்டுமானால் நான்கு முழமுள்ள இந்தக் கறுப்புக் கம்பளியைக் கொடுக்கிறேன். நெடுக முக்காடிட்டுக் கொண்டு போய்விடு'' என்றுசொன்னான்.

இதைக் கேட்டதும் ராஜகுமாரன் "இவனை உயிரிலும் மேலாக எண்ணினேனே. இவன் இவ்வளவு யோக்கியன் என்பது தெரியாமற்போயிற்றல்லவா" என நினைத்துக்கொண்டு, இரண்டாவது சிநேகனிடம் போனான். ராஜகுமாரனுடைய வார்த்தையை முழுவதுங் கேளா முன்னரே, "அட போபோ, இதென்ன இழவு. இந்த வம்பில் நான் அகப்பட்டுக்கொள்ள மாட்டேன். என்னைப் பைத்தியக்காரன் என்று நினைத்தாயோ? நீ எனக்குச் சிநேகன் என்று ஒரு முறை உண்டல்லவா? அதற்காக வேண்டுமானால் கொலைக்களத்தின் வரையில் உனக்கு ஆறுதல் தேறுதலான வார்த்தை சொல்லிக்கொண்டு

வருகிறேன், வா. என்னுலாவது வேறென்றும் இல்லை" என்று பரபரப்புடனே படித்துவிட்டான்.

உடனே ராஜகுமாரன் "கம்பளியைக் கொடுத்து முக்காடிட்டுக்கொண்டு போகச் சொன்னவனே மேலாக இருக்கிறான். இவன் கொலைக்களத்துக்கே கைகாட்டி மரமாக இருக்கிறனே. இவன்தானு உயிருக்கு ஒத்த தோழன்? இவ்விருவரும் இப்படியானுர்களே. இன்னெருவனையும் இப்பொழுதே பார்த்துவிடுவோம்" என நினைத்துக்கொண்டு, மூன்றாவது சிநேகனிடம் போய் அவன் பக்கத்தில் உட்கார்ந்தான்.

அந்த மூன்ருவது சிநேகிதன், "என்ன தம்பி, முகம் வாட்டமாய் இருக்கிருயே. சங்கதி என்ன? சீக்கிரம் சொல்லு. இத்தனை காலமாக நீ இப்படி எப்பொழுதும் ஏக்கமுற்ற முகத்துடன் இருந்ததில்லையே. என்னதான் நடந்தது? என்னிடத்தில் சொல்வதற்கு என்ன தடை? சிநேகபாத்தியத்தில் சொல்லிக்கொள்ளாத காரியம் ஏதாகிலும் உண்டா? நீ இப்படி யிருக்கிறது எனக்கு அதிக வேதனையாக இருக்கிறது" என்றான். இளவரசன் "நான் செய்த அக்கிரமத்தை எடுத்துரைக்க எனக்கு வாய் வரவில்லை, நா எழவில்லை. ஐயோ, என்ன வெட்கக்கேடு" என்று பின்னும் தன்னை நொந்துகொண்டான். சிநேகிதன் "அட சே! போ. என்ன முழுகிப்போய்விட்டது. நான் இருக்கிறேன், பயப்படாதே. சொல்லு சொல்லு" என்று அவசரப்படுத்தினுன். அப்போது அரசன்மகன் "அண்ணு, கிரஹசாரம்போதாமல் இன்று நான் ஒருவனைத் தற்செயலாய்க் கொன்றுவிட்டேன். என் தகப்பனுடைய குணம் உனக்குத் தெரியுமே. பிள்ளையென்றுகூடப் பார்க்கமாட்டானே. என்ன செய்வேன்" என்று கண்ணீர் விட்டான். சிநேகன் "போ போ பைத்தியக்காரா. இதற்குத்தானு இப்படிப் பயந்துவிட்டாய்? பயப்படாதே. என் உயிர் போனுல் பார்ப்போம். அதற்கு முன் உன் தலையின்மயிரில் ஒன்றுதானும் போகுமா? உன்

தலையை வாங்கிவிடும்படி அரசாக்கினை உண்டானால், என் தலையைக் கொடுத்துவிடமாட்டேனா? அப்படிக் கூடாதென்று அரசன் மறுத்தால், உன்னோடுகூட நான் உடன்கட்டை ஏறிவிடுவேன். இப்படிப்பட்ட ஆபத்திலே உதவாத சன்மம் இருந்தென்ன, போயென்ன? இதற்குத்தானா இப்படி நடுங்கிப் போனாய்? எதோ அந்தக் கோணிப்பையைக் காட்டு" என்று சொல்லி, கோணிப்பையைக் கொண்டுபோய்க் குப்பையின் கீழே ஆழமாகப் புதைத்துவிட்டான். பிறகு சிறிதுநேரம் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்து, தெருகடக்க வழியும் விட்டு வீட்டுக்குத்திரும்பினான்.

அரண்மனைக்குத் திரும்பும் ராஜகுமாரன் "அடடா! ஒப்பாரியாக நினைத்திருந்த சிநேகனல்லவோ உண்மையான சிநேகனாக இருக்கிறான். 'ஆபத்திலே அறியலாம் அருமை சிநேகிதனை' என்ற பழமொழிப்படி இவனே அருமை சிநேகிதனாயிருக்கிறான். '(அருமற்றதே தாரம்) ஊரில் ஒருவனே தோழன்' என்பதன் கருத்து இப்பொழுதுதான் விளங்குகின்றது. இனி இவனே எனக்குத் தோழன். அவன் உடலும் நான் உயிருமாகக் காலங்கழிப்பேன்" என்றிங்ஙனம் நினைத்து, தந்தையிடத்தில் நடந்த யாவற்றையும் சொல்லி இன்புற்று வாழ்ந்திருந்தான்.

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை, கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

7. போசனக்கிரமம்

உண்ணுங்கால் நோக்கும் திசைகிழக்குக்கண் அமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ யாண்டும்
பிறிதுயாதும் நோக்கான் உரையான் தொழுதுகொண்
டுண்க உகாஅமை நன்கு.

விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணூரே என்றும்
ஒழுக்கம் பிழையாதவர்.

கிடந்துண்ணார், நின்றுண்ணார், வெள்ளிடையும் உண்ணார்,
சிறந்து மிகவுண்ணார் ; கட்டின்மேல் உண்ணார் ;
இறந்தொன்றும் தின்னற்க நின்று.

முன்துவ்வார், முன்னெழார், மிக்குறார், ஊனின்கண்
என்பெறினும் ஆற்ற வலமிரார்; தம்மிற்
பெரியார் தம்பா விருந்தக்கால்.

கைப்பனவெல்லாம் கடை, தலை தித்திப்ப,
மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண்.

இழியாமை நன்குமிழ்ந் தெச்சில்அற வாய்
அடியோடு நன்கு துடைத்து, வடிவுடைத்தா
முக்கால் குடித்துத் துடைத்து முகத்துறுப்
பொத்த வகையால் விரலுறுத்தி வாய்பூசல்
மிக்கவர் கண்ட நெறி.

—ஆசாரக்கோவை.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணில்
நோயள வின்றிப் படும்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்

அற்றால் அளவறிந் துண்க. அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

—திருக்குறள்.

8. ஒரு தோட்டம்

இப்பொழுது இளவேனில் என்கிற வசந்தகாலம் வந்து விட்டது. காற்று அதிக ஆரோக்கியமாக வீசுகிறது. அதோ தெரிகிற அந்தத் தோட்டத்துக்குப் போகலாம் வாருங்கள். தோட்டத்தின் சமீபத்தில் போகப்போக, புஷ்பவாசனை எவ் விதம் பரிமளிக்கிறது பார்த்தீர்களா. கிளிகள் கொஞ்சுவதும் குயில்கள் பாவடுதும் வண்டுகள் ரீங்காரம் செய்வதும் கர்ணாமிர் தமாய் இருக்கிறது. இதோ இந்த மாமரத்தைப் பாருங்கள்: பச்சைக் கம்பளத்தால் கூடாரம் அடித்ததுபோல் தழைந்து கவிந்திருக்கிறது. சடை விரித்திருக்கும் சந்நியாசிகளைப் போல் காணப்படுகிற அந்தக் கூந்தல்பனையைப் பாருங்கள். அதோ ஒரு வாழைமரம் குலைதள்ளியிருக்கிறது. அதைச் சுற்றிலும் கீழ்க்கன்றுகள் வளர்ந்திருக்கின்றன. குலைதள்ளியிருக்கிற வாழையானது கற்றுத்தெளிந்த பெரியோரைப் போல் தலை வணங்கி நிற்கிறது; கீழ்க்கன்றுகளோ, சொன்னாலுங் கேளா மல் சுயபுத்தியு மில்லாமல் கர்வமுள்ள பாலியர் போல் தலை நிமிர்ந் திருக்கின்றன.

வேலியில் வளர்ந்திருக்கிற ஒதியமரத்தைக் கண்டீர் களா? அது எவ்வளவு பெருத்திருக்கிறது. ஆயினும் அத னால் என்ன பிரயோசனம். ஒதி பெருத்துத் தூணாகப் போகிறதா? மற்ற மரங்களெல்லாம் தழைத்துப் பூத்திருக்கிற இந்தக் காலத்தில் இந்த ஒதியமரமானது, சுற்றிலும் பச்சென் றிருக்கிற இனத்தாரைக் கண்டு பொறாமை யடைந்து பின் னும் தரித்திரத்தால் அழிந்துபோகிற மனிதரைப்போல், இலை முதலிய ஒன்றுமில்லாமல் கட்டைத்தடியாக நிற்கிறது.

அதன் பக்கத்தில் உள்ள பனைமரம் பெரிதும் சிறிது மான குலைகளோடு சலசல வென்று சத்தம்போட்டுக்கொண் டிருக்கின்றது. இந்த மரத்தை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே

என்று சொல்லி இகழலாகாது. இதன் ஓலையைக் கொண்டு கூரை வேய்ந்தால், ஒருவரல்ல நூறுபெயரானாலும் தங்கியிருக்க நிழல் உண்டாகாதா? பலவிதமான பயன்களைத் தருதலால் பழைய தமிழ்வித்துவான்கள் இந்த மரத்தைப் பூலோக கற்பதரு என்று சிறப்பாகப் புகழ்ந்தார்கள். பனங்கொட்டையை மண்ணின் கீழே போட்டுவிட்டால், ஒரு கரண்டியளவு தண்ணீரும் விடாமலே, அது, எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை அநுபவித்துக்கொண்டு சிறிது சிறிதாய் விர்த்தியாகிப் பெருமையடைபவர்போல், கொஞ்சங் கொஞ்சமாய் ஓங்கி வளர்ந்து, பிரதியுபகாரம் வேண்டாத வள்ளலைப்போல் நல்ல பலனைக் கொடுக்கின்றது.

இதோ கமுக மரம் இருக்கிறது. அதிக கஷ்டமெடுத்துக்கொண்டு தண்ணீர் பாய்ச்சினால்தான் இது பலிதமாகும். இந்தக் காரணம்பற்றியே "கை காய்த்தால் கமுகு காய்க்கும்" என்று ஒருபழமொழியும் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தென்ன மரங்களைப் பார்க்கும்போது

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருமோ எனவேண்டா.—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

என்கிற ஔவைப்பாட்டு நினைவுக்கு வருகின்றது. வெயிலில் வழிநடந்து இளைப்படைந்தவரே, வாரும்: என் இளநீரை உண்டு இளைப்புத்தீரும் என்று சொல்லி அழைப்பதுபோல ஒவ்வொரு மரமும் தலையில் இளநீர்க் குலைகளைச் சுமந்து நிற்கிறது. உவர் நீரைப் பாய்ச்சினால் மதுரமான இளநீரைக் கொடுப்பது, இந்த மரத்தின் விசேஷ குணம். தன்னைக் காப்

பாற்றினவனை இந்த மரம் காப்பாற்றும் என்கிற உறுதியை, "அண்ணன் பிள்ளையை நம்புவதைவிடத் தென்னம் பிள்ளையை நம்பலாம்" என்ற முதுமொழி விளக்குகின்றது.

இதோ குளத்தினருகில் வந்துவிட்டோம். குளக்கரையில் சற்றுநேரம் உட்காரலாம். குளத்தின் ஜலம் மாசுமருளில்லாமல் கண்ணாடியைப்போல் தெளிவாக இருக்கிறது. இங்கே மணற்பாங்காயிருப்பதால் இந்தக் குளம் வேஷ்டி வெளுப்பதற்கும் நீராடுவதற்கும் யோக்கியமாக இருக்கிறது. அதோ ஆள்கள் ஏற்றமிறைக்கிறார்கள். ஏற்றத் துலாவின் மேல் ஏறியிருக்கிற ஆள்கள் அந்தரத்தில் நிர்ப்பயமாயிருப்பது எவ்வளவு அதிசயம். கீழே சாலைப் பிடித்து இறைப்பவன் ஏதோ பாட்டுப்பாடி இறைக்கிறான். ஒரு முறை ஏற்றப்பாட்டைக் கேட்டபோது கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் "ஏற்றப் பாட்டுக்கு எதிர்ப்பாட்டில்லை" என்றாராம். அஸ்தமானகாலம் ஆகிவிட்டது. பொழுதோடு வீடுபோய்ச் சேரலாம்.

9. வித்தியாமமதை கூடாது

முற்றும் உணர்ந்தவர் இல்லை ; முழுவதூஉம்
கற்றனமென்று களியற்க.—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங்குழாய் !
கொல்லுலைக் கூடத்தினால்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க.—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

—நீதிநெறிவிளக்கம்.

கற்றது கைமண்ணளவு, கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள்.—மெத்த
வெறும் பந்தயம் கூறவேண்டாம். புலவீர் !
எறும்பும் தன்கையால் எண்சாண். —ஔவையார்.

10. சகசண்டியான ஒருமனைவி

சோழநாட்டில் ஒரு வேளாளன் ஒரு நாள் தன் மனைவியிடத்தில் "இன்றைக்குப் பெரியவர் ஒருவருக்கு அமுது படைக்கவேண்டும்" என்று சொன்னான்.

மனைவி "இது நல்ல வேடிக்கை. வீடு வெறுவீடாயிருக்கிறது. வீட்டிருப்பு அறியாத ஆண்பிள்ளையைக் குறித்து என்ன சொல்லுகிறது. அஞ்சு மூன்றும் அடுக்காயிருந்தாலல்லவா அறியாத பெண்ணும் கறியாக்குவாள். அமுது படைப்பதானால் அரிசி வேண்டுமே; பதார்த்தம் வேண்டுமே. வெறுங்கையைக் கொண்டு முழம்போடுவது எப்படி?" என்று கூவினாள்.

அவள் சொற்படி கணவன் அரிசி முதலானவைகளைச் சேகரித்துக் கொடுத்தான். அமுதுபடைப்பது மனைவிக்கு சம்மத மில்லாமையால், பின்னும் அவள், "அரிசி ஆழாக்கானாலும் அடுப்பங்கட்டி மூன்று வேண்டும். பானை சட்டி முதலிய ஏன மில்லாமல் சமையல் எவ்விதம் ஆய்விடும்?" என்று சொன்னாள்.

கணவன் அவைகளையும் தருவித்துக் கொடுத்து "சீக்கிரத்தில் சமை" என்ன, அவள் "நீ போ, உனக்கு என்ன? எனக்குத் தள்ளாது: என்னாலே முடியாது. தலை நோகிறது" என்று போக்குச் சொன்னாள்.

கணவன் "அடீ! செக்குலக்கைபோல் இருக்கிறாயே. உனக்கு வந்த கேடு என்ன?" என்று கேட்க, அவள் "எருது நோய் காக்கைக்குத் தெரியுமா? தலைநோயும் காய்ச்சலும் தனக்கு வந்தாலல்லவோ தெரியும்" என்று சொல்லிப் பாயை விரித்து நெடுமுக்காடிட்டுப் படுத்துக்கொண்டாள்.

கணவன் இந்தச் சகசண்டியை என்னசெய்வது என்கிற கோபத்தினால் மெல்லென ஓரடி அடித்தான். உடனே அவள்

தெருவில் வந்து “ ஆ ஆ அட சண்டாளா ! என்னை அடித்துக் கொல்லவா ஏற்பட்டாய் ? சும்மா கொல்லு. இனி நான் உயிரோடு இருக்கிறதில்லை. ஊமத்தங்காயைத் தின்று பழிபோடுகிறேன்” என்று பெருங்கூச்சலிட்டுக் கணவனைத் தூற்றினாள்.

இந்தச் செய்தி மணவாள நாராயண சதகத்தில் அடியில் வரும் பாடலில் உதகரித்திருக்கின்றது.

ஐயருக் கமுதுபடை யென்று வந்தாய் நீயும்
ஆண்பிள்ளை யென்றெண்ணியோ
அரிசியெங்கே பானை சட்டியெங்கே என்பள்.
அவள் சொன்ன வகைக ளெல்லாம்
வையவே கொண்டுவந்தாலும், சமைக்கப்படாது
தலைநோகு தென்று
பாயில் கிடப்பாள். சினமாய் ஒன்று பேசினல்
பாருனக் கேற்ற புத்தி
செய்யவல்லே னென்பள். சற்றடித்தால் நஞ்சு
தின்கிறேன் கூகூ வெனத்
தெருவீடு தோறும் முறையிடு பெண்டிர் உண்டெனில்
தீயநமன் வேறு முண்டோ ?
வையகம் புகழ்சோலை மலையலங்காரனே
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கை மணவாளனே
வரத வேங்கட ராயனே.

11. கற்பு

மூக்கணர்தண்டலை நாட்டில் கற்புடையோர் பெருமை
மொழிந்திடில், ஒருத்தி
ஒக்குமெரி குளிரவைத்தாள் ; ஒருத்தி வில்வேடனை
யெரித்தாள் ; ஒருத்திமூவர்
பக்கமுற அமுதளித்தாள் ; ஒருத்தி எழு
பொறிநடத்தும் பான்மைபோலக்
“ கொக்கெனவே இருந்தனையோ ? கொங்கணவா,”
என்றொருத்தி கூறினளே.

—பழமொழி விளக்கம்

12. பொங்கல் பண்டிகை

தைமாதத்தின் முதல் தேதி உத்தராயணத்தின் முதஞள். உத்தரம் என்பது வடக்கு, அயனம் என்பது சஞ்சாரம். உத்தராயணம் என்பது சூரியன் வடபாதி கோளத்தில் சஞ்சாரம் செய்யும் காலம்: அது தைமுதல் ஆனிவரையில் ஆறுமாத காலம். தைமாதம் முதல் தேதியில்தான் சூரியன் வடபுறம் திரும்புகிறுன். இத்தேசத்தில், இதற்கு முந்திய தக்ஷிணுயன காலமெல்லாம், அதாவது ஆடிமுதல் மார்கழிவரையில், விளேவு கால மாகும். தைமாதமே தானியங்களே அறுத்துச் சேர்க்கிற கால மாகையால், சூரியன் முகாந்தரமாய் விளேவுக்கு வேண்டிய மழையைப் பெய்வித்து க்ஷேமத்தை உண்டாக்கின கடவுளுக்கு உபசாரமாக, முதலில் அறுத்த தானியத்தின் அரிசியைப் பாலும் வெல்லமும் சேர்த்துச் சமைத்துப் பழமுதலிய சிறப்போடு சூரியனுக்கு அல்லது சூரியமண்டலத்தில் வீற்றிருக்கிற தேவனுக்குப் படைத்து, தைமாதத்தின் முதஞள் பந்துக்கள் முதலானவர்களோடு பெருநாள் கொண்டாடுவது இத்தேசத்தில் வழக்கம்.

அரிசியைப் பொங்கலிடுவதனுல் இந்தப் பண்டிகைக்குப் பொங்கல் என்று பெயர் வந்தது. உழவு முதலானதற்கெல்லாம் இந்நாட்டாருக்கு மாடுகளே விசேஷ உதவியானது பற்றி, குடியானவர்கள் அந்த மாடுகள் விருத்தியடைய வேண்டும் என்கிற கோரிக்கையினுல், தைமாதம் இரண்டாந் தேதியில், அதாவது பொங்கலின் மறுநாளில், பகல்மேல் பொங்கலிட்டுக் கடவுளுக்குப் படைத்துத் துதித்து, மாடுகளே அலங்கரித்துக் கீத வாத்தியங்களோடு ஊர்கோலமாக வருவார்கள். பயிர் வளப்பத்தின் நன்றிக்காகப் பொங்கலிடும் முதஞளேப் பெரும்பொங்க லென்றும், மாடுகளின் வளத்துக்காகப் பொங்கலிடும் மறுநாளே மாட்டுப்பொங்க லென்றும் சொல்வார்கள்.

யூரப்பிலும் இவ்விதமான பண்டிகை ஒன்றுண்டு. அதற்கு அறுவடைப் பண்டிகை யென்று பெயர் வழங்கும்.

மாட்டுப்பொங்கலின் இரவில், செல்வமுள்ளவர்கள் மருமகன் முதலானவர்க்கும் புத்திர பௌத்திரர்களுக்கும் சேவகர்களுக்கும் கோடிவஸ்திரம் கொடுப்பார்கள். குடியானவர்களும், பண்ணையாள்களுக்கும், புரோகிதன் முதலாகத் தொழிலாளிகள் ஏனையவர்களுக்கும், தங்கள் தங்கள் சக்திக்கேற்றபடி, கோடிவஸ்திரம் பணம் முதலானவைகளை வெற்றிலைப்பாக்குடனே வைத்துக் கொடுப்பார்கள். பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் வெற்றிலைப் பாக்கில் தக்ஷணைவைத்துத் தங்கள் உபாத்தியாயருடைய காலில் விழுந்து ஆசீர்வாதம் பெறுவார்கள். ஒவ்வொருவரும் வயதிலும் அறிவிலும் தம்மிலும் பெரியோருக்கு நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் பெறுவார்கள். மார்கழிமாதத்தில் விடியற்காலத்தில் பக்தியான பாடல்கள் பாடியும் சேமகலங் கொட்டியும் சங்கூதியும் ஊராரையெல்லாம் எழுப்பிவந்த பண்டாரங்களுக்கும் தாசரிகளுக்கும் ஒவ்வொரு வீட்டினரும் காலணா அரையணாவாகக் கொடுப்பார்கள். பொங்கல் வந்தால் ஏழைகளுக்கெல்லாம் ஒரு கந்தாயம்.

13. சென்னைச் சந்தையில் பற்றிய தீ

I

தாதுவருஷத்திலும் அதற்குமுன்னும் சென்னை ராஜ்யத்தில் மழையில்லாமல் ஜனங்கள் பட்டபாடு இப்படிப்பட்டதென்று இப்போது அநேகர் அறியார். அந்த க்ஷாமத்தின் கொடுமை அடங்கின பிறகு, சென்னையில் உள்ள சில இங்க்லிஷ் கனவான்களும் சில சுதேச தனவான்களும் சில பெரிய உத்தியோகஸ்தர்களும்கூடி ஆலோசித்து, டிஸெம்பர் மாத முடிவில், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துபிறந்த பெருநாளைக் கொண்

டாடுகிற காலத்தில், துரைத்தன உத்தியோக சாலைகளிலும், பெரிய வர்த்தகசாலைகளிலும் கல்லூரிகளிலும், விடுமுறைக் காலமாகையால், அப்போது ஜனங்களின் விநோதத்தின் பொருட்டாக ராணிதோட்டத்தில் ஒரு சந்தை கூட்டுவதென்று ஏற்பாடு செய்தார்கள். உரிய ஏற்பாடுகளெல்லாம் அவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு கம்மிட்டியால் நடைபெற்றுவந்தன.

தோட்டத்தின் வடபாதியில் விசேஷமான வேடிக்கை ஒன்றும் இராது. தென்பாதிதான் சந்தைகூடுகிற இடம். வாத்திய மேடையாகிய பான்ட் ஸ்ட்டான்டைச் சூழ்ந்துள்ள பாதையைச் சுற்றிலும் வட்டமாகப் பந்தலிட்டு மூங்கில்களாலும் ஓலைகளாலும் அடைப்படைத்திருக்கும். அங்கே சந்தைக்கடை வைப்பவர்களுடைய வேண்டுகோளுக் கேற்றபடி பந்தல் தனித்தனி விடுதிகளாகப் பிரித்திருக்கும். சிலர் மிட்டாய் விற்பார்கள். சிலர் ரொட்டி பிஸ்கட் பன் கேக் ஸோடா லெமொனேட் வெற்றிலைப்பாக்கு முதலியவைகளை விற்பார்கள். சிலர் அருமையான சீமை ஸாமான்களையும் நாட்டு ஸாமான்களையும் விற்பார்கள். சிலர் ஸாமான்களுக்கு எண்கள் இட்டு, அவைகளுக்கேற்றபடி சீட்டுகள் போட்டு, சீட்டுகளை ஒரு பெட்டியிலிட்டு, "உங்கள் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்" "உங்கள் அதிஷ்டத்தைப் பாருங்கள்" என்று கூவியிருப்பார்கள். விருப்பமுள்ளவர் பணங்கொடுத்து அந்தப் பெட்டியில் கையைவிட்டு ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தால், கடைக்காரர் அந்தச் சீட்டில் கண்டிருக்கிற எண்ணுக்குரிய ஸாமானை எடுத்துக் கொடுப்பர். இப்படிப்பட்ட லாட்டெரி கடைகள் அநேகம் இருக்கும். ஒரு விடுதி, கம்மிட்டியார் கூடுகிற இடம். பொழுதுபோனதும் வாத்திய மேடையைச் சுற்றி ஏற்றியிருக்கிற மின்சார விளக்குகள், பல சந்திரர்கள் ஏககாலத்தில் ஸமீபத்திலிருந்து பிரகாசிப்பதுபோல் அதிக ஆனந்தத்தைக் கொடுக்கும். அப்போது இடையிடையில்

வாத்யகோஷம் உண்டாகும். உள்ளே பிரவேசிப்பதற்கு நாலுபக்கத்திலும் வழி விட்டிருக்கும். உள்ளே போவோர் ஒவ்வொருவரும் நாலணு கொடுக்கவேண்டும். ஜனங்கள் அதிக்ரமித்து நடவாதபடி, அங்கே பொலீஸ் ஜவான்கள் சிலர் நின்றிருப்பர்.

விளைவான இந்த அடைப்பிடத்தில் சந்தைக்கடைகளில் ஸாமான்கள் வாங்க வருவோர் மிகச் சிலரே. உடைகளின் பாங்கையும் அவைகளைத் தரிக்கும் பாங்கையும் கண்டறியவருகின்ற பாலர் சிலர். ஆபரணங்களின் விதங்களைக் கண்டறிந்து அவைகளில் விசேஷமான விதமாய் ஆபரணம் செய்தணிய விரும்பி வருகின்ற ஸ்த்ரீகள் அநேகர். நெடுநாளாய்க் காணப்பெறுதவர்களைக் கண்டுகளிக்கவருவார் சிலர். பெரிய உத்தியோகஸ்தர்களைக் கண்டு ஸலாம்போடும்படி வருவார் சிலர். ஒரு நோக்கமும் இன்றி உல்லாசமாய் உலாவும்படி வருவார் பலர். வயிறு பசித்தாலும் பொருட்டு செய்யாமல், சற்றுநேரம் கழித்துப் போகலாமென்றே ஆலசியம் பண்ணிக்கொண்டு அவ்விடத்தில் சுற்றிவருவார் தொகை மணிக்குமணி அதிகரித்திருக்கும். காஷாயம் தரித்தவர்களும் சீக்கிரம் அவ்விடத்தை விட்டு நீங்கார்கள்.

இங்ஙனம் சந்தை கூடுகின்ற காலத்தில், சமீபத்தில் வெளியிடங்களில் கூத்துக்கொட்டாய்களும், நாடகசாலைகளும், மல்லர் தங்கள் திறத்தைக் காட்டும் இடங்களும், அங்கங்கே வகுத்திருக்கும். அப்ராக்ருதமான சிருஷ்டி விசேஷங்களில் சிலவற்றைச் சேகரித்துக் காட்டுகிற பந்தல்களும் சில வகுத்திருக்கும்.

கீழ்பாதியில் சிலம்பம்பயின்றவர்களுக்குப் பரிசளிக்கும்படி இப்போது கட்டியிருக்கும் ஆத்லெடிக் அஸோஸியேஷன் என்கிற மண்டபமும் அடைப்பும் அப்போதில்லை. அங்கே சுற்றிலும் கால்கள் நாட்டி வடங்கள் கட்டியிருக்கும். உள்ளே

குதிரைப் பந்தயம் ரேக்லா பந்தயம் ஒட்டப்பந்தயம் முதலானவை நடக்கும். கையில் தண்ணீர்க்குடங்களை வைத்துக் கொண்டு ஓடுகின்றவர்களில் விழுவாரைக் கண்டும், கழுத்து வரையில் கோணிப்பைகளைக் கட்டிக்கொண்டு தத்தித் தொத்திக் குதித்தோடுகின்றவர்களில் தப்பிவிழுவாரைக் கண்டும் ஜனங்கள் கொல்லென்று சிரிப்பார்கள். அவ்விடத்தில் உள்ளுற ஜனங்கள் நெருங்காதபடி ஸார்ஜெண்டுகள் குதிரைகளை வளையவளையவிட்டு ஜனங்களை வெருட்டியிருப்பார்கள்! ஜனங்களைச் சில இடங்களில் பொலீஸ் ஜவான்கள் அதட்டியிருப்பார்கள். சில இடங்களில் அந்த ஜவான்களை ஸமயம்பார்த்து ஜனங்கள் நெருக்கித் தள்ளிவிடுவார்கள். உயரமில்லாதவர்களில் சிலர் வண்டிகளின்மேலிருந்து வேடிக்கை பார்ப்பார்கள்; சிலர் மரக்கிளைகளில் தொத்தியிருந்து வேடிக்கை பார்ப்பார்கள்.

குஜிலியில் அந்த ஸமயம் வேலையில்லாமையால், இந்த ஜனத்திரளில் தங்கள் வேலையின் திறத்தைக் காட்டும் பெரிய மனிதர்கள் சிலருக்கு அந்தக் காலம் நல்ல கந்தாயம். ஜேபியிலுள்ள நோட்டுகளும் மடியிலுள்ள காசுகளும் மேலேயுள்ள அங்கவஸ்திரங்களும் ஸ்த்ரீகளின் கண்டமாலைகளும் இவர்களைக் கண்டால் மாயமாய்ப் போய்விடும். கோழி திருடிக் கூடவிருந்து குலாவுவதுபோல், இவர்கள் மிகவும் பரிதபித்து "படவாவைப் பிடி பிடி, அதோ ஓடுகிறான் கழுதை, அடி அடி" என்று கூவிப் போக்குக் காட்டுவார்கள்.

நாலைந்து நாள்கள் வரையில் இந்தப்பிரகாரம் சிங்காரத் தோட்டம் திமில குமிலமாக இருக்கும். கடைசி நாள் இரவில் பத்துமணிக்குமேல் பாணவேடிக்கை நடத்துவார்கள். அதில் அபூர்வமான சில அதிசயங்களைக் கண்டு ஜனங்கள் ஆனந்தமடைவார்கள். அதனோடு சந்தை முடிவுபெறும்.

II

1886-ம் வருஷத்து டிஸெம்பர் மாதத்துக்குச் சரியான பார்த்திப வருஷத்து மார்கழிமாஸத்தில் இவ்விதம் சந்தை கூடி இரண்டு மூன்று நாள்கள் வரையில் எல்லா வேடிக்கைகளும் வழக்கம்போல் ஒழுங்காக நடந்துவந்தன. நாலாநாள் மாலை ஏழுமணிக்கு, சந்தைக் கடைகளின் அடைப்பிலிருந்து ஓவென்ற அழுகுரல் புறப்பட்டது. சுற்றடைப்பில் ஐந்தாறிடங்களில் ஏககாலத்தில் நெருப்புப்பற்றி எரிதலாயிற்று. நிமிஷநேரத்தில் மேலுங் கீழும் இடமும் வலமுமாக நெருப்புப் பலபக்கங்களிலும் பரவத் தொடங்கியது.

வாயில்களின் ஸமீபத்தில் இருந்தவர்களில் எச்சரிக்கையாக ஓடிப்போனவர்கள் பிழைத்தார்கள். தீப்பற்றிவராத இடங்களில் மூங்கில்களை உடைத்தும் ஓலைகளைப் பிய்த்தும் அடைப்புகளில் வழிசெய்துகொண்டு ஓடின பாலர்களும் பலசாலிகளும் சிலர் பிழைத்தார்கள். நிமிஷநேரத்தில் வாயில்களினிடத்தில் ஜனங்கள் முன்பின் பாராமல் நெருங்கியதால், நசுங்குண்டிறந்தவர் சிலர்; மிதியுண்டிறந்தவர் சிலர். அடைப்புத் தட்டிகளை உடைத்துக்கொண்டு போனவர்களில் ஓலைகளாலும் மூங்கில்களாலும் கீறுண்டு இரத்தம் வடிந்துகொண்டு போயினர் சிலர். ஜனநெருக்கத்தால் கையொடிந்தும் காலொடிந்தும் "அப்பாடா" "அம்மாடி" என்று ஓலமிட்டும் நொண்டியும் போயினர் சிலர். சில நேரத்தில் அங்கும் தீ நெருங்கிவிட்டது: வாயில்களிடத்தும் தீ நெருங்கிவிட்டது. "ஐயோ, குழந்தை எங்கே" என்பாரும், "அப்பா எங்கே" என்பாரும், "அம்மா எங்கே" என்பாரும். "அத்தான் எங்கே" என்பாரும், "ஐயோ தீ நெருங்கிவிட்டதே. என்ன செய்யலாம்" என்பாரும், "வெப்பம் பொறுக்க முடியவில்லையே" என்பாருமாய் உள்ளே அகப்பட்டவர்கள் தத்தளித்தார்கள். பத்து

நிமிஷ நேரத்தில் பந்தல்களெல்லாம் தரையோடு தரையாய் விட்டன. தலைமயிரும் மீசையும் தாடியும் பற்றியெரிந்து முகங்கரிந் தோடினார் சிலர். உடைகளையெல்லாம் கழற்றியெறிந்து நிர்வாணமாய் ஓடித் தப்பினார் சிலர். மற்றவர்களில் ஸ்மரணையில்லாமல் குற்றுயிராய்க் கிடைத்தவர் சிலரே. மாண்டவர்கள் பல நூறு என்று கணக்கு ஏற்பட்டது.

சென்னை, எந்தத் தெருவிலே பார்த்தாலும், அரைமணி நேரத்தில் அல்லோலகல்லோலமாயிருந்தது. "ஐயோ என் மகனைக் கண்டீரா" என்றழுதனர் தாய்மார்கள். "ஐயோ, எங்கள் வீட்டுக்காரர் எங்கே" என்றழுதனர் பெண்டிர்கள். "தம்பியைத் தேடிப்பார்" என்று அண்ணன்மார்களை அனுப்புவர் சிலர். "மருமகன் இன்னும் வாவில்லையே" என்று தெருத் தெருவாய் அலைந்தனர் சிலர். "ஐயோ சொன்ன பேச்சைக் கேளாமல் போனானே, என்னவானானோ" என்று அலைந்தார் பலர். "அண்டை வீட்டுக்காரப் பாவி பலாத்காரமாக இழுத்துக்கொண்டு போனான். அவனையும் காணோம் இவனையும் காணோம்" என்று புலம்பினார் பலர். "எவனோ சிநேகிதன் வெள்ளையுஞ்சள்ளையுமாக வந்து வலித்துக்கொண்டுபோனானே. என் மகன் கொச்சை. செத்தானோ பிழைத்தானோ" என்று அலறினார் பலர்.

பிள்ளைகளைப் பறிகொடுத்தவர்களும், அண்ணனைப் பறிகொடுத்தவர்களும், தம்பியைப் பறிகொடுத்தவர்களும், பெண்களைப் பறிகொடுத்தவர்களும், பெண்டிரைப் பறிகொடுத்தவர்களும், வாயிலடித்துக்கொண்டும், மார்பிலடித்துக்கொண்டும், கையைப் பிசைந்துகொண்டும், வயிற்றைப் பிசைந்துக்கொண்டும்; ஐயோ என்றும் அப்பா என்றும் அம்மா என்றும் கண்ணே என்றும் புலம்பிக்கொண்டும், சிங்காரத் தோட்டத்துக்குப் போனார்கள்.

இதற்குள் பொலீஸார் தீயை அவித்து, பிணங்களை வேறிடத்தில் வரிசையாக வளர்த்தி, குற்றுயிரோடிருந்தவர் களை ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோயினர். சிற்சில அடையாளக் குறிப்புகளால் என் பிள்ளை என் தம்பி என் மாமன் என் மைத்துனர் என்று சில பிணங்களைச் சிலர் வண்டி களில் கொண்டுபோயினர். அடையாளப் பிசகால் மாறின பிணங்கள் பல. பரிஷ்காரமாய் இன்னாரின்னாரென்று தெரியாத பிணங்களைப் பொலீஸார் கொண்டுபோய்ப் புதைத்துவிட் டார்கள்.

14. பெரியோர் வாக்கிய பரிபாலனம் செய்தோர்

தந்தைதாய் வாக்யபரிபாலனம் செய்தவன்
தசரதகுமார ராமன்.
தமயனருள் வாக்யபரிபாலனம் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்.
சிந்தையிலுணர்ந்து குருவாக்ய பரிபாலனம்
செய்தவன் அரிச்சந்திரன்.
தேகியென்றோர்க்கிலை என வாக்யபரிபாலனம்
செய்தவன் தான கர்னன்.
நிந்தைதவிர் வாக்யபரிபாலனம் செய்தவன்
நீள்ப்ல மிகுத்த அநுமான்.
நிறையுடன் பர்த்தாவின் வாக்யபரிபாலனம்
நிலத்தினில் நளாகினி செய்தாள்.
மந்தைவழி கோயில்குளமுங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா !
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
மலைமேவு குமரேசனே !

—குமரேசர் சதகம்.

15. அக்பர்

முஹம்மதிய அரசாட்சி இந்தியாவில் ஏறக்குறைய எழுநூறு வருஷ காலம் நடந்தது. அதில், ஆப்கானியர் ஆட்சிசெய்தது ஐந்நூறு வருஷமும், மோகலாயர் ஆட்சிசெய்தது இருநூறு வருஷமும் ஆகும். மோகல் பாதுஷாக்களில் முதல் அறுவர் பிரஸித்தமானவர்கள். அவர்களில் நாயகமணியானவர் அக்பர்.

மோகல் ஆட்சியை ஸ்தாபித்தவர் பேபர். அவருடைய குமாரனான ஹுமாயூன், ஷீர்கான் என்னும் ஆப்கானிய அரசனால் தோல்வியடைந்து, இருக்க இடமில்லாமல் ஸிந்துதேசத்தில் ஸம்ஸார ஸஹிதமாய்ச் சில பரிவாரங்களுடனே அலைந்து திரிந்துகொண்டிருந்தார். திரிந்திருக்கையில் அமரக்கோட்டையில் அவதாரமான மஹாபுருஷனே அக்பர் என்பவர். ஹுமாயூன் தான் இழந்த அரசைப் பெறுவதற்குப் பன்னிரண்டு வருஷம் ஆயிற்று. இடையில் பாரஸீக அரசனுடைய உதவியால் ஹுமாயூன் ஆப்கானிஸ்தானத்துக்கு அரசனாகியிருந்தார். அதுவரையில், அக்பர் தனது சிற்றப்பனிடத்திலும் பேபருடைய ஸஹோதரியிடத்திலும் வளர்ந்திருந்தார். கி.பி 1555-ம் வருஷத்தில் ஹுமாயூனுக்கு டில்லியின் அரசாட்சி மறுபடியும் கிடைத்தது. கிடைத்த சில மாதகாலத்தில் அவர் மரணமடைந்தார். அப்போது அக்பர் ஸேனாபதியான பெய்ராம்கானுடனே பஞ்சாபில் சில காரியங்களைச் சிக்கறுத்திருந்தார். அப்போது அவருக்கு வயது பதின்மூன்று.

குழந்தைப் பருவத்தில் தாய்தந்தையருடைய பராமரிப்பு இல்லாமற்போயிற்று. வித்யாப்யாஸத்துக்கு உரிய இளமைப் பருவமெல்லாம் பிதாவோடு யுத்தகளங்களில் கழிந்துபோயிற்று. பல விஷயங்களைப்பற்றி ஹுமாயூன் அப்போதப்போது அக்பரிடத்தில் ஆலோசனைசெய்வது உண்டு. குழந்



AKBAR :—அக்பர்.

தைப்பருவத்தில் பட்ட கஷ்ட நஷ்டங்களும், இளமைப்பருவத்தில் பிதாவோடு நெருங்கிப் பழகிய பழக்கங்களுமே, அக்பருக்குள்ள பாலசிட்சை. ஹுமாயூன் இறந்தவளவில், பெய்ராம் அக்பருக்குத் துணையாக இருந்து ராஜகாரியங்களை நடத்திவந்தான். பெய்ராமுடைய உதவி இல்லாவிட்டால் சேனையை அடக்கியாள்வது கஷ்டம். பகையரசர்கள் அக்பரைத் தலையெடுக்கவொட்டாமல் தாழ்த்தியிருப்பார்கள். பெய்ராமோடு ஐந்துவருஷகாலம் பழகியிருந்தது அக்பருக்கு நன்மையே செய்வதாயிற்று.

இங்ஙனம் ஐந்து வருஷகாலம் அரசியலையும் குடியியலையும் தேசநிலையையும் அக்பர் நுட்பமாக அறிந்துவந்தார். அப்பால் கி-பி-1560-ம் வருஷமுதல் அவர் ஸ்வயாதிகாரமாக அரசாட்சியை நடத்த ஆரம்பித்தார். அப்போது அவர் வசத்தில் இருந்ததெல்லாம் பஞ்சாபும் வடமேற்கு மாகாணங்களுமே. அரசுசெய்யத் தொடங்கின பிறகு நாற்பது வருஷகாலத்தில் மோகல் ராஜ்யம் முன்னிலும் மிகவும் பெரிதாயிற்று. அங்கங்கே உள்ள பிரதிநிதிகளை அதிஜாக்கிரதையோடு திட்டத்தில் வைத்திருந்ததனால், எவரும் சுயாதிபதியாவது முடியாமற் போயிற்று. நிலங்களைக் கிரமமாக அளவெடுத்துத் தரம் பிரித்து நிலவரியை ஒழுங்காக வசூல்செய்வித்தார். அநேகமாய் அங்கங்கே ஏற்பட்டிருந்த ஆயத்துறைகளை எடுத்துவிட்டு, வர்த்தகத்தில் ஊக்கம் உண்டாக்கிவந்தார். குறைமுறைகளை ஸரியாகக் கவனித்து ஏற்ற பரிஹாரங்களைச் செய்துவந்தார். இவ்விதமான சீர்திருத்தங்களால் குடிகளுடைய க்ஷேமம் அதிகரித்துவந்தது. பலவேறு ஜாதியாரான இந்தியர்களை இவ்வளவு விமரிசையாக அதற்குமுன் அரசாண்ட முஹம்மதிய அரசன் எவனும் இல்லை.

அக்பருடைய அரசாட்சி சிறப்புற்றதற்கு வேறு காரணங்களும் உண்டு. சுய மதத்தில் அபிமானங்கொண்டு

இதர மதங்களிடத்தில் துவேஷங்கொள்ளாமை ஒன்று. ஜாதி பேதம் சமயபேதம் பாராட்டாமல் குடிகள் எல்லாருக்கும் ஒரே ரீதியாய் நீதிசெலுத்தியது ஒரு காரணம். யாதொரு வித்தியாசமும் பாராமல், அந்தந்த வேலைக்குரிய யோக்கியதை உடையவர்களை அந்தந்த வேலையில் நியமித்துவந்தது ஒரு காரணம். முஹம்மதிய மதத்தை மேற்கொள்ளாத ஹிந்துக்களுக்கு விதித்திருந்த பலவித வரிகளையும் பரிஷ்காரமாக எடுத்துவிட்டது மிகச்சிறந்த காரணம். அக்பர் தன்மட்டில் ரஜபுத்ர ஸ்திரீகளை விவாஹம் செய்துகொண்டதும், மூத்த குமாரனுக்கு ஒரு ரஜபுத்ர ஸ்திரியை விவாஹம் செய்வித்ததும், ஜனங்களுடைய பிரியத்தைக் கவர்தலான காரியங்களாயின.

அவர் வேறு சில சீர்திருத்தங்களையும் உண்டாக்கினர். வழக்கு விசாரணையில் உண்மையறியும்படி கொதிநெய்யில் கை தோய்க்கச் செய்தல், பாம்புக்குடத்தில் கையிடச் செய்தல், முதலாக அக்காலத்தில் அநுசரித்து வந்த திவ்யப்பிரமாணங்களை விலக்கிவிட்டார். விருப்பமில்லாதவர்களை ஸஹகமனம் செய்யும்படி நிர்ப்பந்திப்பதைத் தடுத்தார். விதவா விவாஹத்தையும் பால்ய விவாஹத்தையும் பிரதிகூலித்தார். இப்படிப்பட்ட மஹோபகாரி யாகையால், அவரை எல்லாரும் "ஸர்வஜன ரக்ஷகர்" என்று கொண்டாடினர்கள். இப்படிப்பட்ட நன்மைகளெல்லாம் உண்டாவதற்கு மூலகாரணமாக இருந்தவர் அபுல் பாஸில் என்னும் மந்திரி.

அபுல் பெயிஸி என்னும் மற்றொரு மந்திரியைக் கொண்டு அக்பர் ஸமஸ்கிருத இதிகாசங்களையும் சாஸ்திரங்களையும் பாரஸீகத்தில் மொழிபெயர்ப்பித்தார். ஒரு ஜெஸ்யூட் பாதிரியின் உதவிகொண்டு கிறிஸ்திய வேதத்தை மொழிபெயர்ப்பித்தார். தம்முளவில் இந்த மந்திரிமார்களோடும் மற்ற வித்துவான்களோடும் சல்லாபஞ் செய்து பலவிஷயங்களை அறிவதும், பல நூல்களைப் படிக்கக்கேட்பதும், ராஜகாரியம் இல்

லாத வேளைகளில் அவருக்கு உகப்பான காலக்ஷேபம். பாத சாரியாக நடத்தல், குதிரை சவாரி, துப்பாக்கிவேட்டை முத லியவைகளிலும் அவருக்கு விருப்பம் உண்டு. மிதமாக உண் பதும் மிதமாக உறங்குவதுமே அவருடைய பழக்க வழக்கங் களில் சிறந்தவை,

பிள்ளைகளில் இருவர் அமிதமான மதுபானத்தால் அழி வுற்றிறந்தனர். மூத்த பிள்ளையும் அந்தத் துராப்பியாஸம் உள்ள வரே. சீக்கிரத்தில் அரசாட்சியைக் கைப்பற்றிக்கொள்வதான நோக்கத்துடன் அந்த மூத்த பிள்ளை கலகமும் விளைத்தார். இங்ஙனம் பிள்ளைகளைப்பற்றிய துக்கமே பெரிதாய்க் கவலையுற் றிருந்து அக்பர் 1605-ம் ஷு மரணமடைந்தார்.

இவர் அமைத்த அஸ்திவாரத்தின் பலத்தால் மோகல் அரசாட்சி இவருக்கப்பால் மூன்றுதலைமுறை வரையில் தலை சாயாமல் நிலைத்திருந்தது. ஔரங்கஜேபின் காலத்தில் உச்ச நிலை உற்றிருந்த அவ்வரசாட்சி, அப்பால் நிலைதளர்ந்து பலஹீன முற்று, அடுத்த நூற்றாண்டில் பெயர்தானும் அற்று நசிவதா யிற்று. இந்தியா முழுவதையும் ஒருகுடையின் கீழ் வைத்து நல்லபடி ஆள்வதான உபாயத்தைக் கண்டறிந்து, அவ் வுபாயத்தை அனுஷ்டித்து முதலில் சித்திபெற்றவர் இவரே.

16. உழைப்பின் சிறப்பு

உழைப்பு எவ்வளவு சிறப்புள்ளது! அது என்ன அரு மையான கார்யங்களைச் செய்கிறது பாருங்கள்! தன் உத்தே சத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு வருத்தம் இருந்தாலும் அது அஞ்சுகிறதில்லை; எவ்வளவு முயற்சி வேண்டுவதாய் இருந்தாலும் தளர்கிறதில்லை; எவ்வளவு இடுக்கண்வந்தாலும் பின்வாங்குகிறதில்லை. மனிதருடைய நல்வாழ்க்கையை வளர்ப் பதில் எப்போதும் ஊற்றமுள்ளதாய், எப்போது விடியப்போ கிறது விடியப்போகிறது என்று காத்திருந்து வேலைசெய்ய

ஆரம்பித்து நாள்தோறும் நவநவமான மஹோபகாரங்களைச் செய்துகொண்டே வருகின்றது.

காட்டை அழித்துக் கரம்பைத் திருத்திப் பார்க்கப் பயங்கரமான வெட்ட வெளியைக் கண்ணுக்கு இனிமையாகப் பச்சைப் பசேரென்று தளிர்க்கச்செய்வது எது? ஏர் உழுது எருவிட்டு நீர்பாய்ச்சிப் பயிர்செய்து பழுத்த தானியத்தை அறுவடைசெய்து, அதை உணவுக்கு உபயோகமாகும்படி பக்குவம்பண்ணி இவ்வுலகிலுள்ள கோடானுகோடி ஜனங்களையும் போஷிப்பது எது? செங்கல் சூளை போட்டும் கருங்கல் வெட்டி யெடுத்தும் மாடமாளிகை கூடகோபுரங்களைக் கட்டுவதும், ஆதாள பாதாளத்தைப் பரிசோதித்துப் பொன் வெள்ளி இரும்பு ஈயம் தகரம் முதலிய உலோகங்களை எடுப்பதும் எது?

காட்டில் உள்ள மரத்தை வெட்டிக் கப்பல்செய்து, அலைகளை லட்சியம்பண்ணுமலும், புயலுக்குப் பயப்படாமலும், அகாதமான கடலின் வழியாய் நாலுதிக்கிலும் உள்ள தேசங்களெல்லாம் சுற்றி, அங்கங்கே அகப்படும் நல்ல பொருள்களைப் பிறதேசங்களில் கொடுத்து, பிறதேசங்களில் உள்ள சிறந்த பொருள்களை அவைகளுக்கு மாருகக் கொண்டு, இப்படியே ஒவ்வொரு நாட்டிலும் ஒல்வொரு நகரத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் அவரவர்கள் இனிது வாழ்வதற்கு வேண்டிய ஸகல ஸாமான்களையும் நிரப்பி, இவ்வுலகில் உள்ளயாவரும் ஒரே விதமாய்ச் சௌக்கியம் பெறுவதற்குக் காரணமாக நிற்கின்ற வர்த்தகத்தை நன்ருய்த் தழைத்துச் செழித்தோங்கும்படி செய்வது எது?

அஸாத்தியமாகவும் பிரயாஸமாகவும் காணப்படும் செய்கைகளை எவ்வளவும் லட்சியம் பண்ணுமல், பெரிய பிரவாகமாக ஓடும் நதிகளை அளவிட்டு, உளைவிழும் சதுப்புநிலத்தின் மேல் செவ்வையான பாதைகளை உண்டுபண்ணி, ஆழமான காணுறுகளின்மேல் அந்தரத்தில் தொங்குவதுபோன்ற வாரதி

கள் கட்டி, பாறைகளைத் துளைத்து மலையின் கீழாகக் குகை போல் வழிபண்ணுவது எது?

ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கும் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்கும் மலைகளின் வழியாகவும் கடலின் வழியாகவும் மெல்லிய கம்பியை இழுத்து, அதன் வழியாய் வாயுவேகமும் மனோவேகமும் இணையென்று சொல்லலாகாத வேகத்துடன் ஸமாசாரம் தெரிவித்து, ஒருவரும் கனவிலும் நினைக்கவொண்ணாத இந்த அதிசயத்தைச் செய்வது எது?

புத்திமான்களிடத்தினின்று உதிக்கிற விஷயங்களையும் சாஸ்திர பாரங்கதருடைய கொள்கைகளையும் பெரியோர்களுடைய புத்திமதிகளையும் எல்லாரும் எக்காலத்திலும் அறிந்து கொள்ளும்படி வெறுங் காகிதத்தில் அச்சிட்டு அதற்குக் கற்பிக்கும் திறமையைக் கொடுப்பது எது?

நிர்மானுஷ்யமான பிரதேசங்களில் பிரவேசித்து, ஜால வித்தைக்காரன் தன் கையில் ஏந்திய மந்திரக்கோலைச் சுழற்றி விநோதம் காட்டுவதுபோல், சுத்த சூந்யமான பள்ளத்தாக்குகளில் நவதானியங்களும் செழித்துப் பயிராகவும், வெறுமையான இடங்களிலெல்லாம் பசுமையான மரங்கள் அடர்ந்த சோலைகள் நிறையவும், உலைக்களம் பஞ்சாலை முதலான கைத்தொழிற்சாலைகள் விளங்கவும், வாணிபங்கள் வேரூன்றிச் செழிக்கும் அடைக்கல ஸ்தானமாயும், ஸகல சாஸ்திரங்களும் முழங்கும் விலாஸமண்டபமாயும், ஸமய ஸித்தாந்தங்கள் ஓங்கி வளர்கிற திவ்வியாலயமாயும், அரமனைகளும் ஆலயங்களும் மண்டபங்களும் உயர்ந்து காட்சிக்கினிய நகரம் தோன்றவும் காரணமாயிருப்பது எது?

பிறதேசத்து ஸாமான்கள் கப்பல் கப்பலாய் வந்திறங்குவதும் இவ்விடத்து ஸாமான்கள் அவ்விடங்களுக்கெல்லாம்

கப்பல் கப்பலாய்ப் போவதுமாக வர்த்தகத்தை விருத்தி செய்து, சாஸ்திர நியாயங்களால் பஞ்சபூதங்களையும் மன்னுயிர்க்கு உதவியாகும்படி சுவாதீனப்படுத்தி, கைத்தொழில்களை உண்டுபண்ணி அவ்வேலைகளுக்கு அழகைக் கொடுக்கச் சில்ப வித்தைகளைக் கற்பித்து, இவைகளெல்லாம் என்றென்றைக்கும் அழியாமல் விளங்குவதற்கு ஸாதனமான நூல்களைப் பெருக்கி, நாகரீகம் பரவச்செய்து, ஜனங்கள் ஸகல க்ஷேமங்களையும் பெற்று ஸந்தோஷத்தை அநுபவிக்கும்படி அநுகூலித்து, நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் மேன்மேலும் விருத்தியாகும்படி வகைதேடுவது எது?

இப்படியாக நாற்புறங்களிலும் விளங்கும் எண்ணிறந்த அதிசயமான காரியங்களைச் சாதிப்பது உழைப்பு அல்லவா? அப்படியானால், உழைப்புக்குச் சிறப்பு இல்லையென்று யார் தான் சொல்வார்கள்?

17. திரிகடுகம்

உள்ளனபோலக் கெடுமவை

கிளைஞர்க் குதவாதான் செல்வமும், பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும்—இளைஞனுக்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும், இம்மூன்றும்
உள்ளனபோன் றில்லாக் கெடும்.

நன்மை பயவாதவை

கணக்காயர் இல்லாத ஊரும், பிணக்கறுக்கும்
மூத்தாரை இல்லா அவைக்களனும்—பாத்துண்ணும்
தன்மையிலாளர் அயலிருப்பும், இம்மூன்றும்
நன்மை பயத்த லில.

கேளாகக் கொள்ளத்தக்கவர்

தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்.
வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணுதான்.
கோளாள னென்பான் மறவாதான். இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

18. கணக்கதிகாரம்

காரியார் என்னும் நாமம் பெற்ற வித்துவான்கள் இருவர் உளர். முதலாங் காரியார் கணக்கதிகாரம் என்னும் நூலைப் பாடியவர். இந்நூலுக்குச் சமஸ்கிருதத்திலே முனிவர் பலர் செய்திருந்த கணிதசாஸ்திரம், அஞ்சனம், கோவிந்தனுர் படிகம், கணிதரத்தினம், புவனதீபம் முதலிய பலநூல்கள் ஆதாரங்களாம். இந்நூற் பாயிரத்தில் சொல்லியிருக்கிறபடி, இவ்வாசிரியர் தாம்பிரவன்னி நதியின் வடகரையிலே, பூர்வீக பாண்டிய அரசர்கள் வாழ்ந்திருந்த கொற்கையம்பதியிலே அப்பாண்டியர்களுடைய வமிசத்திலே அவதாரஞ் செய்தவர். அதற்கு

பொன்னி நாட்டுப் பொருந்திய புகழோன்
மன்னர் கோமான் வழிமுத லுடையோன்
முத்தமிழ் தெரிவோன், முகரியம் பெரும்பதி
மத்தியத் தலத்தில் மறையவர் வாழும்
குற்றமில் காட்சிக் கொறுக்கையர் கோமான்
புத்தன் புதல்வன், காரியென்பவனே

என்றது தக்க சாட்சியாகும். இவர் செய்த கணக்கதிகாரம் மிகச்சிறந்த நூல் ஆனபோதும், தற்கால இலங்கை இந்தியா தேசங்களுள் புகுந்த இங்க்லிஷ் கணிதநூல்கள் மேலாட்டமாகி மறைக்க, அது எழுதப்பட்ட ஏடுகள் செல்களுக்கு உணவாகி அபாவனையில் வந்துவிட்டன. கணக்கதிகாரத்தை இவர் சூத்திரங்களாக வகுதது வெண்பாவிற் பாடினர்.

பன்னு வடசொற் பனுவல்தனை இப்போது
கன்னித் தமிழ்வாயால் கட்டுரைத்தேன்—முன்னம்
மகிழ்கின்ற எண்ணின் வழிவந்த கணக்கெல்லாம்
இகழ்வின்றியே உரைப்பேன் யான்.

இவர் செய்த கணித சாஸ்திர விநோதத்தை விளக்கற் பொருட்டுப் பின்வருவனவற்றைத் தெரிந்தோம்.

ஒருபடி நெல்லில்	14,400 நெல்	மனுடன்	வயசு	100
,, அரிசியில்	38,800 அரிசி	மாட்டின்	,,	20
,, எள்ளில்	115,200 எள்	எருமை	,,	30
,, மண்	17 பலம்	குதிரை	,,	32
,, மணல்	20 ,,	ஆடு	,,	12
,, நெல்	6 ,,	நாய்	,,	15
,, அரிசி	10 ,,	ஒட்டை	,,	73
,, உப்பு	16 ,,			

—பாவலர் சரித்திரதீபகம்.

19. சீதையைக் காட்டுக்கனுப்புதல்

ராமசுவாமி பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு கொஞ்சகாலம் ராஜ்யபாரம் பண்ணிவருகையில், ஒருநாள் பிரமதாவனத்தை யடைந்து சீதையோடு வேடிக்கையாகப் பலவார்த்தைகள் பேசியிருந்தார். அப்போது அவர் "சீதா, நீ வயிறுவாய்த்திருப்பது எனக்கு அதிக ஸந்தோஷத்தைத் தருகிறது. இப்போது உனக்குள்ள விருப்பம் என்ன?" என்று கேட்டார். சீதை "உங்களைப் பர்த்தாவாகப் பெற்றிருக்கும் அடியாளுக்கு விரும்பத்தக்கது என்ன உண்டு? ஆயினும் ஒன்று வேண்டுகிறேன். கங்கைக்கரையில் இன்னொருதரம் முனிவர்களுடைய ஆச்சிரமங்களிற் சென்று அவர்கள் திருவடிக்கீழ்க் குற்றேவல் செய்துகொண்டு அவ்விடத்தின் அழகை அநுபவிக்க விரும்புகிறேன்" என்று விண்ணப்பித்தாள். ராமர் அதற்கு அப்படியே ஆகட்டுமென்று அருளிச்செய்தார்.

இதற்கு அடுத்தபடியாக ஒரு நாள் ராமர் ஒற்றர்களோடு விநோதவார்த்தைகள் பேசியிருக்கையில், அவர் அவர்களை நோக்கி, "பட்டணத்திலாவது நாட்டுவாசங்களிலாவது ஜனங்கள் என்னைப்பற்றியும் தம்பிமாரைப்பற்றியும் சீதையைப்பற்றியும் என் சிற்றன்னை கைகேயியைப்பற்றியும் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள்? நூதனமாய் ஓரரசன் வந்தால் அவனைப் பற்றி ஜனங்கள் ஏதாவது சொல்லிக்கொள்வது சகஜம். அரசன் முக்கியமாய் அதை அறிந்து காரியங்களை நிச்சயிக்க வேண்டும். ஆகையால் நீங்கள் காதில் கேட்டவைகளை உள்ளபடி சொல்லுங்கள்" என்றார். ஒற்றர்களில் ஒருவன் கூறலுற்றான்.

மஹாராஜா, தேவரீருடைய துரைத்தனச் சீரையும் சுகுணங்களின் சிறப்பையும் பராக்கிரமத்தின் பெருமையையும் எல்லாருமே ஒக்க வியந்து புகழ்கின்றனர். அவ்விதமே தங்கள் தம்பிமார்களையும் புகழ்கின்றனர். அமுதத்தின் இடையிலே ஒருதுளி விடத்தைக் கலந்ததுபோல இடையில் ஓரபவாதத்தையும் பேசிக்கொள்கின்றனர். உண்மையை உரைக்கும்படி நியமித்ததால் நான் அதையும் விண்ணப்பஞ் செய்கிறேன். "சகல சற்குணங்களும் நிறைந்த ராமர் ஓராண்டளவு ராக்ஷசன் வசத்திலிருந்த தம்மனைவியை எங்ஙனம் வீட்டில் சேர்த்து வைத்துக்கொண்டார்" என்று சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டு ராமர் சிறிது விசனம் அடைந்தவரைப்போல் காட்டிக்கொண்டு, மற்றவர்களை "இதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்" என்றார். அவர்களும் மனப்பதைப்புடன் கைகூப்பி வணங்கி, "ஆம் சொல்லுகிறார்கள். சாதாரண ஜனங்கள் உட்காரியம் அறியமாட்டார்கள். ஆகையால் மேலுக்குத் தோன்றியவாறு பேசிக்கொள்கின்றனர்" என்றார்கள்.

பின்பு ராமர் அவர்களுக்கு விடைகொடுத் தனுப்பித் தம்பிமார்களை அழைத்துவரக் கட்டளையிட்டார். தம்பிமா

கள் வந்து ராமருக்கு முகமண்டலம் வாட்டமாயிருப்பது கண்டு கலங்கிநின்றார்கள். அப்போது ராமர் அவர்களை நோக்கி, "கேட்டீர்களோ நாட்டுச் செய்தியை. நம்மைப் பலவிதங்களில் புகழ்ந்தும், ஜனங்கள், ராவணனிடத்திருந்து சீதையைக் கொண்டுவந்ததைப்பற்றி இகழ்கின்றனராம். சீதையின் கற்பு நிலை எனக்குத் தெரியாததன்று. அக்கினியில் மூழ்கி அக்கினிதேவனால் புகழ்ந்து கொடுக்கப்பட்டவள். என்னிடத்தில் இடையறாத அன்புள்ளவள். பெண்களுக்குரிய நற்குணங்களெல்லாம் வாய்த்தவளே. ஆகிலும் என்ன செய்யலாம். உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூடலாமோ. அபகீர்த்திக்கு ஆளாவதிலும் இறப்பது மேலாகும். ஆதலால் என் உயிர்த் தோழரான தம்பிமாரே, சீதையைக் காட்டில் உய்க்க விரும்புகிறேன். நீங்கள் நல்ல கல்விமான்களும் புத்திமான்களுமாகையால் என் கருத்தைத் தடுக்கவொண்ணாது. பெண்கள் நாயகமான அவளை இப்படிச் செய்வதைப்போன்ற துக்கம் எனக்கு வேறே இல்லை. என்ன செய்வேன். தம்பி லட்சுமணா. அவள் மறுபடி முனிவராச்சிரமத்தில் வாசஞ்செய்ய என்னைக் கேட்டிருக்கிறாள். அந்த நிமித்தத்தை முன்னிட்டுக்கொண்டு, நீ நாளைக் காலையில் அவளைத் தேரில் ஏற்றிக்கொண்டுபோய், நம்முடைய நாட்டின் கடையெல்லையான கங்கையின் அக்கரையில் வான்மீகராச்சிரமத்தருகில் விட்டு வரவேண்டும்" என்றார்.

இவ்வார்த்தையைக் கேட்டு, லட்சுமணர் துக்கத்தால் ஒன்றும் தோன்றாமல் அண்ணனுடைய ஆணையை மறுக்கமாட்டாமல், தலைகுனிந்து தம் மாளிகைக்கு ஏகினார். இரவெல்லாம் துயிலொழிந்திருந்து, விடிந்ததும் சுமந்திரரைத் தேர்கொண்டு வரும்படி சொல்லி, சீதையின் மாளிகைக்குப் போய் "தாயே, நீர் மறுத்தும் கங்கைக்கரையிலுள்ள முனிவராச்சிரமங்களைக் கண்டு ஸேவிக்க விருப்பங்கொண்டீராம். அதுநிமித்தமாக உம்மை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுபோகும்படி

அண்ணு உத்தரவு செய்தார். ரதம் வீதியில் வந்திருக்கிறது. எழுந்தருளலாம்" என்றூர். சீதையும் உடனே அதிக மகிழ்ச்சியோடு வேண்டிய ஆடையாபரணங்களை எடுத்துக்கொண்டு ரதத்தில் ஏறிஞள். சுமந்திரர் தேர்செலுத்த, லட்சுமணர் கூடவே ரதத்தில் ஏறிக்கொண்டுபோய், மறுநாள் காலையில் கங்கையாற்றின் கரையில் சீதையை இறக்கினூர்.

உடனே லட்சுமணர் கோவென்று கதறியழுதார். சீதை "அகாரணமாய் ஏன் அழுகிறுயப்பா? அண்ணுவைப் பிரிந்த நிமித்தமோ? வேண்டாம், ஓரிரண்டுநாளிலேயே நான் திரும்பி விடுகிறேன். சீக்கிரத்தில் கங்கையைக் கடப்போம்" என்றுள். லட்சுமணர் ஒன்றும் பேசாமல், சுமந்திரரை அங்கேயே இருக்கும்படி பணித்து, படவுபேசி சீதையும் தானுமாக அதில் ஏறி ஆற்றைக் கடந்து அக்கரையில் இறங்கினூர். கண்ணும் கண்ணீருமாய்க் கைகூப்பிநின்று சீதையை நோக்கி, "அம்மா, ஒருவார்த்தை திருச்செவி சாத்தவேண்டும். ஊரார் ஏதோ அபவாதம் பேசியதை அறிந்து, அண்ணு உம்மைக் காட்டில் விட்டுவரும்படி கட்டளையிட்டார்" என்றூர். அந்த வார்த்தை செவியில் பட்டமாத்திரத்தில், சீதை வேரற்ற கொடிபோல் தரையில் விழுந்து மூர்ச்சித்தாள். சற்றுநேரத்தில் மூர்ச்சை தெளிந்து கண்ணீர்பெருக, லட்சுமணரைப் பார்த்துச் சொல்லலுற்றுள்.

அப்பா, பகவான் துக்கத்துக்கென்றே என்னைப் படைத்தான். முற்பிறப்பில் என்ன பாவம் செய்தேனே. இப்படி எனக்கு நேர்ந்தது. முன்பு பர்த்தாவின் திருவடியே துணையாகக் கானகத்தில் வசித்தேன். இப்போது என்ன செய்வேன். யாருக்கு இதைச் சொல்லுவேன். கங்கையில் விழுந்து என்னுயிரை விடுவது என் பர்த்தாவின் குலத்துக்கு இழிவாதலால், அங்ஙனம் செய்யத் துணிவு பிறக்கவில்லை. நேரிட வேண்டுவது நேரிட்டது. அவருடைய நியமனத்தை நீ

எப்போதும் கடக்கவேண்டாம். என் பேச்சாய் அவர் ஸந்நிதியில் விநயமாய் ஒரு வார்த்தை உரைக்கவேண்டும். அதாவது, "அபகீர்த்திக்கு அஞ்சி அடியாளை வனத்தில் விடுதற்கு மனநோவாதிருத்தல் தேவரீர் குணப்பெருமை என்றே களியா நின்றேன். கற்புள்ள பெண்களுக்குக் கணவர் திருவுள்ளத்தின்படி நடப்பதன்றோ தருமம். ஆகிலும் அடியாள்மீது முன்வைத்திருந்த அன்பையாகிலும் நினைக்கவேண்டும். கருவுற்றிருக்கும் அடியாள் கதி என்ன வாயினும் ஆகுக. தேவரீர் தருமநெறி தவறாமல் அரசாட்சி செலுத்திவரவேண்டும்" என்றிப்படி அவருக்கு விண்ணப்பஞ் செய்து என் மாமிமாருக்கும் என் வந்தனம் சொல்லவேண்டும்.

லட்சுமணர் அப்படியே செய்கிறேன் என்று சீதையை வலம்வந்து நமஸ்காரம்பண்ணிக் கண்ணீர் ததும்பச் சூனியமான சித்தத்தோடே மறுத்தும் படவேறிச் சீதையைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வடகரை சேர்ந்து சுமித்திரரோடு தேரேறி மீண்டு, ராமரிடத்தில் சீதையை வனத்தில் விட்டுவந்த செய்தியைத் தெரிவித்தார்.

20. காலதாமதம்

இன்றைக்குச் செய்வதிலும் நாளைக்கு இன்னும் செவ்வையாய்ச் செய்து முடிக்கக்கூடிய காரியத்தை, அதுவரையில் காத்திருக்கப் பொறாமல், இன்றைக்கே செய்வது மதியீனம். இன்றைக்கே செவ்வையாய்ச் செய்துமுடிக்கக்கூடிய காரியத்தை அப்படிச் செய்யாமல் நாளைக்கு ஆகட்டும் என்று நினைத்து நிறுத்திவைப்பதும் மதியீனமே. ஒன்றுக்கொன்று விரோதமான இவ்விரண்டும் குற்றமென்றே அங்கீகரிக்கத்தக்கவை. இவ்விரண்டிலும் எது அதமமானது என்பதை நாமே அநுபவசித்தமாய் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

அந்த க்ஷணமே கட்டாயமாய்ச் செய்யவேண்டிய வேலையை அப்படிச் செய்து முடிக்காமல் பின்னிட்டுச் செய்து கொள்ளலாம் என்று வீணே ஆலசியம் செய்வது காலதாமதம் எனப்படும். அது ஸாதாரண தோஷங்களில் ஒன்று. அதற்கு இடங்கொடுத்தால் நாம் எந்த வேலையையும் கிரமப்படி செய்து முடிப்பது கூடாமையாகும். நாளைக்கு நாளைக்கு என்று சொல்லி ஆலசியம் செய்துவந்தால், எடுத்த கருமம் என்றைக்கும் முடிவடையாமலே போய்விடும். ஆகையால் காலதாமதம் என்னும் குற்றத்துக்கு ஒருபொழுதும் இடங்கொடுக்கல் ஆகாது. இன்று செய்யத்தக்கதை நாளைச் செய்துகொள்ளலாம் என்று மெல்ல மெல்ல நழுவவிடுவோமாயின், வர வர இந்தத் துர்வழக்கம் மேலிட்டு, நினைத்த காரியம் கைகூடாமலே, "நாளை" "நாளை" என்ற நாள்கள் எல்லாம் "நேற்று" "நேற்று" என்று சென்ற நாள்களாய், சாகுங்கால மளவும் இப்படியே மோசம்போகவேண்டும்.

அவசியம் செய்து முடிக்கவேண்டிய விஷயங்களை அந்த வேளையில் செய்து முடிக்காமல் காலதாமதம் பண்ணுவதற்குக் காரணம் இன்னதென்று நமக்கு எளிதில் புலப்படுவதில்லை. நாம் எடுத்த கருமங்களைச் செய்யத் தொடங்கும் போது, அதற்குத் தடையாக எத்தனையோ இடையூறுகள் குறுக்கிடுவதனால் காலதாமதம் செய்வதற்கு இடமுண்டாகின்றது. காலதாமதத்தைச் சோம்பலென்று சொல்லலாமோ எனின், அப்படிச் சொல்வதற்கும் வழியில்லை. ஏனெனில், காலதாமதம் செய்கிறவர்களில் பெரும்பான்மையோர் விடா முயற்சி உள்ள நல்ல பாட்டாளிகள். முதலில் செய்யவேண்டிய காரியத்தை அதனிடத்தில் உள்ள வெறுப்பு முதலிய காரணங்களால் அதை அப்படிச் செய்ய முயலாமல், தமக்கு விருப்பமாயுள்ள மற்றொன்றைச் செய்யப் புகுகிறார்கள். உடனேசெய்யவேண்டியதைப் பரபரப்போடு செய்யப் புகாமல்,

பின்னாலே செய்யத்தக்கதை முதலில் செய்யும்படி தொடங்குவதனால் காலதாமதம் செய்யும்படி ஆகிறது. நாளை நன்றாய்ச் செய்து முடிக்கத்தக்க காரியத்தை ஆத்திரப்பட்டு இன்றே செய்யவேண்டும் என்று செய்வதனால், அந்தக் காரியம் நன்றாய் முடியாததும் தவிர, இன்றே அவசியமாய்ச் செய்யவேண்டிய காரியமும் குந்தகப்பட்டு, இவ்வாறு இரண்டும் கெடுவனவாகும்.

இதை மனோதைரியமில்லாமை என்று சொல்லவும் வழியில்லை. ஏவப்பட்ட வேலைகளை நாம் ஸரியான காலத்திலேயே செய்யவேண்டியதாக இருக்க, அதனிடத்தில் நமக்கு நெடுநாளாக உள்ள வேண்டாவெறுப்பினால் உடனே செய்யப் புகுவதில்லை. செய்யத்தான்வேண்டும் என்று நிர்ப்பந்தம் பண்ணப்பட்டால் அதை எப்படியாவது சிரமப்பட்டுத் தீராக்குறையாய் உடனே செய்து முடித்துவிடுகிறோம். இங்ஙனம் முதலில் நாமே செய்யாமல் காலதாமதம்பண்ணி, நிர்ப்பந்தம் ஏற்பட்டபின் அதற்குப் பயந்து செய்வது கோழைத்தனமாகும். காலதாமதம் என்கிற ஸாதாரண தோஷம் உண்டாவது இன்ன காரணத்தால் என்று தெளிவாய்ப் புலப்படாவிட்டாலும், இது பெரிய குற்றமென்றே யாரும் அநுபவசித்தமாய் அறிந்துகொள்ளலாம்.

காலதாமதம் என்னும் குற்றத்துக்கு நாம் சற்றும் இடங்கொடுக்காமல் பலமாய் எதிர்த்துநின்று அதனோடு போராடவேண்டும் என்பதற்கு முக்கியமாய் இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது:—சென்ற நாள்கள் ஒருபொழுதும் நின்றநாள்கள் ஆகமாட்டா என்பது நிச்சயம். ஒரேவிஷயத்தை நாம் இருமுறை செய்யும்படி ஒருபொழுதும் நமக்கு வாய்க்காதென்பது திண்ணம். ஏற்ற ஸமயம் எப்போதும் வாய்க்குமா? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது போல, செய்யத் தொடங்கின காரியங்களைச் செய்யத்தக்க காலத்தில் தப்பாது செய்தே தீரவேண்டும். வாய்த்த ஸமயத்திலே

செய்யாது விட்டுவிட்டால், மறுபடியும் ஸமயம் நேர்ந்தாலும், அது முன்போல் தக்கதாயிராமல் ஏதாவது குற்றங்குறைவு உள்ளாகத்தான் இருக்கும். ஆகவே கருதிய காரியம் கைகூடாமலே போவது இயற்கை. மனிதர் வாழ்க்கை நிச்சயமல்ல ஆதலால், எதை எப்பொழுது செய்யவேண்டுமோ அதை அப்பொழுதே தப்பாது செய்துகொள்வதே அறிவோர் கடன். இரண்டாவது:—காலதாமதத்துக்கு இடங்கொடுத்தால், அது வரவர விருத்தியாகும். வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல், வெகு சுலபமாய் இந்தத் துரப்பியாசம் பலமாய் வேரூன்றி நம்மிடத்தில் குடிகொண்டு பலவிதத்திலும் நம்மைச் சதிசெய்யும். நாம் இதன் வலையினின்றும் தப்பி வெளிப்படுவது எளிதன்று. இது தைரியக்குறைவை உண்டாக்கி, அற்ப காரியத்தையும் செய்யவொட்டாமல் நம்மை மலைக்கப்பண்ணும்.

நாம் செய்யவேண்டிய காரியங்களை நாளைக்கு ஆகட்டும் என்று நிறுத்திவைக்காமல், நாள்தோறும் குறித்த வேளைகளில் ஒரு குறையும் இல்லாதபடி ஒழுங்காய்ச் செய்ய வழக்கப்படுத்திக்கொண்டால், எல்லாம் இனிது முடிந்து, காலதாமதம் உண்டாவதற்கு இடமிராது. ஆரம்பத்திலேதானே இந்தக் குற்றத்தை வேரோடு களைந்துவிட்டால், நாம் அதனால் ஸுகப்பட்டு முன்னுக்கு வருவதுமன்றி, நம்மைச் சேர்ந்தவர்களையும் முன்னுக்குக் கொண்டுவரலாம்.

காலதாமதத்தினால் உண்டாகும் கேட்டைப்பற்றி எத்தனையோ உதாரணங்களை எடுத்தெழுதலாம். ரோம சக்ரவர்த்திகளில் ஒருவராகிய ஜூலியஸ் ஸீஸர் என்பவருக்கு விரோதமாய்ப் பலரெழுந்து மந்திராலோசனை மண்டபத்தில் அவரைக் கொலைசெய்த அன்று காலையில் அவருக்கு ஒரு கடிதம் வந்தது. மந்திராலோசனை மண்டபத்துக்கு அன்றையதினம் போனால் அவர் மரணம் அடையவேண்டுமென்றும், அதற்குத் தப்பிப் பிழைக்கும் உபாயம் இன்னதென்றும், அக்கடிதம்

தெளிவாக விளக்கியிருந்தது. அக்கடிதத்தை அவர் அன்று காலையில் கையில் வாங்கியும், உடனே அதைப் பிரித்துப் படித்துப் பாராமலே, அப்புறம் பார்க்கலாமென்று மந்திரியிடம் கொடுத்துவிட்டமையால், அன்றையதினம் அங்கே போய்க் கொலையுண்டனர். காலதாமதத்தால் இவ்வாறு ஒவ்வோர் ஸமயத்தில் பிராணநஷ்டமும் உண்டாவதனால், யாரும் இதன் கொடுமைக்கு உள்ளாகாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

21. நாண்மணிக்கடிகை

மொய்சிதைக்கும் ஒற்றுமையின்மை. ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியை.—பெய்த
கலம்சிதைக்கும் பாலின் சுவையை. குலம்சிதைக்கும்
கூடார்கண் கூடிவிடின்

இரும்பின் இரும்பிடை போழ்ப. பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரால் வாய்பூசுப.—தேரின்
அரிய அரியவற்றால் கொள்ப. பெரிய
பெரியரான் எய்தப்படும்

கொடுப்பின் அசனம் கொடுக்க. விடுப்பின்
உயிரிடையீட்டை விடுக்க.—எடுப்பின்
கிளையுள் கழிந்தார் எடுக்க. கெடுப்பின்
வெகுளி கெடுத்துவிடல்

தேவரனையர் புலவரும். தேவர்
தமரனையர் ஓரூர் உறைவார். தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார். கற்றன்னர்
கற்றாரைக் காதலவர்.

திரியழல் காணின் தொழுவர் : விறகின்
எரியழல் காணின் இகழ்ப.—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்ற
இளமை பாராட்டும் உலகு

நாக்கின் அறிப இனியதை. மூக்கினுன்
மோந்தறிப எல்லா மலர்களும். நோக்குள்ளும்
கண்ணினுல் காண்ப அணியவற்றை. தொக்கிருந்
தெண்ணினுன் எண்ணப்படும்.

22. ஸம்பாஷணை

ஒருவருடைய குணகுணங்களை உள்ளபடி அறிவதற்கு அவருடைய வார்த்தைகளே ஒருவகை வாயிலாக இருக்கின்றன. ஏறக்குறைய இவ்வுலகத்தில் இயற்றப்படுகிற எவ்வகை நன்மைக்கும் தீமைக்கும் சொற்களே காரணம். அவரவருடைய குணதோஷங்களைப் பிசகாமல் வெளிப்படுத்தி ஸுக துக்கங்களை விளைவிப்பன சொற்களே. ஒருவரிடத்தில் அறிவு ஆஸ்தை உண்டு இல்லை என்பதை அவர் சொற்களே காட்டிவிடும். இப்படி நமது சிறுமை பெருமைகளுக்குக் காரணமான சொற்கள் நம்முடைய வசத்தில் இருக்கின்றன. நம்முடைய வசத்தில் இருப்பவைதானே என்று வாய்க்குவந்தபடி பிதற்ருமல், ஸம்பாஷணையில் சொற்களை அதிக எச்சரிக்கையாக வழங்கவேண்டும். நாம் பேசும்போதெல்லாம் நமது சொற்கள் இனிப்பும் ஒழுங்கும் உடையனவாய் இருக்கவேண்டும். இக்கருத்தை உட்கொண்டே "ஞயம்படவுரை" என்ருர் ஔவையார்.

வீட்டு ஸங்கதி லௌகிக விவகாரம் கிரந்த விசாரம் ராஜாங்க விவகாரம் முதலானவைகளில் ஏதாவது ஒருவிஷயத்தைப்பற்றி ஒருவரோடொருவர் பேசுவது ஸம்பாஷணை. இந்த ஸம்பாஷணை, புத்தியுடையவர்களாகட்டும் இல்லாதவர்களாகட்டும், யாவரும் செய்யக்கூடியதே. ஸம்பாஷணை செய்கிற காலங்களில் எவ்வளவு யுக்தி புத்தி சாதுரியங்களோடு ஆசையும் ஆவலுமாய்ப் பேசுகிருேமோ, அவ்வளவு பேரும் புகழும் அதிகமாகும். நமது சொற்கள் கேட்போர் காதுக்கு ரஞ்சகமாய் இருப்பதைவிடப் பெருமை வேறென்றும் இல்லை.

ஸம்பாஷணையில் புத்திசாலிகள் தாம் அதிகமாய்ப் பேசாமல் பிறர் சொல்லுவதையே விசேஷமாய் உற்றுக் கேட்பார்கள்: எதிரிவாயை எப்போது அடக்கப்போகிறோம் என்று விரும்பார்கள். தம் வாயை எதிரி அடக்கினாலும் வருத்தம் அடையார்கள். எதிரி சொல்வதைச் சாந்தமாய்க் கவனித்து, அவன் சொல்லுகிற யுக்தி ஸரியானதாய் இருந்தால், அதன் மேல் சற்றும் வாயைத் திறவார்கள். நாம் சொல்வது ஸரியென்று நாமே ஸாதிக்கக்கூடாது. எதிரிக்கு மனம் பொத்தும்படி விடைகொடுப்பது உபயோகமற்ற செய்கை. சொல்ல வேண்டிய ஸங்கதி ஒன்றும் இல்லாமற்போனாலும், இருந்தும் அது ஒரு புதுமையான ஸங்கதியாய் இராவிட்டாலும், புதுமையாய் இருந்தாலும் அதனால் நமக்காவத் கேட்பவனுக்காவது யாதொரு நன்மையும் இராவிட்டாலும், வாயைத் திறந்து மிகைபடப் பேசுவது கூடாது.

ஒருவனுக்கு க்ஷேமம் உண்டாகவேண்டும் என்று கோரிச் செய்கிற ஸம்பாஷணை, ஹித ஸம்பாஷணையாம். ஹித ஸம்பாஷணை செய்ய நினைப்பவர்கள், தமது நற்போதனைகளும் ஶிக்ஷைகளும் இலகுவாகவே கேட்போர் கருத்தில் ஏறும்படி வெகு நயமாகவே பேசுவார்கள். அவர்கள் எதையும் தருணம் பார்த்துத் தெரிவிப்பது வழக்கம். கேட்போர்க்குக் கிரகிக்கத் திறமை எவ்வளவோ அவ்வளவாகவே உண்மைகளை எடுத்துரைப்பார்கள். ஹிதத்தை உபதேசிக்க நினைத்தவர்கள் எவரிடத்திலும் கண்யமும் கௌரவமுமாகவே பேசித் தமது கருத்தை நிறைவேற்றிக்கொள்வர். ஹித ஸம்பாஷணை செய்வதற்குத் தக்க முயற்சி இல்லாவிடின் அதன் கருத்து ஈடேறாது. நாம் ஸாதாரணமாய் வீடுகளில் பேசுகிற பேச்சு அதிக சாதுரியமாயும் இனிப்பாயும் இருப்பதில்லை. புதிதாய் யாராவது ஒருவரைக் கண்டால் வெகு ரஸமாய்ப் பேசுகிறோம். இதற்குக் காரணம் நமது முயற்சியும் முயற்சியின்மையுமே தவிர

வேறொன்றும் இல்லை. இவ்வாறு ஸம்பாஷணை செய்து ஸித்தி பெற்றவர்களை விசேஷமாய்க் காண்பது அரிது.

சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றிச் செய்யும் ஸம்பாஷணை வாதம் எனப்படும். ஒருவர் பூர்வபக்ஷம் பண்ணவும், அதன்மேல் ஒருவர் ஸமாதானம் சொல்லவும், வாதம் தர்க்கரீதியாக நடக்கவேண்டும். வாதம்செய்யுங்காலத்தில் வாதம் செய்பவர் அதிக கவனமாய் இருக்கவேண்டும். இல்லா விட்டால், வாதம் தன் நிலையில் நிற்காமல் சச்சரவாகவும், சச்சரவு பெருங்கோபமாகவும் முடிந்துபோம். வாதம் செவ்வையாய் முடிந்து பயன்படுவது வெகு அருமை. வாதம் செய்வது யாவர்க்கும் அதிக உபயோகமானது. கவனமாய்ப் பாதுகாத்து ஒழுங்காக நடத்தினுல், வாதம் செவ்வையாகவே முடியும். ஒருமுறை ஒரு கக்ஷி சலித்துத் தோல்வியடைந்தாலும், பிறகு நல்ல ஆலோசனை உண்டாகி அதனுல் வெகு நன்மை விளையும். ஒவ்வொருவேளையில் இனிநிலைநிற்காது என்று தள்ளிவிடும்படி யத்தனிக்கத்தக்க கக்ஷிகளைத் தாங்கும்படியான நியாயங்களும் தோன்றும். ஆகவே வாதம் செய்வதால் விசேஷமாய்ப் பேசுந் திறமையும் புத்தி கூர்மையும் உண்டாகும்.

23. இனியாதவை சில

பெரியாரோடு யாத்த தொடர்விடுதல் இன்னு.
அரியவை செய்தும் எனவுரைத்தல் இன்னு.
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னு. இன்னு
பெரியார்க்குத் தீய செயல்.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னு.
நிலத்திட்ட நல்வித்து நாறுமை இன்னு.
நலத்தகையார் நாணுமை இன்னு. ஆங்கின்னு
கலத்தல் குலமில் வழி.

பொருளுணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னு.
இருள்கூர் சிறுநெறித் தாம்தனிப் போக்கின்னு.
அருளிலார் தங்கண் செலவின்னு. இன்னு
பொருளில்லார் வண்மை புரிவு.

24. பிரதாப ஸிங்க்

பிரதாப ஸிங்க் வடசிற்றுாரை ஆண்ட ரஜபுத்திர அரசரில் ஒருவர்: உதயஸிங்கின் குமாரர். இவர் மிக்க ஊக்கம் உள்ளவர்: எப்படிப்பட்ட இக்கட்டிலும் தைரியத்தைக் கைவிடாதவர். மோகலாய அரசகுடும்பத்தோடு கலியாண ஸம்பந்தம் செய்யாமல் தனியாக நின்ற ரஜபுத்திரர் இவர் ஒருவரே. பகைவரால் துரத்துண்டு, வறுமையால் வருந்தி, பகல் தங்கின இடத்தில் இரவு தங்காமல் அலைந்திருந்த காலத்தில்கூட, அவர் முகம்மதிய ஸம்பந்தம் பண்ணினவர்களோடு உண்ண உடன்படவில்லை. ரஜபுத்ர குணதிசயமெல்லாம் இவரிடம் நன்றாய் விளங்கியிருந்தன.

சிம்மாசனம் ஏறினவுடனே இவர் தன்னுட்டின் எல்லைக்கு அருகிலிருந்த ஓம்தாளம் என்கிற பெயர்போன கோட்டையை அக்பருடைய ஆதீனத்திலிருந்து கைக்கொண்டார். இந்தச் செய்தியைக் கேட்டவுடனே அக்பர் திரளான சேனையைக் கூட்டிக்கொண்டுவந்து பிரதாபஸிங்குடன் கடும்போர்புரிந்து ரஜபுத்ர நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு, பிரதாபஸிங்கை ஊரைவிட்டுத் துரத்தி அதிக கொடுமை செய்தார். பிரதாப ஸிங்க் இங்ஙனம் தோல்வியடைந்து ஒன்பது வருஷம் ஆன பின் அராவளிமலையில் இருபத்தீராயிரம் ரஜபுத்ரரைச் சேர்த்துக்கொண்டு, ஆரதி கட்டத்தின் சமவெளியில் வந்து தண்டிறங்கி, மோகலாய சேனையை அதிக உக்கிரமான வீரசௌரியத்துடன் எதித்தார். இரண்டுபக்கத்துச் சேனைகளும் வீராவேசத்துடனே சண்டைசெய்தன. இந்த யுத்தத்தில் சாகாமல் திரும்பின ரஜபுத்திருடைய தொகை ஆயிரந்தானும் இருக்காது.

ஆரதிகட்ட யுத்தத்தில் பிரதாபஸிங்க் போட்ட சண்டை ஆச்சரியமானது. உச்சைஸ்வரத்தை ஒத்த தனது நீலவேணிக் குதிரையின்மீ தேறி, அவர் சேனையைக் கடிந்து அடித்துத் துரத்தி, அக்பருடைய குமாரனான ஸலிம் ஏறியிருந்த யானையின் பாகனைக் கொன்று, ஸலிமைக் கொல்லப்போனார். தன் ஆயுதத்துக்கு எட்டாமல் ஸலிம் தப்பிப்போனதைக் குறித்து கனவருத்தம்கொண்டு, ஸமீபத்தில் நின்ற யாவரையும் கொன்று சிங்கநாதம்செய்து நின்றார். தகுதியான உதவியில்லாமையால் பாதாதிகேச பரியந்தம் காயப்பட்டுக் கடைசியாய் யுத்தகளத்தைவிட்டுக் குதிரையின்மீதேறி ஓடலுற்றார். அதைக்கண்ட சேனைத்தலைவரும் சில வீரரும் குதிரையேறி அவரைத் துரத்திக்கொண்டு போயினர். அக்கணமே மோகலாய சேனையிலிருந்து அநாமதேயனான ஒருவனும் அவர்கள் பின்னே சென்றான். இதன்முடிவு என்னவாகிறதோ என்றறிய விரும்பி, மோகலாயரைச் சேர்ந்தோர் மிக்க ஆவலுடன் பார்த்துநின்றார்கள்.

துரத்திப்போனவர்களுடைய கையிலே பிரதாபஸிங்க் அகப்படவேண்டும், அல்லது சாகவேண்டும் என்பது அவர்களுக்குத் தோன்றிய உறுதி. பிரதாபஸிங்கின் குதிரையும் நடக்கமுடியாமல் தத்தளித்தது. பின்போன குதிரைகள் அதிவேகமாக ஓடின. ஆகவே அவர் மலையில் தப்பியோடிப் போய் விடுவது முடியாதென்று பார்த்துக்கொண்டிருக்கையில், குறுக்கேயுள்ள ஓராற்றங்கரை துரத்திப்போனவர்களை மறைத்தது. ஒருநொடி நேரத்தில், பிரதாபஸிங்க் மாத்திரம் மெல்ல மெல்ல மேட்டின்மேல் குதிரையேறிப் போவதையும், அநாமதேயன் மாத்திரம் தன்னந்தனியாகத் திரும்பி வருவதையும் கண்ட மோகலாயருக்கு ஆச்சரியமும் கலக்கமும் உண்டாயின.

ஸலிம், அந்த அநாமதேயனைப் பார்த்து, "பிரதாபஸிங்க் தப்பி யோடினதற்கும், துரத்திச் சென்றவர்கள்

காணமற் போனதற்கும், காரணம் என்ன ?" என்று கேட்டார்.

அநாமதேயன் "துரத்திப்போனவர் பிரதாபஸிங்கின் கத்திக்கு இரையாயினர். நான் தப்பிவந்தது என் பிதா மாதாக்கள் செய்த புண்ணியம்" என்றான்.

சிலிம்.—நீ என்ன முழுப்பூசனிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறாய். உள்ளதைச் சொன்னால் உன்னை மன்னிப்பேன்.

அநாமதேயன்.—நான் பிரதாபஸிங்கின் சகோதரன். என்பெயர் சக்தா. துரத்திச் சென்றவரை நான் கொன்றுவிட்டேன். பால்யத்தில் எங்களுக்குள் விரோத முண்டாகவே, நான் மீவார் நாட்டை விட்டு உங்கள் பிதாவுடைய ராணுவச் சேவையில் அமர்ந்தேன். யுத்தம் நடக்கையில், "போர்முகத்திலும் ஒப்பாரியா" என்று எனக்கு அண்ணனிடத்தில் உருக்கம் உண்டாகவில்லை. என் அண்ணன் உம்மைக் கொல்லவந்த போது, நான் காக்காவிட்டால் நீங்கள் இறந்திருப்பீர். என் அண்ணன் தோல்வியடைந்து ஒன்றியாகப் போனதையும், அவனைக் கொல்லும்படி அவனைத் துரத்திக்கொண்டு போனவர்களையும் பார்த்தபோது, அண்ணன்மேல் எனக்கிருந்த கோபம் போய்விட்டது. சகோதரவாஞ்சை மேலிட்டது. "உடன் பிறப்பால் தோள்வலிபோம்" என்பது உங்களுக்குத் தெரியாததா. "உடற்பிறப்பில்லா உடம்பு பாழ்" என்கிறார்களே.

சிலிம் அதன்மேல் "உண்மையை உரைத்ததனால், நான் வாக்கிட்டபடி உன்னை மன்னிக்கிறேன். விருப்பமிருந்தால் நீ உன் அண்ணனிடம் போ" என்று சொல்லி அவனுக்கு அநுமதி கொடுத்தார்.

அதன் மேல் சக்தா அண்ணனிடம் சேர்ந்து மீவார் நாட்டுக்கு விசேஷ நன்மை செய்தான்.

ஆரதிகட்டத்தில் தோல்வியடைந்த பின்னும் விரோதிகளால் அவர் பட்ட கஷ்டத்திற்குக் கணக்கில்லை. அவரும் அவருடைய ஸர்தார்களும் நாய்கூட வெறுத்தலான சோற்றை உண்டு காலங்கழிக்கையில்கூட, ஸர்தார்கள் அவருக்கு மரியாதை செய்வதையும், கடுஞ்சண்டை போட்ட காளைகளுக்கு அவர் வெகுமதி கொடுப்பதுபோல் காட்டுக் கனிகளைக் கொடுப்பதையும், ஒரு வேவுகாரன் பார்த்துப்போய் அக்பரிடம் பரிகாசமாக உரைத்தான். அதைக் கேட்டதுமுதல் அக்பர் பிரதாப ஸிங்கைக் கணிசமாக மதிக்கலானார். அதன்மேல் அவர் பிரதாபஸிங்கின் தேசத்தில் சில பாகங்களைக் கொடுத்து உதயபுரி என்கிற பட்டணத்தையும் கட்டச் செலவு கொடுத்தார். பிரதாபஸிங்குக்கு அந்தியகாலத்தில் இங்ஙனம் சில வருஷ காலம் சௌக்கியம் கிடைத்தும், அவர் தன்னுடைய சௌகரியங்களை எள்ளளவும் கவனியாமல், குடிகளுடைய நன்மையையே கவனித்திருந்தார்.

சாகும்போதுகூட அவர் தன்மகனுக்குச் சண்டை செய்யும்படி உத்தரவுகொடுத்துவிட்டே பிராணனை விட்டார். அந்த ஸமயத்தில் அவர் அற்பமான ஒரு குடிசையில் ஒரு ரஜாவை விரித்துப் படுத்துப் பெருமூச்சு விட்டார். அதைக் கண்ட அவருடைய மாமன் "உமக்குள்ள மனக்குறை என்ன?" என்று கேட்டார். "என்னுடைய தேசத்தை முகம்மதியரிடம் முழுவதும் விடுவதில்லை என்ற உறுதியை என் காது கேட்டாலொழிய என்னுடைய பிராணன் போகாது" என்றார். உடனே மந்திரிமார்களும் ஸர்தார்களும் ஜனங்களும் "உம்முடைய மகன்பக்கத்தில் நின்று நாங்கள் சாகுமளவும் சண்டைபோடச் சித்தமாயிருக்கிறோம்" என்றும், "சுயாதீனம் பெறுமல் நாங்கள் அரண்மனைகளைக் கட்டிக்கொள்வதில்லை" என்றும், அரசனுடைய பாதத்தைத் தொட்டு ஆணையிட்ட பின், திருப்தி உண்டாகி அவருடைய பிராணன் போயிற்று.

25. கைத்தொழில்கள்

கைத்தொழில்கள் என்பதற்கு மனிதன் கையினுல் செய்யப்படும் வேலைகள் என்பது அர்த்தம். சொல்லின்படி அர்த்தம் இதுவேயாயினும், கையினுலாகும் எல்லா வேலைகளும் கைத்தொழில்கள் என்று வழங்குவதில்லை. வழக்காற்றில் இந்த வார்த்தை சில வேலைகளை மாத்திரமே குறிக்கும். மனிதர்கள் செய்யும் வேலைகள் எல்லாவற்றிற்கும் கை அவசியமானதே. ஆயினும் தண்ணீர் இறைப்பது சோறு சமைப்பது முதலிய ஸாதாரண வேலைகள் கைத்தொழில்கள் அல்ல.

நிலத்தை உழுது பண்படுத்தி விதை விதைத்துத் தகுந்த காலத்தில் களைபிடுங்கிப் பயிரிடுகிறோம். இந்தத் தொழிலில் மனிதன் கஷ்டப்படுவது உண்மையே. ஆகிலும், விதை முளைப்பதும் கதிர் விடுவதும் தானியம் பழுப்பதும் தெய்வச்செயலே அன்றி, மனிதன் செயல் அல்ல. ஆகவே நெல் முதலியவைகளை விளைபொருள்கள் என்கிறோம். உழுதல் முதலிய வேலையெல்லாம் கைப்பாடு கைவேலை என்று வழங்கும்.

எண்ணெய் ஆடுவது கருப்பஞ்சாறு இறக்குவது முதலிய வேலைகள் சிறப்பில்லாத ஸாதாரணமான வேலைகளே ஆதலால், அவைகளுக்கும் கைத்தொழில் என்னும் பேர் தகாது. கையால் எழுதுகிற சித்திரவேலையைக் கைத்தொழில் என்னலாகாது: கைத்தொழில்களினும் சித்திரவேலை மேன்மையானது. அதைக் கைத்தொழில் என்பது அதன் கௌரவத்துக்குக் குறைவு. சித்திரத்தைக் கையினுல் எழுதினபோதிலும், இந்த வேலையில் எப்பொழுதும் மனவூகமும் கைஸாமர்த்தியமும் அவசியமானவை. மனவூகமும் கைஸாமர்த்தியமும் எப்பொழுதும் அவசியமான வேலைக்குச் சற்றுக் குறைந்தும் ஸாதாரணமான கைவேலைகளுக்குச் சற்று உயர்ந்தும் இருக்கிற வேலைகளே கைத்தொழில்கள். கெடியார வேலையைக் கைத்தொழில்

என்று சொல்லலாம். ஏதோ ஒரு உலோகத்தை நானுவித சக்கரங்களாகவும் சுழல்களாகவும் செய்து, கெடியாரம் என்கிற விசித்திர யந்திரத்தை அமைக்கிறார்கள். சித்திரவேலைபோல் இதிலும் மனவூகையும் கைஸாமர்த்தியமும் அவசியம் இல்லையா? அப்படியிருக்க, இதைச் சித்திரவேலையிலும் தாழ்ந்த தான கைத்தொழில்என்று சொல்வது ஏன்? முதல்முதல் கெடியாரம் பண்ணுகிற விதத்தைக் கண்டுபிடித்தபோது மனவூகையும் கைஸாமர்த்தியமும் அவசியமே. அப்பால் எவனுகிலும் அந்த வழியைக் கற்றுக்கொண்டு கெடியாரம் செய்யலாம். சித்திரவேலை அப்படிச் செய்யக்கூடியதல்ல. இப்படியே யந்திரங்களால் இயற்றப்பட்ட இரும்புவேலை தச்சவேலை கண்ணாடிவேலை குடம் முதலான மண்வேலை பஞ்சுவேலை தோல்வேலை க்டிதவேலை அச்சுவேலை முதலியவைகள் கைத்தொழில்களாம்.

பிராணனைப் போகவொட்டாமல் காப்பாற்றுவதற்குச் செய்யவேண்டியது வியவசாயம். ஸௌகரியங்களை அநுபவித்து ஸௌக்யமாய் ஸந்தோஷத்துடன் வாழ்வதற்குச் செய்யவேண்டியது கைத்தொழில். வெறுங்கையால் செய்கிற வேலை கைவேலை. யந்திரங்களை ஏற்படுத்திக்கொண்டு அவைகளின் உதவியால் செய்கிற வேலைகள் கைத்தொழில்கள்.

நாகரிகம் உள்ள தேசங்களில்தான் கைத்தொழில்கள் நடந்துவரும். கைத்தொழில்களுக்குப் பொருளும் உழைப்பும் ஆகிய இரண்டும் இன்றியமையாதவை. பொருள் மாத்திரம் உள்ள தேசங்களில் கைத்தொழில்கள் அதிகமாய்க் காணப்படமாட்டா: ஏனெனில், உழைப்பில்லாமலே தனவான்களாய் இருந்தால், பிறகு உழைக்க மனம் வராது. மிகவும் தரித்திரமான தேசங்களிலும் கைத்தொழில்கள் இருக்கமாட்டா: ஏனெனில், கொஞ்சமாகிலும் பொருள் இல்லாவிட்டால், முதல் முதல் கைத்தொழில்கள் ஊன்றுகிற

விதம் எப்படி ? கைத்தொழில்களை நடத்தும் வழியைக் கண்டு பிடிப்பதற்கு, சாஸ்திரப்பயிற்சியும் நுட்பவறிவும், அவைகளை இயற்றுவதற்கு யுக்தி உபாயமும், அவைகளைச் செழிப்பிப்பதற்கு ஒழுங்கும் ஒற்றுமையும் வேண்டும். அவைகளைப் பாதுகாப்பதற்குத் தகுந்த அரசாட்சி இருக்க வேண்டும். நாகரிகம் அற்ற தேசங்களில் இவைகளெல்லாம் எங்ஙனம் நேரும் ? கைத்தொழில்கள் முதலில் ஏற்படும்போது யந்திரங்கள் அமைக்கப் பொருள் வேண்டும். ஸாமான்கள் இன்றி வேலை நடக்காதாகையால், பற்பல தேசங்களிலிருந்து ஸாமான்களை வரவழைப்பதற்கும் முன்பின் ஸரிப்படுத்துவதற்கும் பணம் வேண்டும். இப்படிச் செய்வதற்காக இதர தேசங்களோடு வர்த்தகம் பண்ணிக்கொண்டு சிநேகம் பாராட்டி வரவேண்டும். வர்த்தகம் விசேஷமாய் நடவாத தேசத்தில் கைத்தொழில்களும் நடவா. ஒரு தேசத்தில் கைத்தொழில்கள் ஊன்றித் திடப்பட்டு விருத்தியாகிச் சிறப்படைய நெடுநாள் ஆகும்.

யந்திரங்கள் அமைப்பதற்குச் சாஸ்திர ஞானம் அருமையான சாதகம். மனிதன் நெடுநாளில் செய்து முடிக்கும் வேலையை யந்திரம் அதிசீக்கிரத்தில் செய்து முடிக்கும். மனிதனுடைய ஆற்றலுக்கு எட்டாத காரியங்களும் யந்திரத்தால் நிறைவேறும். மணலும் சாம்பலும் கண்ணாடியாகிறதென்றும், கந்தை காகிதமாகிறதென்றும் சொன்னால், யாருக்குத்தான் முதலில் அதிசயமாய் இராது ? காகிதத்தை வைத்தால், கண் மூடித் திறப்பதற்குள் அதை இழுத்துக்கொண்டு போய் மை தடவி அச்சிட்டு மறுபடியும் ஓரிடத்தில் கொண்டு சேர்த்து விட்டு, உடனே மற்றொரு காகிதத்தை அவ்விதமாகவே செய்ய இழுத்துக்கொண்டு போகிறதே அப்படிப்பட்ட அச்சுயந்திரத்தைக் கண்டு யார்தான் வியப்படையாமல் இருப்பார் ? சணலை ஸரிகை யாக்கினால் ஒன்றுக்கு ஐயாயிரமடங்கு விலை உயர்ந்து

போகிறது. இரும்பை ஊசிகளாகவும் சங்கிலிகளாகவும் பண்ணினால் விலை எத்தனையோ பங்கு அதிகரிக்கிறது. இவையெல்லாம் கைத்தொழில்களின் சிறப்பல்லவா ?

26. நளன் & தமயந்தி

நளன் தேர்ப்பாகனுமிக் குண்டினபுரம் வருதல்
வீமராஜன் அரண்மனை

வாசற்காப்பான்.—இதென்ன இது! அரண்மனையருகில் ஆரவாரமாயிருக்கிறது, புதிதாய் யாரோ வந்திருப்பதுபோல் காண்கிறது. நம் காவல் வேலை ஓயாத வேலையாயிருக்கிறதே, இதை விட்டுவிட்டு எப்படிப்போய் விசாரிக்கிறது. நல்லது, இதோ அந்தப்புரத்துத் தாதி ஓடிவருகிறாள் ; அவளை விசாரிப்போம்.

[தாதி வருதல்]

வாச. தாதியம்மா! ஏது அந்தப்புரத்தை விட்டு நீ வெளியே இவ்வளவுதூரம் வந்தது ? அவசரமாய் ஓடுகிறையே. என்ன விசேஷம் ?

தாதி. அண்ணே! இப்போது உம்மோடு நின்றுபேச எனக்கு நேரமில்லை ; ஆயினும் கொஞ்சஞ் சொல்லுகிறேன். இங்கே ருதுபன்னன் என்கிற அயோத்தி யரசன் வந்து இறங்கியிருக்கிறான்.

வாச. அப்படியா! அதைத்தான் நானும் கேட்க ஆவலாயிருந்தேன் ; இன்னும் என்ன சமாசாரம் ?

தாதி. ருதுபன்னனுடைய சாரதியாய் வந்திருக்கிறான் ஒருவன். கையோ குட்டையாயிருக்கிறது. கன்னங் கறேலென்று பார்க்க வழங்காமலிருக்கிறான். நெருப்பில்லாமலே சமைக்கிறான். ஜலம் இல்லாத பாத்திரத்தில் அவன் கண் பட்டால் ஜலம் உடனே உண்டாகிவிடுகிறது. இப்படி என்னென்னவோ அதிசயங்கள் செய்ய வல்லவனும்.

வாச. ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம்! இதெல்லாம் உண்மையாயிருக்குமா அம்மா?

தாதி. ஆம் அண்ணே! நெருப்பில்லாமலே சமைக்க நான் கண்ணால் பார்த்தேன். இந்தச் செய்தி நம்முடைய தமயந்திக்குத் தெரிந்து, அவன் சமைத்த பதார்த்தத்தைக் கொஞ்சம் வாங்கிவரச்சொன்னாள்; அப்படியே வாங்கிவந்து கொடுத்தேன். இன்னொரு அதிசயங் கேட்டையா அண்ணே! பிறகு தமயந்தியம்மாளுடைய மக்கள் இரண்டும் அவனண்டை போனபோது, அவைகளைப் பார்த்து அவன் கண்ணீர்விட்டுக் கதறியழுதான். ஏன் அழுகிறாயென்று நான் கேட்டேன். அதற்கு "இக்குழந்தைகள்போல எனக்கும் இரண்டு குழந்தைகள் உண்டு. அவைகளையெல்லாம் விட்டு நான் காட்டுக்குப் போய் விட்டேன். இதுகளைப் பார்த்தபோது எனக்கு அந்த நினைவு வந்தது" என்றான்.

வாச. அவன் நளச்சக்கரவர்த்திதானா என்ன! மாறு வேடம்பூண்டு வந்திருக்கிறானோ! முன்னே பயித்தியக்காரத் தனமாய்ப் பங்காளியுடன் சூதாடி ராஜ்யத்தைப் பறி கொடுத்து, பிள்ளைகளை நம்முடைய ராஜ அரண்மனைக்கு அனுப்பிவிட்டு, தமயந்தியுடன் காட்டுக்குப் போன சேதி நமக்குத் தெரியுமே. போனவிடத்தில் அந்தத் தமயந்தியம்மாளை நடுக்காட்டில் தூக்கத்தில் பாதிபுடவையைக் கிழித்துக் கொண்டு அல்லாடவிட்டுப் போனானே. அந்த நளன் இவன் தான்போல் தோற்றுதே! இதில் என்னமோ மறைப்பாட்டமிருக்கிறது.

தாதி. ஆம் அய்யா, தமயந்திக்கும் அப்படியே தோன்றியிருப்பதாகக் காண்கிறது. இப்போது நம்பிராஜா சொன்னதாய்ச் சொல்லி அந்தத் தேரோட்டியைத் தன்னிடம் அழைத்துவரச் சொன்னாள். போகவேண்டும்; தெண்டம் அய்யா! செலவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

வாச. நல்லது அம்மா, போய்வா. நானும் என் வேலைக்குப் போகிறேன். உனக்கு என்னமோ மகாயோகம் வரப் போகிறது. என்னை மாத்திரம் மறந்துவிடாதே.

தாதி. உம்முடைய சக்கட்டமும் சாமர்த்தியமும் எனக்குத் தெரியாதா? இதுதானா சமயம்?

(போகிறாள்).

[தாதிபோய் நளனை அழைக்கிறாள்]

தாதி.

சாரதி யாகவந்த தனஞ்சயா! சொல்லக்கேளும்
தாரணி புகழ்வதாகத் தயவுடன் அரசியற்றும்
எரணி வீமராஜன் எழிலுட னழைக்கச்சொன்னார்.
சீருட னோடிவந்தேன் சீக்ரமாய் வாருமையா.

[தாதி நளனுடன் வந்துநிற்க அவனைநோக்கி]

தமயந்தி.

தேவரையுந் தள்ளிவிட்டுத் தேமாலை யிட்ட என்னை
பூவுலகில் கைவிடேன் எனப்போற்றிக் கைப்பிடித்துக்
காவலறக் காட்டில்விட்டான் நளனன்றி யிவ்வாறும்
காவலன் வேறுருண்டு கண்டிருந்தால் சொல்லுவாயே?

நளன்.

மாதரசே கேளாய்நான் மதிமயங்கிக் கலிவலியால்
மேதகும் ராஜ்யமெல்லாம் விட்டுனையும் கானகத்தில்
வேதனை யாகவிட்டேன், உருக்குலைந்தேன். கலிநீங்கக்
காதலாய் உனைக்காணக் கருதியிங்கு வந்தேனே.

தமயந்தி.

தரு-இராகம்-முகாரி-அடதாளம்.

பல்லவி

பாவினா னிவ்வுருக்காணவோ-மனந்துணிந்தாய்
பணிவாரைப் போய்ப்-பணிந்தாய்?

அநுபல்லவி

தேவர்கொடுத்தவர மாவதனைத்தும்-பொய்யோ
ஆவிமெழுகதுபோ லாகவுருகு-தையோ!—

சரணங்கள்

தங்கப்பிரகாசநிறம்-போச்சே—முடியணிந்த
தலையிற்குல்லாயணிய-லாச்சே ;
சிங்கம்நரியருகில் சேர்ந்தாற்போலடுத்-தீரே
செங்கோல்பிடித்தகையில் சவுக்கொன்றைப்பிடித்-தீரே— பாவி.

குண்ணருகொருபாட்டை-கண்டே—பிரியமனம்
கூசாமல்யோசித்துக்-கொண்டே ;
அண்டையில்படுத்திருந்தே அதிநித்ரைசெய்யும்-போதே
அடவியில்பிரிந்தென்னை நடந்தீரல்லவோ-முன்னே— பாவி.

விதியைவெல்லுவ-தருமை—சிறுமையெல்லாம்
வென்றதல்லவோ-பெருமை ;
மதியுமிரவியும் வாயுதேவனு-மறிய
மன்னவனே நான்சொன்னேன் மனக்கவலை என் ? விடும்— பாவி.

நளன்.

நானுன்னைத் தனியாய்விட்டு நடந்தது மெய்தான்காட்டில்.
போனவன் வருமுன்பாகப் புதுமணம் செய்வாருண்டோ ?
மாநிலத் தரசரெல்லாம் வரச்சுய மாமுஞ்சாற்றி
ஏனிந்த நினைவுகொண்டாய் என்தனுக் குரைப்பாய் மானே ?

தமயந்தி.

நீதிலா அயோத்திநாட்டில் தேவரீ ரிருப்பதாக
மேதினி தனிலேயுள்ள வேதியர் வந்துரைத்தார்.
ஆதலால் இதனைச் சொன்னால் அகத்தியம் வருவீரென்றே
நாதனே நினைத்தேன். என்சொல் நம்புவீர் உண்மைதானே.

[ஆகாயத்திலிருந்து சந்தேகந் தெளிவதாகச் சொல்வது]

வாயுபகவான்.

காலமூ வாண்டும் கற்பைக் காத்தஅத் தேவிதன்னை
சாலிமா தவட்கு மேலாய்ச் சாற்றலாம் குற்றமில்லை.

மாலடி பணியுந் திவ்விய மன்னனே, யோசியாமல்
சீலமாய் அவளைக் கூடிச் சேர்ந்துநீ வாழலாமே.

தமயந்தி.

விண்ணுடர் சொன்னதுவு மெய்ப்படலேயோ மனது ?
கண்ணாளா உன்வடிவைக் காணமனங் காதலித்தேன்.
என்னுது மெண்ணுவதேன் ? ஏழையின்மேற் கோபமினி
பண்ணுதென் முகம்பார்த்துப் பழையவடி வெடுப்பீரே-

நளன் : என் சுயரூபமெடுக்கும்பொருட்டு எனக்கு வரப் பிரசாதமான வஸ்திரம் ஒன்றுண்டு ; அதையெடுத்து இதோ ஒரு நொடியில் வருகிறேன் : பெண்ணரசே ! (போகிருன்.)

தமயந்தி : ஆரடி பாங்கிமாரே ! என் தாய்தந்தையரை யும் மக்களையும் அழைத்து வாருங்களடி.

நளன் [பழையவடிவெடுத்துத் திரும்பிவந்து]

ஆசையு மறிவும் உன்தன் அன்பையும் அறிவேன்பெண்ணே.
பேசரும் விண்ணோர்வார்த்தை பேதமேயில்லை. ஆனல்
வாசுகி யெனும்பாம்பன்று வனத்தினில் எனக்களித்த
தூசினை அணிந்திப்போது சுயவடி வானேன் பாராய்.

[இச்சமயத்தில் வீமராஜன் முதலானவர் வந்துசேர]

நளன்.

அலைகட லுலகில்வாழ்வோ ரனைவரு மிகழ்வதாக
நலமிலாச் செய்கையாலே நகர்முதல் யாவும் தோற்றேன்.
கலிதேவன் மாயையாலே கானகந் திரிந்துவந்தேன்.
வலிவுள்ள மாமாஉன்தன் மலரடி போற்றிபோற்றி.

வீமராஜன்.

மன்னவர் மன்ன வாழி ! மகுடாபி ஷேகா வாழி !
கன்னல்வில் மதன வாழி ! கனகபூ ஷணனே வாழி !
மின்னெளி தமயந்தியும் மேன்மையா மக்களோடும்
என்மரு மகனேநீயும் எந்நாளும் வாழிவாழி !

ருதுபன்னன்.

பாரெலாம் புகழ்படைத்த பாக்கியவானே ! உம்மைத்
தேரினை யோட்டவைத்த செய்கையும் நீதியாமோ ?
நேராக என்மனத்தில் நிருபனென் றறிந்திருந்தால்
சீராயென் அரசையீந்து திருப்பணி செய்குவேனே.

நளன்.

நல்லது பயப்படாதே : நம்முடைச் செயலீதல்ல.
வல்லவன் கலிதான்செய்த வஞ்சக மீதாமப்பா.
எல்லோரு மாவிந்தத்திற் கின்றையதினமே போவோம்.
சொல்லரும் ருதுபர்ன்னுநீ சுகமுடன் வருகுவாயே.

27. தொன்மை மறவேல்.

ராமசுவாமி "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை" என்பதற் கிணங்கப் பிதுர் வாக்கிய பரிபாலனம் பண்ணும் பொருட்டுப் பதினான்கு வருஷ காலம் வனவாசஞ் செய்து அப்பால் அயோத்தியா நகரம் வந்துசேர்ந்தார். அவருடைய பட்டாபிஷேகத்துக்கு அவசியமானவைக ளெல்லாம் சித்தமானதும், முனிவரும் மன்னரும் மந்திரிமார்களும் சேனைவீரரும் நானாமனிதரும் புடைசூழ்ந்து நிற்க, சிறிய திருவடியான ஆஞ்சநேயர் சிங்காதனத்தைத் தாங்க, வாலிபுத்திரனான அங்கதன் சுவாமியின் உடைவாளை ஏந்தி நிற்க, பரத மகாராசன் வெண்கொற்றக் குடையைப் பிடிக்க, லக்ஷ்மணரும் சத்ருக்கனரும் இரண்டுபக்கத்திலும் சாமரைவீச, மங்கள வாத்தியங்கள் கோஷிக்க, அந்தணர்கள் அபிஷேகித்து அருச்சித்து ஆசிகூறிச் சிறப்புச்செய்த கிரீடத்தைக் கங்கைக் குலாதிபர்கள் எடுத்துக்கொடுக்க, பிரமருஷி சிரேஷ்டரான வசிஷ்டமகாமுனிவர் அதனைத் தமது கைகளால் வாங்கி, மந்திரமொழிகளைச் சொல்லி, ராமசுவாமியின் முடியில் தரித்து, அக்ஷதை தூவினார். அப்போது, துந்துபி முழங்கிற்று: மலர்மாரி பெய்தது.

இவ்விதமாக ராமர் கிரீடந் தரித்துச் சீதாபிராட்டி சமேதராய்ச் சிங்காசனத்தில் வீற்றிருக்கும்போது, சீதை யானவள் அந்த வைபவத்தைக் கண்டு, 'சுவாமி எல்லாச் சம்பிரமங்களையுங் கைவிட்டு அரணியவாசஞ் செய்தகாலத் தில், அங்கு எதிர்ப்பட்ட குகப்பெருமானைக் காலத்துக்கேற்ற கோலமாய்ச் சரிசமானமாக நேசித்தனரே. அந்தக் குகன் இந்தத் தறுவாயில் இங்கு வந்தால், அவ்விதமாகவே நேசம்பாராட்டுவாரோ' என்று மனதில் ஒரு சந்தேகம் கொண் டாள். இது நிற்க.

அப்போது "அச்சையிலுமுண்டு பிச்சை" என்கிறபடி அயோத்தியில் நித்திய தரித்திரனாய்ப் பிச்சையேற்றுக் காலங் கழிப்பவனும், ராமசுவாமி இளைஞராய் ராஜவீதியில் விளை யாடுகையில் காணுந்தோறும் ஆசையுடனே எடுத்தணைத்து முத்தமிட்டுக் கொஞ்சுகின்றவனும், ராமர் வனவாசம் பண்ணப் போனதுமுதல் அழுதகண்ணுஞ் சிந்திய மூக்குமாக இருந்தவ னுமான வறியோனொருவன், இராமர் அயோத்திக்கு வந்து பட்டாபிஷேகம் செய்துகொள்கிறார் என்று கேள்விப்பட்டவுட னே, துவாரபாலகரையும் பொருள் செய்யாமல், சரேலென்று உள்ளே புகுந்து சிங்காசனத்தின் அருகிலடைந்து, "அடா ராமா" நீ எப்போதடா வந்தாய்?" என்று சொல்லிக் கட்டிக் கொண்டழுதான். இப்படி அவனழ, அதன்மேல் ராமரழ, இதைக் கண்ட அரசர் முதலானவர்கள் "இதென்ன கொள்ளை? எவ னோ பித்தம் பிடித்த பிச்சைக்காரன் ஓடிவந்து பித்தமேலீட் டினால் கட்டிக்கொண்டழுதால், இவரும் அவனைக் கட்டிக்கொ ண்டழுகிறாரே. அவனைப் பிடித்த பைத்தியம் இவரையும் பிடித்ததோ?" என்று பிரமித்தார்கள். அவனும் "அப்பா, ஏன் அழுகிறாய்? அழாதே: முகம் வீங்கிப்போகிறதே. உன் முகத்தைக் கொண்டுவந்து காண்பித்தாயே, இதுவே போதும் என்று சொல்லி, அழுக்கு நிறைந்த தன் கந்தைத் துணியின்

முன்றானையால் அவருடைய கண்ணீரைத் துடைத்துப்போய் விட்டான். அப்போது ராமர் சபையோரைப் பார்த்து, "பதினான்கு வருஷங்களுக்கு முன்னே பரலோகமடைந்த என் தந்தையை இன்றுகண்டேன்" என்றார். அதுகேட்டு யாவரும் "இதென்ன அதிசயம்? பிச்சைக்காரனைப் பிதா என்கின்றனரே. இவர்க்குப் பித்தேறியது மெய்யேபோலும்" என்றெண்ணியிருந்தார்கள். அப்போது ராமர் "கேளுங்கள்.— என்னை முனீந்திரர்கள், பிரமசுவரூபி என்பார்கள். பந்துவர்க்கத்தினர், இரகுநாதன் என்பார்கள். அரசர்கள், தாசரதி என்பர். வேட்டகத்தினர், என்பெயரைச் சொல்ல லாகாதென்று என்னைச் சீதாபதி என்பர். என் பிதா மாத்திரம், 'அடா ராமா' என்றழைப்பார். அவ்விதமாகவே இந்த மகாராசனும் என்னை அழைத்தபடியினாலே, என் தகப்பனாரை இன்று கண்டேன் என்றேன்" என்று சொன்னார். அவ்வளவிலே எல்லோரும் "அடட! இவருடைய சௌலப்பிய குணம் எவருக்குண்டு. 'தொன்மை மறவேல்' என்பதை இவரிடம் கண்டோம்" என்று ஆனந்தித்தார்கள்.

இதையெல்லாங் கண்டமாத்திரத்தில் சீதாதேவியார் திருவுளத்தில் தோன்றியிருந்த சந்தேகமும் தானே நிவர்த்தியாயிற்று.

28. வேர்க்கடலை.

வேர்க்கடலைக்கு நிலக்கடலை - கடலைக் காய் - மல்லாக் கொட்டை-மணிலாக்கொட்டை எனப் பல பெயர்கள் வழங்கி வருகின்றன. அமெரிகாவில் மானில்லா என்னும் ஊரிலிருந்து வருகிற வேர்க்கடலையை யூரபியர் மானில்லா என வழங்கலுற்றனர். அது இங்க்லிஷ் மூலமாய்த் தமிழில் மணிலாக் கொட்டை என வழங்கலாயிற்று. இது புன்செய்ப்பயிர். இதற்குக் கரிசல் நிலம் உதவாது. குறுமணல் தரையும் செம்

மணல் தரையும் இது பயிராவதற்கு ஏற்ற நிலம். களிமண்ணில் காய் பெருக்கும்; ஆனால் வெட்டியெடுப்பது கஷ்டம்.

இந்தப் பயிருக்கு இரண்டு உழவு போதும். ஆழமாக உழவேண்டிய அவசியம் இல்லை; நாலு அங்குல ஆழம் போதுமானது. இந்தப் பயிருக்கு எருவும் ஈரமும் அதிகம் வேண்டும். ஆட்டுக்கிடை நல்ல உரம். மாட்டெருவும் போடுதல் வேண்டும். ஓர் ஏகருக்குப் பத்து வண்டி வரையில் போடலாம். அதிகம் போடுவதும் நன்மையே. அமெரிகர் எலும்புத்தூள் - சாம்பல்- இந்திரவஸ்து எரு ஆகிய இவைகள் இடுகின்றனர். தாளித்த சுண்ணாம்பை நிலத்துக்குத் தக்கபடி ஐம்பது மணங்கு வரையில் பயிரின்மேல் தூவுவார்கள். எருவோடு சுண்ணாம்பைக் கலந்தால், விளைச்சல் அதிகப்படுகின்றது. இது பூசாரத்தை உறிகிற பயிராதலால், ஒரே நிலத்தில் அடுத்தடுத்து இதைப் பயிர் செய்தால் பலன் குறைந்துகொண்டே வரும்.

மேல் தோட்டை உடைத்தெடுத்த விதைக்கொட்டைகளை ஓரடிக்கு ஒன்றாக ஈரலித்த தரையில் நான்கு விரற்கிடை ஆழத்தில் ஊன்றவேண்டும். இரண்டாவது உழவில் இங்ஙனம் ஏரின் பின்னாக உழவுசாலில் விதையைப் போட்டு மண்ணை மூடிக்கொண்டு போகலாம். விதைக்கிற கடலை நன்றாய் முற்றினதாக இருக்கவேண்டும். விதைப்பதற் குரிய காலம் ஆடி ஆவணி மாதம். ஆடியில் விதைப்பது தைமாதத்தில் அறுவடையாகும். நன்செய் நிலத்தில் விதைப்பவர் பங்குனிமாதத்தில் விதைக்கிறார்கள். ஓர் ஏகரா நிலத்துக்கு, பட்டணம்படி சுமார் முப்பது படி விதை வேண்டும். நாற்பது கலன்முதல் அறுபது கலன் வரையில் பலன் கிடைக்கும். ஒரு சதுர கஜத்துக்கு ஒருபடி காய் கிடைத்தால் அது நல்ல விளைச்சல் என்கிறார்கள். காய்களின் நிறம் மண்ணின் நிறத்துக்கு ஏற்றபடி கறுப்பாகவோ சிவப்பாகவோ வெள்ளையாகவோ இருக்கும். இதன் கொடி தழை முதலியன கால்நடைகளுக்கு நல்ல தீவ

னம். ஆவாரங் குழைபோல இந்தக் கொடியை வயலுக்கு உரமாகவும் போடலாம்.

விதைத்து முப்பது நாள் ஆனபிறகு ஒரு களை எடுக்க வேண்டும். நிலம் புல்புற்றியதாக இருந்தால், மறுபடியும் களை சுறண்டியைக் கொண்டு கொத்திக்கொடுத்தல் வேண்டும். கொடி படர்ந்தவுடனே கணுக்களின்மேல் கொஞ்சங் கொஞ்சம் மண்போட்டு மூடினால் அதின் கீழே கிழங்கு நன்றாய்ப் பிடிக்கும். களையெடுப்பதும் உரம்போடுவதும் தவிர, இந்தப் பயிருக்கு ஸாதாரணமாய் வேறு உபசாரம் வேண்டுவ தில்லை. நெற்பயிர்போல் இந்தப் பயிரில் தண்ணீர் கட்டி நிற்கக்கூடாது. நிலம் வரண்டு காய்ந்துவிட்டால், பூவெடுக்கிற வரையில் தோட்டப்பயிருக்கு ஒப்பந்தம் வாய்க்கால் போட்டு ஒரு மாசத்தில் ஏழு தண்ணீர் இறைக்கவேணடும். அதற்கு மேலும் நிலம் காய்ச்சலுக் கிடமாயிருந்தால், எட்டில் பத்தில் தண்ணீர் இறைக்கலாம். தோட்டப் பயிர்போல் இந்தப் பயிருக்கும் பாத்தி கட்டித் தண்ணீர் இறைப்பது நலம். இப்படிச் செய்வதனால் பலன் அதிகமாகும்.

இந்தப் பயிருக்குப் புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மாதங்களில் பூச்சி விழுகிறதுண்டு. அப்படி விழுந்தால் இலை கறுத்துப்போகும். இலையில் சிவப்புப் புள்ளிகள் தோன்றும். தண்ணீரைத் தளிரின்மேல் இறைத்தால் மாறிப்போகும். இந்தப் பயிரைத் தனித்தும், எள் ஆமணக்கு துவரை தினை சணல் வரகு ஆகிய இவைகளுடன் கலந்தும் விளைப்பதுண்டு. தனித்த பயிரின் ஆமிஷம் இதில் கிடையாது.

பயிர் விளைந்தவுடனே இலையும் கொடியும் பழுத்துப் போகும். அந்தப் பருவத்தில் கொடியைச் செதுக்கிப்போட்டுத் தரையை உழுதாவது வெட்டியாவது காய்களை எடுக்க வேண்டும். கடலை விளைவான பிறகு தரை மிகவும் காய்ந்து போய் விட்டால், தண்ணீர் இறைத்தோ வீசியோ நிலத்தை

ஈரலிக்கச் செய்துகொண்டே காயை எடுக்கவேண்டும். நல்ல விளைச்சலானல் ஏழிலொரு பங்கும், மட்டான விளைச்சலானல் ஐந்து அல்லது ஆறிலொரு பங்குமாகப் பலனெடுப்புக்குக் கூலிகொடுப்பது வழக்கம். மூன்றுபடி கடலைக்காயைத் தோட்டை உடைத்தெடுத்தால் ஒருபடி கடலை தேறுகடையாகும். கடலை விளைந்து கைக்கு வந்தவுடனே தூற்றிப் பதர் நீக்கி, ஏழுநாள் களத்தில் காயப்போடவேண்டும். அப்பால் கொண்டுவந்து சுட்ட சாலில் போட்டு மேலே சாம்பலை இட்டு மூடிவைத்தால், வண்டு முதலானவை விழமாட்டா.

இந்தக் கடலை வெல்லப்பாகில் சேர்த்து உண்டை பிடித்து உண்ண உதவும். சும்மா வறுத்தும் தின்கிறார்கள். இந்த எண்ணெயில் பணியாரங்களைச் செய்யலாம். இந்த எண்ணெயிட்டுத் தாளித்த பதார்த்தங்கள் துப்புரவாக இருக்கும். இந்த எண்ணெய் பித்தம்: அதற்கு மாற்று வெல்லம். இந்த எண்ணெய் சோப்புக்கட்டி செய்யவும் விளக்கெரிக்கவும் உதவியாகும். இந்த எண்ணெயிட்ட விளக்குப் பிரகாசமாய் எரியும்.

கடலையை நன்றாகக் காயவைத்துப் பட்டணம் படியால் பத்துப்படி செக்கிலிட்டு ஆட்டினல், மூன்றே யரைக்கால் படி எண்ணெய் காணும். சீமை யந்திரங்களில் இட்டு ஆட்டினல் பத்துக்கு ஐந்து வீதம் காணும். அமெரிகாவில் முதல்தரம் கண்ட புண்ணாக்கை எடுத்துத் துடைத்துத் தண்ணீர் தெளித்து மறுபடியும் ஆட்டுவார்கள். அதனல் முதல் கண்டதில் பாதியளவு எண்ணெய் வரும். மறுபடியும் மூன்றாவது முறை புண்ணாக்குக்கு அனல் காட்டிப் பிழிய மீந்திருக்கும் எண்ணெய் கிடைக்கிறது. முதலிரண்டு தரம் பிழிந்த எண்ணெய் சாப்பாட்டிற்கும் பணியாரங்களுக்கும் உதவும், மூன்றாவது கிடைப்பது சோப்புக்கட்டி செய்ய உதவும். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகிற புண்ணாக்கை யூரபியர்கள் மறுபடியும் ஆட்டி

எண்ணெய் எடுத்துக்கொண்டு திப்பியை உரமாக உபயோகிக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் கடலைக்காய்ப் புண்ணாக்கு ஆடுமாடுகளுக்கு உணவாகிறது. நிலத்துக்கும் எருவாகிறது. வாழை கரும்புகளுக்கு இந்த எருவை இட்டால் அவை நன்றாய்ப் பலிதமாகின்றன. நன்செய் நிலத்தில் ஓர் ஏகருக்கு எழுநூறு ராத்தல் உரம் வைக்கலாம்.

29. ஒரு பரம லோபி

ஒருநாள் ஒரு கனவானிடத்தில் சில இசைப்புலவர் வந்து இசைபாடினர். முதலில் ஒரு பதம் பாடினவளவில், கனவான் சபாசென்று மெச்சி, அருகிலிருந்த காரியஸ்தர்களை நோக்கி, "அவர்களுக்குச் சோடு சால்வை வெகுமதி கொடுங்கள்" என்று சொன்னான். அந்த ஸந்தோஷத்தால் இசைப் புலவர் உசிதமான ஒரு சிந்து பாடினர். அப்பொழுது கனவான், சிரக்கம்பம் கரக்கம்பம் செய்து, "இந்த ஸங்கீதப் புலிகளின் கைக்குப் பொற்காப்பும் கொலுசும் கொண்டுவந்து போடுங்கள்" என்றான். அதன்மேல் அகமகிழ்ச்சி யடைந்து அப்புலவர்கள் ஒரு விசித்திரமான வண்ணம் பாடினார்கள். அதைக் கேட்டதும் கனவான் பளாபளா என்று கொண்டாடி, "இந்தப் புலவர் சிகாமணிகளுக்குக் கனகாபிஷேகம்பண்ணி விலையுயர்ந்த ரத்தினகண்டி வெகுமானம் செய்யுங்கள்" என்றான். ஸங்கீத வித்வான்கள் ஆநந்தப்பிரவாகத்தில் அமிழ்ந்தவர்களாய் நவமான ஒரு கீர்த்தனை பாடினார்கள். உடனே கனவான் அவர்களுக்குத் தங்கச் சிவிகை பரிசு கொடுக்கச் சொன்னான்.

இவ்விதமாக அவன் யானை குதிரை நிலம் முதலாகிய பல வெகுமதிகளும் கொடுங்கள் கொடுங்கள் என்று ஓயாமல் கர்ணம்சமாய்ச் சொல்லச் சொல்ல, அவர்களுக்கு மேலும் மேலும் பரமாநந்தம் உண்டாகி, ஒப்பனையும் கற்பனையுமாக

நெடுநேரம் சலிப்பில்லாமல் பாடினார்கள். அதனால் குரலும் கம்மி வாய்திறந்து வசனிக்கவும் கூடாமல் இளைப்பும் களைப்பும் மேலிட்டுப் பாடுவதை நிறுத்தினார்கள். பரிசுகொடுக்கும்படி கனவான் சும்மா வாயினால் சொன்னதேயன்றிக் கையினால் ஒன்றும் கொடுக்கவில்லை. புலவர்களோ "இனி நம்முடைய தரித்திரம் அதமாய் விடும்" என்றெண்ணி, கனவான் கொடுக்கச்சொன்ன பொருள்களெல்லாம் வரும் வருமென்று காத்திருந்தார்கள்.

பின்பு கனவான் "வீணாக ஏன் காத்துக்கொண்டிருக்கிறீர்கள். செலவு பெற்றுக்கொள்ளலாமே" என்றான்.

வித்துவான்கள்—தாங்கள் அமிதமாகத் தயைசெய்த பரிசு ஒன்றும் எங்களுக்குச் சேரவில்லையே.

கனவான்—ஏதுக்குக் காணும் உங்களுக்குப் பரிசு கொடுப்பது?

வித்துவான்கள்—நாங்கள் பாடினதற்காக.

கனவான்—எனக்கு ஸந்தோஷம் உண்டாகும்படி நீங்கள் பாடினதினால், உங்களுக்கு ஸந்தோஷம் உண்டாகும்படி நான் சொன்னதேயன்றி வேறில்லை. நீங்கள் கொடுத்ததும் நான் கொடுத்ததும் ஓசைமாத்திரத்தால் ஒக்கும், ஆகையால் நீங்கள் போய்வாருங்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டு அவர்கள் சஞ்சலத்தோடு போய்விட்டார்கள்.

30. வஞ்சகக் கள்வர்

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலை நீ ணெறியாரே!
திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர், பொல்லாத கள்ளரினி
யாரோ வென்றால்,
கொழுங்கள்ளர் தம்முடன்கும் பிடுங்கள்ளர் திருநீறு
குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ளர் ஆசாரக் கள்ளரிவர்
ஐவர் தாமே.

—பழமொழி விளக்கம்

31. பலதீட்டுக் கோருமுழுக்கு

ஒருபிராமணன் ஒருநாள் ஒரு குளத்தில் இறங்கி நீர் வேட்கையால் கையில் தண்ணீர் அள்ளினன். கரைமேலுள்ள நாவன்மரத்தின்மீதிருந்து ஓர் எச்சிற்கொட்டை அதில் விழுந்தது. தாகத்தின் கொடுமையால் அதை அவன் நன்று பாராமல் தண்ணீரைப் பருகிவிட்டான். பிறகு "இக்கொட்டை இங்கு என்னமாய் வந்தது? பறவையோ குரங்கோ இன்னு மேதேனுஞ் ஜந்துவோ போட்ட" தென்று யோசித்து, அண்ணாந்து அம்மரத்தை உற்றுப்பார்த்தான். அதில் ஒரு சிறு பையனைக் கண்டு, 'நீ யார்?' என்று கேட்க, அவன், "ஐயா! நான் பறைப்பையன். இதிலேறிப் பழந்தின்று கொட்டைகளை உமிழ்ந்தேன்" என்றான். அதைச் செவியுற்ற அந்தணன், மிக்க வெறுப்பும் விசனமும் அடைந்து, பறைய னெச்சிலைத் தின்ற யான் எவ்வாறு பரிசுத்தனவேனென்று தவித்துக் கொண்டேவந்து, ஊரிலுள்ள சாஸ்திரிமாரிடம் இதனை அறிவித்தான். அவர்கள் "ஏக வாராசனத்தோடு கங்கைக்குச் சென்று ஸ்நானஞ்செய்து வருவையாயின், அப்பாவம் தீர்ந்து நீ பரிசுத்தனவாய்" என்று புகன்றனர்.


அதைக்கேட்டு, மறையோன் அங்ஙனமே செய்யத் துணிந்து பிரயாணப்பட்டு, மூன்று நாலு நாள் ஆனபின் ஒரு கிராமத்தில் ஒரு பிராமணன் வீட்டுத் திண்ணையில் இரவில் படுத்திருந்தனன். அப்போது, பகலில் நல்லுணவில்லாமையால் தூக்கம்பிடியாமல், அங்கிருந்த மாடத்தில் கையிட, அதில் ஒரு பாக்கு அகப்பட்டது. அதனை அவன் வாயில் போட்டுக் கொண்டு சற்றுநேரம் குதப்பி நறுக்கென்று கடித்தனன். வீட்டுப் பார்ப்பனி அவ்வோசையைக் கேட்டு ஓடிவந்து, "ஓ ஐயரே! நீர் படாரென்று கடித்தீரே அது யாது?" என்று வினவ, பிராமணன் "இம்மாடத்தி லிருந்த ஒரு பாக்கு" என்றான். அவள் ஆச்சரியப்பட்டு, "ஐயா! உம்முடைய பல்லின் உரப்பை என்ன சொல்வேன்? நான் வீட்டுக்குப் போகக்கூடாமையால் நேற்றிரவு இங்குப் படுத்துக்கொண்டு இப்பாக்கை நெடுநேரமளவும் வாயிற்போட்டு ஊறவைத்துக் கடித்துப்பார்த்தும் கடிக்கக்கூடாமல் இம்மாடத்து உமிழ்ந்து போனேன். அதை எடுத்துக் கடித்தீரே! உம்முடைய பல்லின் திண்மை எனது கண்திருஷ்டி படாமல் நெடுநாள் வாழ்க" என வாழ்த்திப்போயினள்.

பின்பு மறையோன் "அந்தோ! நமக்குப் புண்ணின் மேல் பூச்சியுங் கடித்ததே" என்று வியாகுலப்பட்டுக்கொண்டே எழுந்துபோய், உதயமாகி ஐந்தாறு நாழிகைக்கு மற்றோரூரில் ஒரு பூசுரன் வீட்டுத் தெருத்திண்ணையில் உட்கார்ந்தனன். குளத்துக்குப் போயிருந்த அவ்வீட்டு விதவை வந்து பார்த்து, "ஐயா! இன்றைக்கு ஒரு பிராமணனுக்கு அன்னமிடவேண்டும், யாரையுங் காணோமென் றிருந்தேன். தெய்வாதீனமாக உம்மைக் காணச் சந்தோஷமாயிற்று. நீர் இங்கேயே அமுதுகொள்ளும். எழுந்து குளத்துக்குப்போய் ஸ்நான முதலியன முடித்துக்கொண்டு வாரும்" என்றனள். அது கேட்ட விப்பிரன், "சோறு அகப்படுகிறதாயினும் எச்சின்

மேலெச்சில் நேரிட்டதற்கு என்ன செய்யலாம்" என்று சிந்தித்து, "கடவுள் செயல், 'பலதீட்டுக்கொரு முழுக்கு' ஆதலால் 'கங்காஸ்நானமே எல்லாவற்றிற்கும் பிராயச்சித்தம்' என்று தேறி, முழுகிவந்து சாப்பிட உட்கார்ந்தனன். அவ்வமங்கலி சோறு கறி முதலியன பரிமாறி உபசரித்துப் புசிப்பித்து, "ஐயா! நான் உங்களுக்குப் போதுமானபடியே சமைத்து வைத்துத் தண்ணீர் கொண்டுவரப் புழைக்கடை வாய்க்காலுக்குப் போயினேன். அதற்குள் ஏதோ ஒரு நாய் வந்து அதில் கொஞ்சம் தின்றுபோயிற்று, என்செய்வேன்? பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று உபசார வார்த்தைகள் சொல்லினள்.

பார்ப்பானே, "முதலில் பறையனெச்சில், இரண்டாவது உதகியெச்சில், மூன்றாவது சுணங்கனெச்சில், இப்படி ஒன்றின்மேலொன்று அசுத்தமே நேரிட்டுவருவதனால், இனி எங்கும் உணவுகொள்வது மில்லை, சயனிப்பது மில்லை" என்று மனவுறுதிகொண்டு, நேரே கங்கைக்கரைக் கேகிக் கங்கையைத் தரிசித்து, மணிகர்னிகாகட்டம் முதலான துறைகளில் பிராமணர் அனேகர் ஸ்நானஞ்செய்வதும் பூசை நடத்துவதும் புராணம் படிப்பதுமா யிருந்ததனால், அவ்விடங்களில் சென்று தன் பாவங்களுக்குச் சங்கற்பஞ்செய்துகொண்டு ஸ்நானஞ்செய்ய வெட்கப்பட்டு, இவைகளுக்குச் சிறிது தூரத்தில் இருந்த ஒரு துறையில் முழுக எத்தனித்தான்.

அத்துறை பறையர் தங்கள் தங்கள் இனத்தாருடைய பிரேதங்களின் எலும்புகளைக் கொணர்ந்துபோட்டு முழுகிப் போகும் இடம். ஐயோ? இப்பேதைப் பார்ப்பான் அது தெரியாமல் ஆழமான நீரிலிறங்கி அமிழ்ந்து, அகமரிஷண சூக்தம் சொல்லிக் கொண்டிருக்கையில், சில புலையர் கடத்தில் எலும்பைக் கொணர்ந்து அதில் எறிந்துவிட்டுத் தாங்களும் முழுகியெழுந்தனர். இதற்குள் அவ்வேதியனும் மந்திர



PYRAMIDS:—பிரமிட் என்னும் கோபுரம்.

முடித்து எழுந்திருக்க, இச்சண்டாளர் அவனைக் கட்டிக் கொண்டு, "எங்கள் அப்பனே! வீட்டிற்கு வா, போவோம்" என்று வலிமை செய்தார்கள். இவன் "நான் பிராமணன், புலைய னல்லேன்; என் மார்பிற் பூணூலைப் பாருங்கள்" என்று கூவினன். அவர்கள் விடாமல் "உங்கள் அப்பன் இறந்தால் அவனெலும்புகளைக் கங்கையாற்றில் எறியுங்கள். உடனே அவன் நல்ல ஜனனமெடுத்துக் கரையேறுவான்" என்று நம்முடைய குருக்கள் சொன்னார். அப்படியே நீ பிராமண ஜன்மமெடுத்துக் கரையேறினய். உன்னை விடமாட்டோம். நம்முடைய வீட்டுக்கு வந்து, சேகரித்து வைத்த நல்ல உணவுகளைப் புசித்துப் பின்பு தனித்திரு" என்று நிர்ப்பந்தப்படுத்தினர். பார்ப்பான், கொய்யோ முறையோ வென்று கூவித் தன் தலையில் அடித்துக்கொண்டு அழுதான். அப்போது, கரையிற் போகாநின்றவர்களும் அதிகாரிகளும் வந்து விசாரித்து, அவனை விடுவித்து, இச்சண்டாளரை நோக்கி, "அடா புத்தியீனர்களே! உங்கள் குருக்கள் சொன்னது மறுஜனனத்திற்காம். கரையேறுவதென்பது பாவத்தினின்றும் நீங்குவதற்காம்" என்று சொல்லி அனுப்பிவிட்டனர்.

32. பிரமிட் என்னும் கோபுரம்

எகிப்து தெசத்தில் பிரமிட் என்பவை, நாற்சதுரமாய் அல்லது நீண்ட சதுரமாய், ஆழ இடப்பட்ட அஸ்திவாரத்தின்மேல், நாற்புறமும் முக்கோண வடிவாய் அடியில் விரிந்து மேலே குவிந்து முடிகின்றனவாய்க் கட்டியிருக்கும் கோபுரங்களாம்.

எகிப்து தேசத்தின் மத்தியபாகத்தில், இவ்வகையான கோபுரங்கள் ஏறக்குறைய அறுபது வரையில் இருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை மூன்று. பூவுலகில் முன்னோர்கள் நிர்மாணித்த யாவற்றிலும் அதிக பெருமையும் உயர

மும் உடையனவாக மதிக்கப்படுதலால், முன்னேயோர் அம் மூன்றையும் பூர்வ அதிசயப் பொருள்களில் ஒன்ருக எண்ணி வந்தனர்.

இம்மூன்றினுள் மிகப்பெரியது "கியாப்ஸ் பிரமிட்" என்பது. கியாப்ஸ் என்னும் பெயர் பெற்றிருந்த ஓர் அரசன் கட்டியதாகையால் அது அப்பெயர் பெற்றது. இந்தக் கோபுர நிலையின் அடித்தளம் அரைகாணி நில விஸ்தீரணமுள்ளது. இதன் உயரம் 800 அடி என்றும், அடித்தள அகலமும் நிகளமும் தனித்தனி 800 அடி யென்றும், கியாப்ஸ் என்னும் அரசனுடைய தேகம் அக்காலத்து வழக்கத்தின்படி தைலமாட்டி, அழிவுருதபடி அதனுள் கல் பிரேதப் பெட்டகத்தில் வைத்திருக்கிற தென்றும், கோபுரம் கட்டி முடிவுபெறுதற்கு 20 வருஷம் கொண்டதென்றும், அதற்குச் செலவான தொகை ஏறக்குறைய 31 லக்ஷம் ரூபா என்றும், அந்தக் கோபுரத்தில் ஒரு கல்லில் சிலாசாசனமாக வெட்டி எழுதப்பட்டிருந்த தென்றும், ஹெராடொடஸ் என்னும் சரித்திர வாசிரியர் எழுதிவைத்திருக்கிருர்.

இக்காலத்தில் தேசதேசங்களாய்ச் சுற்றிப் பார்த்து வரும் பிரயாணிகள் இந்தப் பெரிய கோபுரத்தின் அடித்தள அகல நிகளம் சதுரங்கொண்டதாய்த் தனித்தனி 767 அடி என்றும், உச்சிமுதல் அடிவார வரையில்உள்ள நீளம் 614 அடி என்றும், உச்சி முதல் உள்ளூற அதன் நிறுத்திட்டமான உள்ளுயரம் 479 அடி என்றும், எழுதிவைத்திருக்கின்றனர். இங்ஙனம் அந்தக் கோபுரத்தின் அகல நிகள உயரத்தின் அளவுகள் முன்னிலும் குறைவுபட்டுப் போனதற்கு, அடிவாரம் மணல் மூடிப்போனதே காரணம். இந்தக் கோபுரத்தைச் சுற்றிக் கல் மதில் எழுப்பி வடபுறத்தில் வாயில் வைத்திருக்கிறது. முன்னே அவ்வாயில், மதிலோடு மதிலாய் வைக்கப்பட்ட ஒரு படலைக்கல்லால் மூடப்பட்டிருந்தது. இப்போது அந்தக் கல்

லைப் பேர்த்தெடுத்து அப்பால் வைத்திருக்கிறார்கள். கோபுரத்தின் அடித்தளத்திற்குக் கீழாக அகலமான நிலவறை ஒன்றிருக்கின்றது. அதற்கு நேர்மேலாக ராணிமாளிகையும், அதற்கு நேர்மேலாக ராஜமாளிகையும் இருக்கின்றன. இந்தக் கோபுரத்தின் உள்ளே, நக்ஷத்திர முதலிய வானஜோதிகளைப் பார்த்து ஜோதிஷ கணிதம் குணிக்கும்பொருட்டாக ஒரு சாயலான குழாய்த்துவாரம் 342 நீளத்தில் செய்துவைத்திருக்கிறார்கள். கோபுரத்தின் உள்ளே நின்றுகொண்டு மேற்படி குழாய்த் துவாரத்தின் மூலமாய் நோக்கிப் பார்த்தால், பட்டம் பகலிலும் வானஜோதிகளைக் கண்குளிரக் காணலாம். இக்கோபுரத்தினுள்ளாக அரிய கிணறு ஒன்று வெட்டியிருக்கிறது. கோபுரத்தின்மீது உயர ஏறிச்செல்வோர்கள் அடிவாரத்தில் நிற்பவர்க்குச் சிறு கிருமிகள்போல் காணப்படுகின்றனர்.

இரண்டாவது பிரமிட் மேல் சொன்ன முதல் கோபுரத்திற்குத் தென்மேற்கில், 500 அடி தூரத்திற்கு அப்பால் இருக்கின்றது. இதுமுதல் கோபுரத்திலுஞ் சற்றுச் சிறிதாய் இருந்தபோதிலும், மேட்டுப் பாங்கான ஒரு நிலத்தின்மேல் கட்டி வேலைப்பாட்டில் மேலையதனோடு ஒத்திருக்கின்றது. நிலவறை தவிர, இதனுள்ளே வேறு மாளிகைகள் கிடையா. இது கியாப்ஸ் அரசனுக்குப் பின்னே பட்டங்கட்டிக்கொண்டு ஆண்ட அவன் சகோதரனாகிய சிப்பிரினெஸ் என்பவன் கட்டியது. இதன் அடித்தளத்தின் அகலமும் நிகளமும் சம அளவாய் 705 அடி : உச்சிமுதல் அடிவாரமட்டும் வெளிப்புறத்து நீளம் 577 அடி : அதன் உச்சி முதல் நிறுதிட்டமான உள்ளுயரம் 457 அடி.

மூன்றாவது பிரமிட், அழகிலும் சிற்பவேலையிலும் மேற்கூறிய இரண்டையுங் காட்டில் அதிக சிறப்புடையது. இதற்கு மூன்று நிலவறைகள் உண்டு. இது 352 அடி

சதுரம். உச்சிமுதல் அடிவாரமட்டும் வெளிப்புறத்துத் தளம் 283 அடி; உச்சிமுதல் நிறுதிட்டமான அதன் உள்ளுயரம் 219 அடி.

இதுவரையில் எத்தனையோ ராஜ்யங்கள் தோன்றி அழிந்தன. இந்தப் பிரமிட் கோபுரங்களோ, வெட்ட வெளியில் மேகசஞ்சாரமில்லாத ஆகாயத்தினூடு உன்னத உயரங் கொண்டெழும்பி, நாலாயிரம் வருடகாலமாய்ப் பார்ப்போர் எவரும் வியப்படையும்படி நிலைநின்றுவருகின்றன.

33. வாலி இறந்தபின் தாரை புலம்பல்

கண்ணிகள்

1. மன்னவனே! எங்கள் வாலியே!
நல்ல வானர பூபதியே!
இன்னவேளை இந்த மரணம் உனக்கென்று
இருந்ததோ தலைவிதியே.

2. இறவா மருந்தையும் தருவாயே
நீ எப்படி இறந்தாயோ
மறவாதே சிவபூசை செய்கின்ற
வழிபாடு மறந்தாயோ.

3. ஆனைக்கும் அடி சறுக்கும் துள்ளிவிழல்
ஆகா தென்றேனே
சேனைத்துரையே நான் உன்னைக் கொடுத்திங்கே
தெருவிலே நின்றேனே.

4. என் உயிர் நீ ஆனல் உன்மேலே பாய்ந்தகணை
என்மேலே பாயாதோ
உன் உயிர் நான் ஆனல் உன் உயிரோடே
என் உயிர்கூட மாயாதோ?

5. விந்தை மனிதன் கைக்கு நீயும் விழுவாயோ
வேறொரு வாலி உண்டோ
என் தன் உயிர் இன்னம் இருக்குதே
ஐயையோ என்னைப்போல் நீலி உண்டோ.

6. மறைந்து ராமன் கணை தொடுக்காமல்
உன்மேல் வழக்கு தொடுத்தாலே
குறைந்திடாக் கடல் கடைந் தமுதமும் நீ
கொடுப்பாயே கைமேலே.

7. செய்நன்றி அறியாரோ காலர் தூதர்
என்ன தேவரோ மறுபேரோ
ஐயையோ அவர்க்கமுதமும் உன்னைப் போல
ஆர் இனித் தருவாரோ.

8. நான் அடி உன் தன் பிராணநாதன் என்ற
நம்பிக்கை பொய்போமோ
வானரம் பையர்மேல் ஆசைகொண்டெனை
மறந்துவிட்டோடல் ஆமோ.

9. வன்னமேரு முதல் மலையில் உன் கால்வைத்த
வடுவுகள் இனிப் போச்சே
நின்னை மறந்தம்பு போட்ட ராகவன்
நீதிக்கு வடுவாச்சே.

10. மருந்தமுது தந்த சாமிவந்தான் என்று
மகிழ்ந்து தேவர் கண்டாரோ
விருந்தமுது செய்யவா என்றே உன்னை
வேண்டி எதிர்கொண்டாரோ.

34. ராஜநீதி.

ராஜகேசரி என்னும் ஓரரசன் ஆறிலொரு கடமை கொண்டு, பசுவும் புலியும் ஒரு துறையில் நீர் குடிக்கும் வண்ணம், குடிகளுக்குத் தான் பிதா என்று சொல்லும்படி, நீதி தவறாமல் நெடுங்காலம் ராஜ்யபாரம் பண்ணியிருந்தான்.

அவன் தனக்கு மூப்பு வந்தது கண்டு, பரலோக சிந்தை மேற்கொண்டு, "இனி இந்த அரசாட்சி நமக்கு யோக்கியமன்று, பிள்ளைக்குப் பட்டங்கட்டிவிட்டு ஆத்மார்த்தமான காரியங்களைச் செய்யவேண்டும்" என்று ஆலோசித்துக் குமாரனை அழைத்தான். வந்த குமாரனைத் தழுவி முத்தங்கொடுத்து, ஸமீபத்தில் உட்காரவைத்து, முகங்குளிரப் பார்த்து, "அப்பா எனக்குக் கிழத்தனம் மேலிட்டது. ஆதலால் ராஜ்ய பாரத்தை உன் தோளில் இறக்கிவிட்டு நான் உஜ்ஜீவித்தலான உபாயத்தைத் தேடவேண்டும். இதற்கு நீ இணங்குதல் வேண்டும்" என்று சொன்னான். ராஜகுமாரன் தந்தை சொல்லைத் தள்ளாமல் நடப்பதே தன் கடமை என்றெண்ணி அவ்வேண்டுகோளுக் கிணங்கினதை அரசன் குறிப்பால் அறிந்துகொண்டு, ராஜரீகத்துக்கு அவசியமான சில நீதிமதிகளை அரசன் சொல்லலானான்.—

துரைத்தனம் பண்ணுவது எளிதன்று. சோம்பலுக் கிடங்கொடாமல் ராஜகாரியத்திலே எப்பொழுதும் மனம் வைத்திருக்க வேண்டும். பல விதங்களாலும் பரிசோதித்து நியமித்துக்கொண்ட ஒற்றர்களாலும் தூதர்களாலும், ராஜ்யத்தில் நடக்கின்றசெய்திகள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டு, தக்கவாறு காரியங்களை நடத்த வேண்டும். சேனைகளையும் சேனாபதிகளையும் வரிசைக்கேற்ற மரியாதை செய்து அவர்களுக்கு உத்ஸாஹம் உண்டாக்க வேண்டும். ராஜாக்களுக்கு மற்ற பலம் என்ன இருந்தாலும், மந்திரி பலமே அவர்களுக்கு முக்கியமான பலம். மந்திரி இல்லாத யோசனையும் ஆயுத மில்லாத சேனையும் கெடும். மேலும் ஏழைகள் மனநொந்து அழத்தக்க காரியம் செய்யலாகாது. அவர்கள் அழுதால் அழுத கண்ணீரைத் தண்ணீரென்று நினையாதே : ராஜரீகத்தை வேரோடறுக்கிற கூரான வாளாயுதம் என்றே நினை. அரசர்களுக்கு வெற்றி கொடுப்பது, அவர்களுடைய படையும் படைக்

கலமு மாத்திரமேயல்ல ; அவர்களுடைய செங்கோலென்றே நம்பி நட.

"தீர்வில் அன்பு செலுத்தலின் செய்வியோ
ரார்வம் மன்னவற் காயுதமாவதே."

இவ்விதமாகப் பல நீதிகளையும் போதித்துக் குமாரனுக்கு ராஜ்ப பட்டாபிஷேகம் செய்து அரசன் வானப்பிரஸ்தனுய்விட்டான்.

வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்
உய்யத்தாங்கும் உடலன்ன மன்னனுக்கு
ஐயமின்றி அறங்கடவா தருள்
மெய்யில் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ ?

இனிய சொல்லன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமிய வென்றியன்
நினையும் நீதி நெறிகடவான் எனில்
அனைய மன்னற் கழிவு முண்டாங்கொலோ ?

35. நவராத்திரி விரதம்

சுகேது என்னும் அரசன் சுவேதி என்னும் அரசியோடு சுகமாக வாழ்ந்திருக்கையில், தனது பிதிர்வர்க்கத் தாசர்களின் கொடுமையால் அவர்களோடு போர்புரிந்து தோல்வியடைந்து வனசஞ்சாரம் செய்யலுற்றான். பகைவர் விட்ட அஸ்திர சஸ்திரங்களால் உண்டாகிய காயத்தினுலும் பசியினுலும் துக்கத்தினுலும் வியாதியுடையவனுய் நடக்கவும் அசக்தனுனன். மனைவி, தானும் துக்கமுற்றவளாயினும், மனந்தளராமல் நாயகனைத் தோளிலும் முதுகிலும் தலையிலும் சுமந்து திரிந்து, காய்கனி முதலியவற்றை நாயகனுக்கு உண்பித்துத் தானும் உண்டு உயிர்வாழ்ந்திருந்தாள்.

பஞ்சவடியில் தீர்த்தமாட வந்த ஆங்கிரசமுனிவர், அந்த ராஜ தம்பதிகளுடைய வரலாற்றைக் கேட்டறிந்து, அவர்க

ளைப் பஞ்சவடிக்கு அழைத்துக்கொண்டு போனார். அந்தத் தீர்த்தக்கரை, உருத்திரி இலக்குமி சரஸ்வதி என்னும் மூவரும் வாசஞ்செய்கிற இடம். அந்தத் தீர்த்தத்தில் சுவேதியை நீராடச்செய்து, முனிவர் தாமும் நீராடி நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு, புரட்டாசி மாதம் பூர்வபக்ஷம் பிரதமை முதல் மூன்றுநாள் ருத்திரியையும், சதுர்த்திமுதல் மூன்று நாள் இலக்குமியையும், சப்தமிமுதல் மூன்று நாள் சரஸ்வதியையும் மங்கலப் பொருள்கள் கொண்டு பூசிக்கச் செய்து, தசமி தினத்தில் புனர்ப்பூசை செய்து விரதத்தை முடித்து வைத்தார்.

அம் மூவரது அனுக்கிரகத்தால் சுவேதி கர்ப்பமுற்று சூரியப்பிரதாபன் என்னும் பிள்ளையைப் பெற்றாள். அப் பிள்ளை ஆங்கீரசமுனிவரது மகிமையினால் சகல வித்தைகளிலும் வல்லவனாகிப் பகைவரைத் தோற்கடித்து, மாதா பிதாக்களுடன் சென்று பட்டாபிஷேகஞ் செய்துகொண்டு குறைவற வாழ்ந்திருந்தான். அதுமுதல் பரதகண்ட வாசிகள் இவ்விரதத்தை அனுஷ்டிக்கலாயினர்.

சிலர் விதிப்படி உருத்திரி முதலியோரைக் கலச ஆவாகனஞ்செய்து நவமிவரையில் விரதம் அனுஷ்டிக்கின்றனர். சிலர் சப்தமியில் வருகிற மூலநக்ஷத்திரமுதல் அனுஷ்டிக்கின்றனர். பலபேர்களும் நவமிதினத்தில் உருத்திரிக்குரிய ஆயுதவகைகளையும், இலக்குமிக்குரிய சுவர்ன ரத்தினங்களை வைத்திருக்கிற பெட்டிகளையும், சரஸ்வதிக்குரிய புத்தக முதலியவைகளையும் வைத்துப் பூசிக்கின்றனர்.

36. சிந்துபாத் செய்த மூன்றாவது யாத்திரை

மூன்றாந்தரம் கடல்யாத்திரை செய்யவேண்டுமென்று எண்ண முண்டானவுடனே, நானே புதிதாய் ஒரு கப்பல் செய்துகொண்டேன். என்னுடைய சரக்குமட்டுமே அந்தக் கப்பலுக்குப் போதாமையால், இன்னும் இரண்டு மூன்று வர்த்



SINDBAD'S THIRD VOYAGE:—
சிந்துபாதின் மூன்றுவது சப்பல் யாத்திரை.

தகர்களையும் கூட்டிக்கொண்டு ஒருநாள் காற்று வாட்டமாய் வீசியிருந்தபோது பாய்விரித்துப் புறப்பட்டேன்.

சிலநாள் சென்ற பிறகு நிர்மானுஷியமான ஒரு தீவை அடைந்தோம். எங்களுள் சிலர் குடிநீர் கொண்டுவருவதற்காக அந்தத் தீவில் இறங்கினார்கள். அங்கே மிகவும் பெரிதான மூட்டையொன்று இருந்தது. வெளேலென்று ஒரு சிறு குன்றளவு இருந்த அந்த முட்டையைக் கண்டு, இதேன்னவென்று நான் பிரமித்துநின்றேன். கூடவந்த சில கப்பற்காரர்கள் இது கண்டபேரண்டபக்ஷியின் முட்டை என்றார்கள். அந்தப் பக்ஷியைப்பற்றி அடிக்கடி எனக்குக் கேள்வியே ஒழிய, அப்படி ஒரு பக்ஷி இருக்குமென்று அதுவரையில் நான் சிறிதும் நம்பவில்லை. அது ஒரு முட்டைதானென்று எனக்கு மெய்ப்பிக்கும் பொருட்டு அவர்கள் அதைக் கோடரியால் பிளக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் பிளந்து கொண்டிருக்கையில், மேகம் வந்து மறைப்பதுபோல் பெரு நிழலொன்று கீழே தெரிந்தது. அதென்னவென்று அண்ணாந்து பார்க்கையில், மிகப்பெரிதான இரண்டு பறவைகள் தலைக்குமேல் வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அதைக் கண்டவுடனே நாங்கள் வெகு சீக்கிரமாய் ஓடிக் கப்பலில் ஏறிக்கொண்டு உடனே அந்தத் தீவைவிட்டுப் புறப்பட்டோம்.

அதற்குள் அவ்விரண்டு பக்ஷிகளும் தம்முடைய முட்டையை வந்துபார்த்து, அது உடைந்துபோயிருப்பது கண்டு மிகவும் பயங்கரமாய் ஒரு கூச்சலிட்டு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரும்பாறையைத் தூக்கிக்கொண்டு எங்கள் கப்பலைத் துரத்தி ஓடிவந்தது. கப்பலுக்குச் சரியாய் வந்ததும், சிறிது நேரம் அங்கேயே நிலையாய் நின்று நன்றாய்க் குறிபார்த்து, கொண்டுவந்த கற்களை அவைகள் கீழே நழுவவிட்டன. மாலுமி மிகவும் சமர்த்தனானதால் அந்தக் கல் விழப்போகிற தருணங் கண்டு சரேலென்று கப்பலை அப்புறம் திருப்பினான். அதனால்

முதலில் விழுந்த கல் கப்பலில் விழவில்லை; கொஞ்சம் குறிதப்பிக் கப்பலோரமாய்க் கடலில் விழுந்தது. அந்தப் பாறை கடலின் அடிப்புறம் நன்றாய்க் கண்ணுக்குத் தெரியும்படி அவ்வளவு பெரிதாய்க் கடலைத் துளைத்துக்கொண்டு போயிற்றென்றால்; அதன் வேகத்தையும் பருமனையும் நாம் என்னென்று சொல்லலாம்! மற்றொரு பறவை போட்ட கல் குறிதப்பாமல் எங்களுடைய துரதிர்ஷ்டத்தால் நடுக்கப்பலில் விழுந்து கப்பலைச் சுக்கல்சுக்க லாக்கிவிட்டது. அவ்வபாயத்தால் அடிபடாமலும் கடலில் மூழ்காமலும் தப்பினவன் நான் ஒருவனே.

அந்தப் பாறை வீழ்ந்த அதிர்ச்சியினால் உண்டான மயக்கம் தெளிந்தபின்பு கண்ணை விழித்துப் பார்க்கையில், நான் தண்ணீரில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருந்தேன். அத்தருணத்தில் அண்டையில் மரத்துண்டுகள் பல மிதக்கக்கண்டு, அவற்றுள் ஒன்றில் ஏறிக்கொண்டு திரும்பி அந்தத் தீவுக்கே போகலாமென்று பார்த்தேன். ஆனால் காற்று மற்றோர் வழியில் தள்ளிக்கொண்டு போய்விட்டது: பொழுதுபோகிற தருணமாயிற்று. அப்போது வெகுதூரத்தில் ஏதோ ஒரு கப்பல் போகக் கண்டு, அந்தக் கப்பலிலிருந்தவர் துணை செய்ய வருவார்களாவென்று என்னால் கூடிய வரையில் உரத்துக் கூவினேன்; கைகளையும் உயரவெடுத்துக் குறிகாட்டினேன். ஒன்றும் பயன்படவில்லை. அந்தக் கப்பல் அப்படியே போய்விட்டது. இராப்பொழுதாய் இருள் நன்றாய் மூடிக்கொண்டது. அப்பொழுதும் எனக்கு நிராசை பிறக்கவில்லை. உடனே கடலில் மூழ்கிப்போவதைவிட இப்படியேயாவது சிறிதுநேரம் அலைந்துகொண்டிருப்பது நலமென்று, தண்ணீர் தள்ளிக்கொண்டு போகிற வழியே போய்க்கொண்டிருந்தேன்.

அப்படியிருக்கச் சூரியோதயமாகி எதிரே மிகவும் செழிப்பான தீவு ஒன்று தெரிந்தது. அப்போது எனக்கு

உண்டான ஆநந்தத்தை நான் என்னென்று சொல்வேன்! வெகு வருத்தப்பட்டுக் கட்டைபைத் தள்ளிக்கொண்டு போய் அந்தத் தீவில் இறங்கினேன். மதுரமான பழங்கள் நிறைந்த பல விருக்ஷங்களும், அழகான பற்பல செடிகளும், மிகவும் தெளிவான நீரோடைகளுமாய், அத்தீவு ஒரு சிறந்த உத்தியான வனம்போ லிருந்தது. அங்கிருந்தவைகளுள் மிகவும் இனிப்பான சில பழங்களைப் புசித்துக் கொஞ்சம் தண்ணீர் குடித்துச் சற்று நேரம் இளைப்பாறியிருந்தேன்.

கடலோரத்திலிருந்து அந்தத் தீவுக்குள் சிறிதுதூரம் போகையில், அங்கே ஒரு சிறிய நீரோடையின் கரையில் ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். இவனும் நம்மைப்போலவே கடலில் அடிபட்டு வழிதப்பி வந்திருப்பவ னென்றெண்ணி, நான் அவனிடம் போய் அவனுடைய யோகக்ஷேமங்களை வினவ, அவன் சிறிது தலையசைத்தானே யல்லது மாறுத்தரம் ஒன்றும் உரைக்கவில்லை. நீ இங்கே என்ன செய்கிறாய் என்று நான் அவனை மறுபடியும் கேட்க, அதற்கும் அவன் ஒன்றும் விடைகொடாமல், அவ்வோடையின் எதிர்க்கரையில் உள்ள பழங்களைப் பறித்துத் தின்னவேண்டுமென்றும், அதற்காகத் தன்னைத் தோளில் ஏற்றிக்கொண்டு அவ்வோடையின் அக்கரையில் சேர்க்கவேண்டுமென்றும் குறிகாட்டினான்.

அவன் மிகவும் வயதுசென்றவனாய்க் களைத்திருப்பதாகத் தோன்றினதினால், நான் மனமிரங்கி அவனுடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டு அவனைத் தோளிலே தூக்கிக் கொண்டுபோய் அக்கரைசேர்ந்து, அவனைக் கீழே இறக்கும்படி குனிந்தேன். அப்போது அவன் செய்ததை நினைத்தால் எனக்கு இன்னும் திகில் உண்டாகின்றது. அந்தக் கிழவன் கீழே இறங்காமல் என் கழுத்தைக் காலால் உறுதியாய்க் கட்டிக்கொண்டான். அதை தாளமாட்டாமல் நான் சோர்ந்து அப்படியே விழுந்துவிட்டேன்.

அப்போதும் அந்தக் கிழவன் தோளைவிட்டு இறங்காமல், எனக்குத் தேகத்தில் கொஞ்சம் சோர்வு தெளிந்தவுடன் தன்காலால் என் விலாப்புறங்களில் உதைத்து, என்னை எழுந்து அண்டையிலிருந்த மரங்களின்கீழே போகச்செய்து, என் தோளின்மேலிருந்தபடியே சுகமாய்ப் பழம்பறித்துத் தின்ன ஆரம்பித்தான். என்னைப் பிடித்த பிடியை அவன் மறுபடி விடவேயில்லை; இரவில் படுக்கும்போதுகூட என் கழுத்தில் காலைக் கட்டினபடியே படுப்பான். பொழுதுவிடிந்ததும் அவன் முன்போலவே என்னைக் காலால் உதைத்து எழுப்பி அந்தத் தோட்டம் முழுதும் சுற்றியடிப்பான்.

இப்படியிருக்க ஒருநாள் நான், அங்கோரிடத்தில் உலர்ந்த சுரைக்காய்கள் அநேகம் இருக்கக்கண்டு, அவற்றுள் மிகவும் பெரிதான ஒன்றையெடுத்து அதற்குள் இருந்ததையெல்லாம் நன்ருய்க் குடைந்தெடுத்துவிட்டு, அத்தோட்டத்தில் அமிதமாய் விளைந்திருந்த திராக்ஷைப்பழங்களைப் பறித்து, அவற்றின் ரசத்தை அந்தக் குடுக்கை நிரம்பப் பிழிந்து, அதை அத்தோட்டத்தில் அடையாளமாய் ஓரிடத்தில் புதைத்துவைத்தேன். பின்பு சிலநாள் கழித்துப் பார்க்கையில் அந்த ரசம் ஒருவித மதுரமான சாராய மாகியிருந்தது. அதில் சிறிதளவே நான் குடித்தேன். உடனே என் தேகத்தில் ஒருவிதமான உற்சாகமும் மயக்கமும் உண்டாகி, போகிற வழியெல்லாம் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் போகலானேன்.

அந்தச் சாராயத்தால் எனக்கு அதிக சுறுசுறுப்பும் உற்சாகமும் உண்டானது கண்டு, என்மேல் ஏறிக்கொண்டிருந்த கிழவன் அதில் தனக்கும் கொஞ்சம் கொடுக்கும்படி குறிகாட்டினன். அப்படியே அந்தச் சுரைக்குடுக்கையை நான் அவன் கையிலே கொடுக்க, அவன் அதில் ஒருதுளிகூட விடாமல் எல்லாவற்றையும் குடித்துவிட்டான். அதனல் அவனுக்கு உடம்புதெரியாமல் அதிக மயக்கம் உண்டாயிற்று.

ஒருவிதமாகப் பாட ஆரம்பித்தான். அம்மயக்கத்தால் என் கழுத்தைக் கட்டியிருந்த கட்டும் கொஞ்சம் தளர்ந்தது. அத்தருணங்கண்டு, நான் இதுதான் சமயமென்று அவனைத் திடீரென்று கீழேதள்ளி, உடனே ஒரு பெரும்பாறையை எடுத்து அவன் தலையிலே போட்டேன். பின்பு அவன் எழுந்திராமல் அங்கேயே விழுந்துகிடந்தான். அவன் இறந்தேபோனானோ? அல்லது மூர்ச்சைபோய்க் கிடந்தானோ? அது எனக்குத் தெரியாது.

அவ்விதம் அந்தப்பயங்கரமான பெருஞ்சுமையை ஒழித்துவிட்டு நான் சீக்கிரமே கடற்கரைபோய்ச் சேர்ந்தேன். அப்போது குடிசலம் கொண்டுபோவதற்காகச் சில கப்பற்காரர்கள் அங்கேவந்து இறங்கியிருந்தார்கள். அவ்விடத்தில் நான் பட்ட பாட்டையெல்லாம் அவர்களுடன் சொல்ல, அவர்கள் என்னைத் தங்கள் கப்பலில் ஏற்றிக்கொண்டு போனார்கள். அந்தத் தீவில் என்னை அப்பாடு படுத்தின கிழவன் சங்கதி அவர்களுக்கு முன்னமே தெரியுமாம். மாலுமிகளெல்லாம் அவனுக்குக் கடற்கிழவனென்று பெயரிட்டிருக்கிறார்களாம். இப்படியாக நான் அந்த முறை பலவிதமாய்த் துன்பப்பட்டுக் கடைசியாய்த் தெய்வசகாயத்தால் வீடுவந்து சேர்ந்தேன்.

37. அநுமார் தேற்றச் சுக்கிரீவன் சரணடைதல்

கண்ணிகள்

1. கண்டேன் கண்டேனே ஆநந்தம்
   கொண்டேன் கொண்டேனே நல்ல
   புண்டரீகக்கண்ண னே அந்த மூத்தவன்
   மண்டலீக அர வே தம்பிவாய்த்தவன்.

2. சத்துரு வென்பது துடைத்தோர் விசுவா
   மித்திரன் கை அம்பு படைத்தோர் வெகு
   வெற்றி மருவு கீர்த்தி மேவிய குணசீலர்
   சித்திபெறும் அயோத்தி தெசரதராசன் பாலர்.

3. குடிலத்தாடகைமேலே அம்பு போட
ஒடிபட்ட மரம்போல விழுந்தாளே
அடிவைத்த உடன் அந்த அகலிகை எழுந்தாளே
சடிதிக்குள் முன்னிருந்த கல்லுருவம் ஒழித்தாளே.

4. ஒடுக்கி ஒடுக்கிச் சொன்னாலும் ராமன் கீர்த்தியை
அடக்கப் போகுமோ என்னாலும் மிதிலையில்
மிடுக்குடன் உருத்திரன் தடக்கைவில் அறிந்தானே
எடுத்தாற்போல் எடுத்தானே ஒடித்துவிட்டெறிந்தானே.


5. மாமணம் நிறைவேற்றி பரசு
ராமன் கெருவம் மாற்றி அயோத்திக்
கோடிமுடி தன்னைராமன் கொடுத்தானே தம்பிக்கங்கே
நாம் எல்லாம் ஈடேற நடந்துவந்தானே இங்கே.

6. முன்னே விராதன் மடிந்தான் ராமன் அம்பாலே
பின்னே கரனும் முடிந்தான் இது அல்லாமல்
வன்மாரீசனுக்கும் வாளிதொடுக்கல் ஆச்சே
பொன்மான் செத்த இடம் புல்லு முளைத்துப் போச்சே.

7. எடுப்புள்ள பெரியோரே கவந்தனை
அடித்தாரே எதிர்நேரே இவரே
அடுக்களைக் கிணற்றிலே அமுதம் எழுந்தாற்போலே
கிடைத்தாரே ஒருவர்க்குக் கிடைக்குமோ இப்பாலே.

8. அலைவாய்த் துரும்பென்னவே நித்தம் நித்தம்
மலைபோல் விசாரம் தின்னவே மெத்த மெத்த
பலநாளிலும்பட்ட பாடெல்லாம் விண்டோமே
நலம் ஆக வாலிக்கொரு நமனையும் கண்டோமே.

9. ராசன் மகனே எண்டா பலபல
யோசனை பண்ண வேண்டா வரந்தரும்
ஈசுரன் உன் பங்கில் இருந்தானே இருந்தானே
பூசனை செய்தான் என்றிப் போதல்லோ தெரிந்தேனே.



GIRAFFE :—ஒட்டைச் சிவிங்கி.

10. இக்கதை அன்றுவீறி அனுமான் சொல்ல
சுக்கிரீவன் மனம் தேறி புறப்பட
அக்கணம் ஒருமன தாகவே துணிந்தானே
மைக்கடல் வண்ண ரா மனை வந்து பணிந்தானே.

11. பணிந்தவன் தன்னைப்பார்த்து ரகுநாயகன்
அணிந்தகண் கிருபைபூத்து சுக்ரீவா
பிணங்கும் வாலிக்கு வில்லு பிடித்தேன் என்றெடுத்தேனே
இணங்கும் உன்னை ரட்சிப்பேன் என்றுகை கொடுத்தேனே.

38. ஒட்டைச் சிவிங்கி

மிருகங்கள் எல்லாவற்றிலும் மிகவும் உயரமானது ஒட்டைச்சிவிங்கி. அதன் கால்களும் கழுத்தும் மிகவும் நீளமானவை. ஆண் பத்தொன்பதடி உயரமும், பெண் பதினேழடி உயரமும் வளரும். ஒட்டையைப்போல் கழுத்து நீண்டும், சிவிங்கிபோல் தோலில் புள்ளிபெற்றும் இருத்தலால், இதற்கு ஒட்டைச் சிவிங்கியென்று பெயர் உண்டாயிற்று. இதன் இருப்பிடம் ஆப்பிரிகா.

ஒட்டைச் சிவிங்கியில் சிலவற்றிற்கு இரண்டு கொம்பும் சிலவற்றிற்கு மூன்று கொம்பும் உண்டு. மூன்று கொம்பு பெற்றவைகளுக்கு ஒரு கொம்பு நெற்றியின் நடுவில் இருக்கும். கொம்புகளின்மேல் மயிர் அடர்ந்து அவைகளின் நுனியில் கறுத்துக் குச்சாய் நிற்கும். இளம்பிராயத்தில் கொம்புகளுக்கும் தலையெலும்புகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. வயது ஏற ஏற, கொம்புகள் மண்டையோட்டுடன் கெட்டியாக ஒட்டிக்கொள்கின்றன.

இதன் கண்கள் மிகவும் அழகானவை. மேலுதடு நீண்டு தொங்கியிருக்கும். செடிகளின் முட்கள் தைக்காதபடி இவ்வுதட்டியின்மீது மிகவும் மிருதுவான குட்டைமயிர் அடர்த்தியாய் வளர்ந்திருக்கும். நாக்கு ஏறக்குறைய ஒரு முழநீளம் உள்ளது. இம்மிருகம் குரல்காட்டுவதே இல்லை: எப்போ

தும் மௌனமாகவே இருக்கும். குண்டுபட்டு மாணாவஸ் தையில் இருக்கும்போது கூட அது சத்தம்போடுவ தில்லை.

இதன் தோல், மஞ்சளும் கருமையும் கலந்த சிவப்பு நிற முள்ளதாய், குறுக்கு நெடுக்காய் வெண்கோடுகள் ஓடப்பெற் றது. கிழமானவைகளுக்கு முதுகிலும் தோளிலும் தோல் கறுத்திருக்கும். நன்றாய்க் கொழுத்திருப்பவைகளின் தோல் ஓரங்குல அளவாகவும் கனத்திருக்கும். காலின் குளம்புகள் இரு பிளவாய் அகன்று பெருத்திருக்கும். ஆணின் குளம்பு கள் ஓரடி யளவும் அகன்றிருக்கின்றன.

கொம்பும் இருபிளவான குளம்பும் உள்ளதாகையால், இது ஆடு மாடு போல் அசைபோடும் மிருகங்களின் இனத் தைச் சேர்ந்தது. மானைப்போல் மிரளும். மொத்தத்தில் தீங் கற்றது. மரத்தின் இலையும் தழையுமே முக்கிய உணவாகை யால், இம்மிருகம் மரநெருக்கமான இடங்களில் வசிக்கும். வேலமரத்தின் இலை அதற்கு மிகவும் விருப்பமானது. ஆப்பிரி காவில் வரண்ட இடங்களில் வேலங் காடுகளில் விசேஷமாய்ச் சஞ்சரிக்கும். வேலமரங்கள் இங்கு மங்கும் படர்ந்திருக் கும் வெளிகளிலும் அவற்றின் இலைகளை மேய்ந்து திரியும். உயரத்தில் உள்ள இளங்கிளைகளின் தழையை இழுத்து உண்பதற்கு, நீளமான இதன் நாக்கு மிகவும் உப யோகமானது. சில ஸமயங்களில் கழுத்தைத் தாழ்த்தி, பூமி யில் முளைத்திருக்கும் புல்லையும் மேயும். ஒட்டைபோல் ஒட் டைச் சிவிங்கியும் பல நாள் தண்ணீர் குடியாமல் இருக்கக் கூடும். சில வனாந்தரங்களில் இது மழைக்காலத்தில் சில மாத காலம் தண்ணீர் குடியாமலே இருக்கின்றதாம்.

தாண்டுகால் பாய்ச்சி ஓடத் தொடங்கினால், வாயுவேக மான குதிரைகள் கூட இவற்றைத் துரத்திக்கொண்டு போய் நெருங்குவது கஷ்டசாத்தியமே. மேலும் இவை வேலங் காட்டில் முட்களை லட்சியம் பண்ணாமல் ஊடுருவிச் செல்லுவ

தால் இவைகளை வேட்டையாடிப் பிடிப்பது துர்லபம். சிங்க முதலானவை எதிர்த்துவந்தால், இவை பறந்தோடிப்போம். நெருங்கினல், பின்னங்காலால் உதைத்து உதைத்துத் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும்.

39. பதவிக் கேற்ற சுகம்.

வேட்டையாடும்படி ஓரரசன் காட்டுக்குப் போனான். அப்போது ஒரு வில்விச்சி, பிரசவித்தவுடனே ஈச்சங் குருத்தைத் தின்று, இரண்டுகை தண்ணீர் குடித்துவிட்டு, பிள்ளையையும் கழுவியெடுத்துக்கொண்டு போனாள். அதைக் கண்ட அரசன் "இவள் யாதொரு பரிகாரமு மில்லாமல் குளிகுளித்தவுடனே எழுந்து போய்விட்டாளே இப்படியிருக்க நம்முடைய பெண்டுகள் என்ன உபசாரம் பண்ணினாலும் பலநாள் வரையில் பிரசவ அறையைவிட்டு வெளிப்படாமல் இருக்கிறார்களே. அதிக உபசாரந்தான் இதற்குக் காரணம். இனி நாமும் இப்படியே செய்விப்போம்" என்றெண்ணிக்கொண்டு வந்துவிட்டான்.

ராணி பிரசவிக்கிற காலம் ஸமீபிப்பதை அறிந்து, அரண்மனை வைத்தியருக்கும் மருத்துவிச்சிகளுக்கும் பணிப்பெண்களுக்கும் "ராணி பிள்ளைபெறும்போது யாதோர் உபசாரமும் பண்ணவேண்டாம்" என்று அரசன் திட்டம்பண்ணினான். இதையறிந்த பட்டமஹிஷி, அரசனுக்குப் பிரியமான சிங்காரத் தோட்டத்து வேலைக்காரனை அழைத்து, "இன்று முதலாகத் தோட்டத்தில் செடி கொடி மரங்களுக்குத் தண்ணீர் இறைக்க வேண்டாம். எருப்போடல் களைகட்டல் முதலிய உபசாரங்களும் பண்ணவேண்டாம்" எனக் கட்டளையிட்டாள்.

இரண்டு நாள் கழித்து, அரசன் தோட்டத்தில் உலாவப் போனபோது, தோட்டம் வாடிக்கிடக்கிறதைக் கண்டு, தோட்டக்காரரை அழைத்துக் கோபித்துக்கொண்டான்.

தோட்டக்காரர் "மஹாராஜா, தோட்டத்திற்குத் தண்ணீர் இறைக்கவேண்டாமென்று மஹாராணி கட்டளையிட்டார்கள்" என்று சொல்லினர். உடனே அரசன் அந்தப்புரத்துக்குப் போய், "பிரியநாயகி, நம்முடைய பூங்காவனத்துக்கு ஏன் தண்ணீர் இறைக்கவேண்டா மென்று கட்டளையிட்டாய்?" என்று கேட்டான். ராணி "மஹாராஜா, காட்டிலிருக்கிற செடி மரங்களுக்கு யார் எருவிடுகிறார்கள்; தண்ணீர் இறைக்கிறார்கள்? ஆகையால் இவைகளும் அப்படியே பயிராகலாமே என்கிற எண்ணங்கொண்டு அங்ஙனம் கட்டளையிட்டேன்" என்றாள்.

அதுகேட்டு அரசன் வெட்கமடைந்து தன் விடுதிக்கு வந்து, பண்டிதர் முதலானபேர்களை ராணிக்கு வழக்கம்போல உபசாரங்களைச் செய்யும்படி உத்தரவு கொடுத்தான். ராணியும் தோட்டக்காரரை அழைத்து அத்தோட்டத்துக்குத் தண்ணீ ரிறைக்க உத்தரவுகொடுத்தாள்.

தாரதம்மியம் பார்த்து உபசாரம் பண்ணவேண்டும்.

40. பட்டினத்தார்

தாயாருக்குத் தகனகிரியை செய்கையில் பாடியது

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து,—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

அரிசியோ நானிடுவேன், ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல்,—உருசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியபு
மானே! எனவழைத்த வாய்க்கு?

அள்ளி யிடுவ தரிசியோ? தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனே கூசாமல்?—மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே! என்றழைத்த வாய்க்கு.

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே: பாவியேன் ஐயகோ!—மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

41. ஆகாயப் பிரயாணம்

நெடுந்தூரமான நிலப் பிரயாணம் நெடுங்காலமாக மாட்டுவண்டி குதிரைவண்டிகளிலும் சில காலமாக இருப்புப் பாதையில் நீராவியந்திர சக்தியால் இழுக்கப்பட்ட வண்டிகளிலும் நடந்துவந்தது. நீராவி செய்யும் வேலையை இப்பொழுது மின்சாரமும் பலமடங்கு அதிகமாகவே செய்கிறது. கடல் பிரயாணம் நெடுங்காலமாய்த் தோணிகளிலும் நாட்டுக் கப்பல்களிலும் காற்றின் உதவியால் நடந்துவந்தது. நீராவி ஏற்பட்டு, எதிர்க்காற்று வீசினாலும் லட்சியம் பண்ணாமல் கப்பல்களை இழுத்துக்கொண்டு போகிறது. மின்சார சக்தியை இதற்கும் பிரயோகித்தால் இன்னும் சீக்கிரத்தில் பிரயாணம் செய்யலாம். ஆகாயத்தில் பிரயாணம் போவது பழைய காவியங்களிலும் கட்டுக்கதைகளிலும் படித்ததன்றி எவரும் பிரத்தியக்ஷமாகக் கண்டதில்லை. அரிச்சந்திரன் சந்திரமதியின் சுயம்வரத்துக்குப் போகும்போது, கூடே தொடர்ந்த முனிவர்கள் ககனமார்க்கமாய்ச் சென்றனரென்று அரிச்சந்திர புராணம் கூறுகின்றது. பரதன் ராமரை அழைத்துவரச் சென்றபோது வசிஷ்டர் முதலியோர் ககனமார்க்கமாகச் சென்றனரென்று ராமாயணம் கூறுகிறது. புஷ்பகவிமானம் நினைத்த இடத்திற்கு வெகுசீக்கிரத்தில் போகக் கூடியதென்றும் ராமாயணம் கூறுகின்றது. வாயில் ககனகுளிகையிட்டுச் சித்தர்கள் ஆகாய

கமனம் செய்ததாக இப்பொழுதும் கிழம்பழம் சொல்லக் கேட்கிறோம். பஞ்சபூதங்களில் நான்கு பூதங்களைத் தன் இஷ்டப்படியே செய்யுமாறு வசப்படுத்திய மனிதனுக்கு ஆகாயம் ஒன்றுமாத்திரம் இத்தனை காலமாக வசப்படாமலிருந்தது.

பறவைகள் பறப்பதைப் பார்க்குந்தோறும், ஆகாயத்தை வசப்படுத்துவது சுலபசாத்தியமென்றே தோன்றி, தக்க இறகுகளைத் தேடிக்கொண்டால் காரியம் கைகூடுமென்று முயற்சிசெய்தவர்களில் கைகால் ஒடிந்து முடமானவர் பலர்: முதலே மடிந்தவரும் பலரே. நல்லகாரியத்துக்கு நாலிடையூறும் வருவது சகசம். எடுத்த காரியத்தைக் கைவிடாது முடிக்கவேண்டுமென்று அநேக தனவான்கள் திரவிய சகாயம் செய்யத்தொடங்கினர். அநேக பௌதிக சாஸ்திர விற்பனர்களும் பரிசோதனை மேல் பரிசோதனை செய்துவந்தனர். ஆயிரம்பேரைக் கொன்று அரைவைத்தியன் ஆவதுபோல, இவ்வித முயற்சிகளால் சென்ற நூற்றாண்டில் பலூன் என்கிற புகைக்கூடு ஏற்பட்டது. ஆனால் அது பூமியிலிருந்து மேலே கிளம்பவும், காற்றுவீசுதலான பக்கமே போகவும், வேண்டியபோது இறங்கவும் மாத்திரமே அநுகூலப்பட்டதன்றி, நினைத்த இடத்துக்குப் போதற்குரிய சாதனமாகாமல், அபாயத்துக்கு ஹேதுவாக இருந்தது.

முன்னிருந்த சாஸ்திர விற்பனர்கள் விட்ட இடத்தில் தொடங்கி, பிற்பட்ட விற்பனர்கள் விடாப்பிடியாய் மேன்மேலும் செய்துவந்த பரிசோதனைகளால், ஒருவன் தனக்கிஷ்டமான திசையை நோக்கிச் செல்லக்கூடிய ஆகாயக் கப்பல் ஸமீபகாலத்தில் ஏற்பட்டது. இன்னும் சில வருஷகாலத்தில் ஆகாயத்தில் பறக்கும் யந்திரங்கள் பெருத்துவிடும். அப்போது அவைகளை யாவரும் எங்கெங்கும் காணலாகும்.

ஆகாயக்கப்பலும் ஒருவாறு புகைக்கூடு போன்றதுதான். புகைக்கூடு, வாயுவினும் லேசான ஹைட்ரொஜென்

ஆவியை, லேசான பட்டுத்துணியால் தைத்து மேலே தைலம் பூசிய பையில் நிரப்பிய கூடாம். வாயுவிலும் லேசாக இருப்பதினுல் இது ஆகாயத்தில் கிளம்புகின்றது. இது ஏகாண்டமான ஒரே பையாதலால், எங்காகிலும் ஒரூசி நுனியளவு புரைபட்டால், உள்ளே இருக்கிற ஆவி வெளிப்பட்டுக் கூடு விழுந்துவிடும். ஆகாயக்கப்பலின் அமைப்போ இப்படியில்லை. பெட்ரோல் என்னும் எண்ணெயானது ஆவியாக மாறிக் காற்றோடு கலப்பதனுல் உண்டாகிற விசையை உபயோகித்து, ஆகாயக்கப்பலை எந்தப் பக்கம் வேண்டுமானுலும் அந்தப்பக்கமே போகும்படி செய்யலாம். மேலும் ஆகாயக்கப்பலில் அமைத்திருக்கும் பை பல அறைகளாகத் தடுத்திருப்பதால், ஒரு பக்கத்தில் ஓரறை புரைபட்டாலும் மற்ற அறைகள் உருவாக இருக்கிற பக்ஷத்தில் இந்த யந்திரம் நிஷ்பிரயோசனமாகாது. ஆகாயக்கப்பல் புகைக்கூட்டுக்கு மேலானது என்பதொன்று தவிர, ஆகாயத்தில் அபாயமில்லாமல் சுவாதீனமாய்ப் போய்வருவதற்குப் பயன்படாதென்கிற குறைவு உள்ளதே.

இந்த இரண்டும் இவ்விதமாகவே, சாஸ்திர விற்பனர்கள் யோசிக்கலாயினர். பலூனும் ஆகாயக்கப்பலும் காற்றைவிட அளவுக்களவு லேசாயிருப்பதனுல் காற்றில் எழும்புகின்றன. அப்படியிருக்க, காற்றைவிட அளவுக்களவு பாரமானவைகளை ஏன் எழுப்பக்கூடாது. பறவைகள் தங்கள் இறகுகளைக் கீழ்முகமாகக் காற்றில் வீசுவதால் அவைகள் மேலே கிளம்பவில்லையா ? மேலும் சிறகை அசைக்காமலே நெடுநேரம் வரையில் பறவைகள் காற்றில் மிதப்பதைப்போல் ஊசலாடுவதற்குக் காரணமென்ன என்று ஆராய்ந்து பார்க்கையில், இறகுகள் பூமிக்கு நேராய் ஸமமாக இருந்தால், பறவை பறக்க ஆரம்பித்த பிறகு சிறகை அசைக்காமல் யாதொரு பிரயாசையுமின்றி ஆகாயத்தில் நிலைகொண்டு மிதப்பதைக் கண்டறிந்தனர். இந்த

உண்மையை அறிந்து பிரயோகித்து எரோப்ளேன் நிர்மாணிக்க லாயினர். இதனுடைய அமைப்பு, பறக்கும் பறவையின் அமைப்பையும் காற்றாடியின் அமைப்பையும் ஒத்தது.

ஒவ்வொரு எரொப்ளேனிலும் ஒன்று அல்லது இரண்டு, அல்லது ஏகதேசமாய் மூன்று, கித்தான்பாய்கள் உண்டு. காற்றுத் தாக்குவதற்கு ஏற்றவிதமாக இவைகள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இவைகளின் மீது காற்றுத் தாக்குவதால் யந்திரம் பறக்கின்றது. காற்றாடி கயிற்றால் பறக்கிறது: எரொப்ளேன் யந்திரத்தால் பறக்கிறது. இதுவே இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம்.

42. குறிப்பறிதல்

மனதிற் கடும்பகை முகத்தினு லறிபலாம்.
மாநிலப் பூடுகளெல்லாம்
மழையினு லறியலாம். நல்லார் பொலார்தமை
மக்களா லறியலாகும்.
கனமருவு சூரரைச் சமரினு லறியலாம்.
கற்றவொரு வித்துவானைக்
கல்விப்ர சங்கத்தி னுலறியலாம். குணங்
களைநடையி னுலறியலாம்.
தனதக மடுத்தது பளிங்கினு லறியலாம்.
சாதிசொல் லாலறியலாம்.
தருநீதி கேள்வியா லறியலாம். பிணிகளைத்
தாதுக்க ளாலறியலாம்.
வனசவிக சிதவதன பரிபூர ணனந்த
வாலவடி வானவேலா !
மயிலேறி விளையாடு குகனே ! புல் வயனீடு
மலைமேவு குமரேசனே !

—குமரேச சதகம்.

43. பர்மியர்

பர்மாவில் வசிப்பவர்களுக்குப் பர்மியர் என்று பெயர். இவர்கள் சீனர்க்கும் மலேயர்க்கும் இடைத்தரமான ஒரு வகைச் சாதியார். சிலர் குன்றுகளில் வசிப்பவர்கள், மிலேச்சத்தன்மை உடையவர்கள். ஏனையர் நானாவிதமான நாகரிக நிலைமை உள்ளவர்கள். இவர்கள் அதிக செருக்கும் மமதையும் கொண்டவர்கள். தங்களைப் பூலோக சஞ்சாரத்தை விரும்பிப் பூமியில் வந்து குடியேறிய ஒருவகைத் தேவ மரபினரென்று சிலாகித்துக்கொள்கின்றனர். இந்துக்களிற்போல இவர்களுள் ஜாதிக்கட்டுப்பாடு என்பது கிடையாது. உருவத்தில் குட்டையானவர்கள்; மஞ்சள்நிற மமைந்தவர்கள். இவர்களுடைய தலைமயிர் கன்னங்கறேலென்றிருக்கும். ஆண்பாலினர் தலை மயிரை உச்சியில் சேர்த்து முடிந்துகொள்கின்றனர். பலவிதமான வர்ணம் அமைந்த சீலைகளை உடுத்திக்கொள்வார்கள். அழகிய பருத்தி வஸ்திரங்களிலும் பட்டாடைகளிலும் அதிக பிரியமுடையவர்கள். விலை உயர்ந்த இரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களில் அதிக திரவிய விரயஞ் செய்கின்றனர். செட்டாகச் செலவுசெய்து பணஞ்சேர்க்கவேண்டுமென்னும் கருத்து இவர்களிடத்தில் கிடையாது. ஒருவர்க்கொருவர் இளைக்காமல், தனிகரா யிருப்பவர்கள், சம்பிரமமான விருந்துகளும் சதுர்க்கச்சேரிகளும் நடத்துகின்றனர். வேலை செய்ய நிமித்தமில்லாத வேளைகளில் வீணே காலம்போக்கும் சோம்பர்கள் இவர்களைப் போன்றவர்கள் உலகில் எவருமிரார். இவர்களுக்கு ஊழ்வலியில் பற்று அதிகம். ஒருவனுக்கு அதிர்ஷ்டவசத்தால் விசேஷ செல்வம் கிடைக்குமாயின், அவன் உடனே மடங்களையும் தரும சத்திரங்களையும் கட்டுவான். அதற்காகக் குடிகளும் அவனைக் கொண்டாடுவார்கள். இவனும் தான் பெற்ற வீண்பெருமையைப் பெரிதாக எண்ணிக் கொள்வான்.

ஆண்பாலினர் அனைவரும் பச்சை குத்திக்கொள்வது இவர்களில் தேசாசாரமாக இருக்கின்றது. பச்சை குத்திக் கொள்ளாத ஒருவன் பெண்பிள்ளைக்குச் சமானமாம். பாம்பு முதலிய விஷ ஜந்துக்கள் கடித்தால் துன்பம் நேராதென் றெண்ணிக் கைகால்களிலும் பச்சை குத்திக்கொள்ளுகின்றனர். பச்சை குத்திக்கொள்ளும்போது நோய் தெரியாமலிருக் கும்படி அபினி உட்கொள்கின்றனர்.

பர்மிய ஸ்திரீகள் அதிக அழகுடையவர்களல்ல : அதிக வேலைப்பாடமைந்த ஆடையாபரணங்களை அணிந்துகொள் வார்கள். பெண்களும் ஆண்களைப்போலவே அதிக சுதந்தரம் உடையவர்களாகையால், இன்னாரைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் இல்லை. தங்களுக்கு இஷ்டமானவர்களை மணம்புரிந்துகொள்வார்கள். இதுவிஷயத்தில் இவர்கள் யூரபியரை ஒத்தவர்கள். என்றாலும், பர்மியருடைய மதக் கோட்பாட்டின்படி பெண்கள் கல்விபயில்வ தில்லை. கல் விப்பயிற்சி யில்லாவிட்டாலும், ஆண்பாலினரைக் காட்டிலும் அதிக நுட்பபுத்தி உடையவர்களாய்க் காண்கின்றனர். பதி னேழு அல்லது பதினெட்டாம் வயதில் விவாகம் செய்து கொளகின்றனர். விவாக விஷயத்தில் தாய் தந்தையர்கள் குறுக்கிடுவ தில்லை.

ஒவ்வொருத்தியும் விவாகம் செய்துகொள்ளுகிறாள். புருஷன் இறந்துபோனாலும், புனர்விவாகம் பண்ணிக்கொள்ள யாதொரு தடையும் இல்லை. புருஷனுக்குப் பெண்டாட்டியின் மேல் விருப்ப மில்லாவிட்டாலும், அல்லது பெண்டாட்டிக்குப் புருஷன்மேல் விருப்பமில்லாவிட்டாலும், ஒருவரையொருவர் விலக்கிவிட்டு வேறு விவாகம் செய்துகொள்ளலாம். அங்ஙனம் தம்பதிகள் ஒருவரையொருவர் விலக்கிக் கொள்ளும்போது, வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் பேர்க்குப் பாதியாகப் பங்கிட்டுக்கொள்கின்றனர். குழந்தைகள் இருப்பின் புருஷன்

ஆண்பிள்ளைகளைத் தன்னுடன் அழைத்துச் செல்வான்: பெண்டாட்டி பெண்பிள்ளைகளைத் தன்னுடன் அழைத்துச்செல்வாள். ஒரு தாரம் கட்டிக்கொள்வதே இவர்களில் சர்வ ஜன சம்மதம். ஒருவன் செல்வப் பெருக்கினால் இரண்டு மூன்று தாரம் கட்டிக்கொள்ள வேண்டினால், அதற்குக் குருமார் சம்மதிக்கவுமாட்டார்கள், அனுகூலிக்கவு மாட்டார்கள். பெண்பாலினர் புருஷருடைய சமஸ்தமான காரியங்களிலும் சிரத்தையுடையவர்களாய் இருத்தலால், புருஷர்களுக்கு நல்ல சிநேகைகளாக இருக்கின்றனர். புருஷன் புதிதாக ஒரு வேலை செய்யத் தொடங்குவதானால், முதலில் தன் மனையாளுடனே ஆலோசிக்காமல் அந்த வேலையை ஆரம்பிக்கமாட்டான். புருஷன் ஏதோ ஒரு காரியார்த்தமாகத் தூரதேசம் போவதாயிருந்தாலும், அவன் திரும்பிவருகிற வரையில் அவனுடைய பெண்டாட்டி வர்த்தக முதலான வேலைகள் எல்லாவற்றையும் தானே பார்த்து நிர்வாகிக்கிறாள். பெண்கள் வீட்டிற்கு வெளியில் ஒன்றியாகப் போகலாகாது என்னும் ஏற்பாடு இல்லை. வீட்டிற்கு வரும் விருந்தினர் முதலானவர்களைத் தாமே எதிர்கொண்டழைத்து உபசரிப்பார்கள். கிராம காரியங்கள் பலவற்றையும் பெண்கள் தாமே பார்த்துக்கொள்ளக் கூடியவர்களா யிருக்கின்றனர். விருந்து வேடிக்கை முதலியன நடத்துவதாயிருப்பினும், முன்னே மனைவியர்களிடத்திலே தான் ஆலோசனை செய்வது பர்மியர்களுள் வழக்கம்.

பர்மியர்கள் விளையாட்டில் அதிகவிருப்ப முடையவர்கள். பர்மா தேசத்தினுடைய சீதோஷ்ண நிலைமையானது வீட்டிற்குப் புறம்பே ஆடும் ஆட்டங்களுக்கு அநுகூலமானது. வருஷந்தோறும் குதிரைப் பந்தயம் விடுவார்கள். குஸ்தி முதலிய மல்ல யுத்த வேடிக்கைகளை நடத்துவார்கள். வேடிக்கைகள் நடக்கும் காலங்களில வீட்டில் என்ன வேலை இருக்கட்டும் வர்த்தக முதலிய வருவாய் கெடுவதாயிருக்கட்டும்: அதையெல்

லாம் ஒரு பொருட்டாக மதியாமல் வேடிக்கை பார்ப்பதே பெரிதாக வந்துவிடுவார்கள். நாளைக்கு என்ன செய்யப்போகி றோம் என்னும் ஏக்கம் இவர்களுக்குக் கிஞ்சித்தும் கிடையாது.

பர்மிய பாஷையின் எழுத்துக்கள் பெரும்பான்மையாக இந்திய பாஷைகளினின்றும் அமைத்துக்கொள்ளப்பட்டன. இவர்களுடைய புராதன நூல்களை ஆராய்ந்து பார்க்கு மிடத்தும், இவர்களுடைய பாஷையானது வெகுவாய் இந்திய பாஷைகளைத் துணையாகக் கொண்டுள்ள தென்பது தெளி வாகும். இந்தப் பாஷையானது ஓரசைச் சொற்களா லான தாய், மெல்லிய இன்னோசை யுடையதுமாய், இடுக்குமுடுக்கான பெயர்வினை விகற்பங்களால் இடர்ப்படாததுமாய் இருக்கின் றது. இவர்கள் எழுதிவைத்திருக்கும் கிரந்தங்களில் பெரும் பான்மையாகச் சொல்லப்பட்டுள்ள விஷயங்களாவன, கௌதம புத்த முனிவருடைய வரலாறும் அவர் போதித்த சமயக் கோட்பாடுகளும் முதலியனவேயாம். இவர்கள் நம்மைப் போலவே ஓலைச் சுவடிகளில் இருப்பெழுத்தாணிகளால் எழுதுவது வழக்கம்.

இவர்களுடைய நாடக காவியங்கள் பெரும்பான்மை யாகப் புராண இதிகாசங்களைச் சார்ந்தவைகள். இவர்களு டைய இதிகாச புராணங்களும் வெகுவாய் இந்துக்களுடைய புராண இதிகாசங்களைச் சார்ந்தவைகளாம். அந்தந்த நாடகத் திற் கேற்றவாறாக வெகு விச்சித்திரமான வேஷங்களைத் தரித் துக்கொள்வார்கள். நாடகசாலையானது ஒரு வட்டமான கூடாரமாம். கூடாரத்தின் நடுவிலே அரங்கமேடை. இந்த நாட கங்களைப் பார்க்கவருகின்றவர்கள் ஒன்றுங் கொடுப்பதில்லை. நாடகம் வைத்துக் கொள்வது விருந்து முதலிய கால ங்களிலாதலால், நாடகம் வைப்பிப்பவன் தானே கூத் தர்களுக்குக் கட்டி வேண்டிய கட்டணத்தைக் கட்டி விடுவான். தன்னுடைய சினேகர் முதலானவர்களுக்குச் சங்

சதி தெரிவித்து வரவழைப்பான். மற்றவர்களும் வரலாம் என்று ஏற்பாடுண்டு. தானழைக்கும் சிநேகர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக இடமமைத்து வைப்பான், மற்றவர்கள் அவரவர்க்கு இஷ்டமான இடங்களில் உட்கார்ந்துகொள்வார்கள். நாடகம் இரவில் ஒன்பது மணி தொடங்கிப் பொழுது விடிகிறவரையில் ஆடப்படும் இளைப்புறுபவர்கள் கூடாரத்தைச் சுற்றிலும் உள்ள சிற்றுண்டிக் கடைகளில் வேண்டுமானவற்றை வாங்கி உண்பார்கள்.

பர்மியர்கள் புத்த மதத்தைத் தழுவினவர்கள். இவர்கள் இந்த மதத்தைத் தழுவிக்கொண்டு ஆயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு அதிகமாகின்றது. உலகத்தைப் படைத்துக் காத்து அழிக்கும் ஒரு முதற்கடவுள் உண்டென்னும் கோட்பாடில்லை. தீவினை செய்பவர்கள் துன்பத்திற் குள்ளாவர் என்று நம்புகின்றார்கள். பலமுறை மனிதராய்ப் பிறந்து, ஒவ்வொரு பிறப்பிலும் பாபக் கிருத்தியத்தை ஒழித்துவந்தால், ஒவ்வொருவனும் நிர்வாணநிலையை எய்தலாம் என்பது இவர்களுடைய சித்தாந்தம். நிர்வாண நிலையாவது, துன்ப நிவாரணமாகி அமைதியெய்தப் பெறுதலாம். இங்ஙனம் புத்த மதத்தை அநுசரிப்பவர்களாயினும் இவர்களிடம் ஒருவகை மூடபக்தி உண்டு. அஃதென்னெனின், வாயுவேக மனோவேகமுள்ள ஆவிமயமான பற்பல தேவதைகள் உண்டென்றும், மனிதருடைய காரியா காரியங்களுக்கெல்லாம் அவைகளே காரண பூதமானவை யென்றும் நம்பி, தாங்கள் நினைத்தகாரியம் சித்தியாதற் பொருட்டு, அவைகளுக்குப் பூஜைபுனஸ்காரங்களைச் செய்கின்றனர். பர்மிய சமயாசாரியர்கள் துறவிகளாய் மடங்களிலும் ஆலயங்களிலும் வசிக்கின்றார்கள். இவர்கள் வேண்டுமானால், மீண்டும் கிருகஸ்த ஆசிரமத்தை அடைதற்குத் தடையில்லை. சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதே இவர்களுக்குப் பொழுது போக்கு. எவ்வளவு சிறு கிராமமா யிருந்தாலும் ஒரு மடாதீனப் பாடசாலை இல்லாமலிராது.

44. மாணுக்கர்

மூவகை மாணுக்கர்

அன்ன மாவே மண்ணெடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணுக்கர்.

பாடங்கேட்டல்

கோடல் மரபே கூறுங் காலை,
பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்,
குணத்தொடு பழகி, அவன் குறிப்பிற் சார்ந்து,
இருவென விருந்து, சொல்லெனச் சொல்லி,
பருகுவ னன்ன ஆர்வத்த ணுகி,
சித்திரப் பாவையின் அத்தக வடங்கி,
செவிவா யாக நெஞ்சுகள ணுகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து,
போவெனப் போதல் என்மனுர் புலவர்.

நூல்பயி லியல்பு

நூல்பயி லியல்பே நுவலின், வழக்கறிதல்,
பாடம் போற்றல், கேட்டவை நினைத்தல்,
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்,
அம்மாண் புடைபோர் தம்மொடு பயிறல்,
வினுதல், வினுயவை விடுத்தல், என்றிவை
கடனுக் கொளினே மடநனி யிகக்கும்.

வழிபாடு

அழலி னீங்கான் அணுகான் அஞ்சி,
நிழலி னீங்கான், நிறைந்த நெஞ்சமோடு
எத்திறத் தாசான் உவக்கும் அத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சிவழி பாடே.

—பவணந்தி.

45. அர்ச்சுனனுடைய நட்பபுத்தி

கௌரவர் நூற்றைவரும் துரோணரிடம் வில்வித்தை கற்றுவருகையில், பாண்டு புத்திரர் நாளுக்குநாள் விருத்தியடைந்து வருவதைக் கண்டு, துரியோதனன் பொறாமையடைந்து, தன் பிதாவிடத்திலும் பீஷ்மரிடத்திலும் "வில்லாசிரியர் பாண்டவருக்கு ஒருவகையாகவும் எங்களுக்கு ஒருவகையாகவும் கற்பிக்கிறார். எங்கள் விருத்தியில் அவர் சிரத்தை யெடுத்துக்கொள்ளவில்லை" என்று பிராது செய்தான். அதன்மேல் பீஷ்மரும் திருதராட்டிரனும் துரோணரை அழைத்துக் கேட்டனர். துரோணர் "நூற்றைவரையும் ஒரு கண்மணிபோலவே கருதி வித்தை கற்பித்துவருகிறேன். எந்த வித்தையும் புத்திநுட்பத்துக் கேற்றபடி தானே பிரகாசிக்கும். அதற்கு நான் என்ன செய்வேன்?" என்று மறுமொழிசொல்லி விடைபெற்று வந்தார்.

இந்த உண்மையைத் துரியோதனனுக்கு விளக்கவேண்டுமென்று துரோணர் ஓர் உபாயம் பண்ணினார். கங்கையில் நீராடிவருவோமென்று எல்லாச் சீடர்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். அர்ச்சுனனை அழைத்து 'நான் எண்ணெயிட்டுக் கொள்ளவேண்டும். நமது மாளிகைக்குச் சென்று எண்ணெய்க் கலசமும் நலங்குவட்டிலும் வாங்கிக்கொண்டு அவைகளை வழியில் எங்கும் தரையில் வைக்காமலே கொண்டுவருக" என்று ஏவினார். கங்கையை நோக்கிப் போகும்போது, துரோணர் ஓர் ஆலமரத்தைக் காட்டித் துரியோதனனிடம், "இம்மரத்தின் இலையெல்லாம் ஒரே அம்பில் தொளையாகுமாறு ஒருவில் விநோதம் காட்டுகிறேன். கற்றுக்கொள்" என்று அருகில் அழைத்து, பூமியில் ஒருசக்கரம் எழுதி, அதில் பீசாட்சரத்தை அமைத்து, அம்மந்திரத்தை அவன் காதில் உபதேசித்து, "வில்லை வளைத்து பாணம் தொடு" எனக் கட்டளையிட்டார். அவன் அப்படியே செய்ய அப்பாணம் அம்மரத்தின் இலைகளை

ஒன்றொழியாமல் தொளையாகும்படி செய்தது. துரியோதனன் மகிழ்ச்சி யடைந்து, ஆசிரியரைப் பலவாறு புகழ்ந்து துதித்தான். சக்கரத்தைக் கலைக்காமலே துரோணர் நூற்று நால்வரையும் அழைத்துக்கொண்டு சென்றனர்.

அர்ச்சுனன் எண்ணெய்க் கலசமும் நலங்கு வட்டிலும் எடுத்துவருகையில், ஆலின் நிழலில் சகோதரர் அடிச்சுவடும் ஆசிரியர் அடிச்சுவடும் அழுந்தியிருக்கவே, அங்கே என்ன விசேஷமென்று சோதித்துப் பார்த்தான். அங்கே ஓர் எந்திரமெழுதி மூலமந்திரம் வரைந்திருப்பதைக்கண்டு வியப்படைந்து ஆலமரத்தை அண்ணாந்து பார்த்தான். மரத்தின் இலை ஒவ்வொன்றும் தொளையுண்டிருப்பதைக் கண்டு, "நமதாசிரியர் என்னை வஞ்சித்து இங்கே ஒரு வில்விநோதம் காட்டியிருக்கிறார்" என்று நினைத்து, அம்மூலமந்திரத்தைச் சிந்தித்து எந்திரத்தையும் மனத்தில் பதியச் செய்து, கையிலிருந்த கலசத்தினையும் வட்டிலையும் ஆகாயத்தில் சுழற்றி எறிந்து, வில்லை வளைத்து நாணேறிட்டு ஓரம்பைத் தொடுத்து, கீழே விழுமுன்னே கலசத்தையும் வட்டிலையும் கையில் ஏந்திக்கொண்டான். அவ்வம்பு ஒவ்வோரிலையையும் தொளை செய்தது. அதன்மேல் அவன் எந்திரத்தையும் மூலமந்திரத்தையும் கலைத்துவிட்டு, கங்கைக்கரையை அடைந்து ஆசிரியருக்கு எண்ணெயிட்டு நலங்கு தேய்த்துவிட்டு, வேறு துறையில் சகோதரரோடு நீராடியிருந்தான்.

துரோணர் நீராடுகையில் முதலையொன்று அவர் காலைப் பற்றியிழுத்தது. இயன்றமட்டில் காலை உதறியும், 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்றபடி, முதலை விடாமல் பற்றியிருந்தது. அவர் பெருங்குரலிட்டுக் கூவி அழைத்தார். அழைத்த ஒலி நீராடியிருந்த கௌரவர் காதில் படவில்லை. வழிப்போக்கரிடம் சொல்லியனுப்பினர். எல்லாரும் ஓடோடியும் வந்து ஆசிரியர் ஆபத்திலிருப்பதைக் கண்டனர்.

துரியோதனனும் அவன் தம்பியரும் கல்லும் கட்டியும் எடுத்தோட்டினர். முதலை பின்னும் தூரமாக இழுத்துப் போக ஆரம்பித்தது. அதற்குள் அர்ச்சுனன் ஓரம்பு தொடுத்து முதலையின் கழுத்தும் உடலும் துண்டமாகத் துண்டித்து விட்டான். அப்பால் துரோணர் அநாயாசமாகக் கரையேறினார். ஏறின அளவில் அவர் அர்ச்சுனனைத் தழுவிக்கொண்டு “அப்பா, எனக்கு உயிருதவி செய்தாய். நான் என்ன செய்தாலும் இதற்கு ஈடாகாது. நீயே கஜேந்திர வரதன்’ என்று புகழ்ந்து சீடர்களோடு முன் வந்த வழியாகவே திரும்பினார்.

வழியிலிருந்த ஆலமரத்தை அண்ணாந்து பார்க்கையில் ஒவ்வோரிலையும் இவ்விரண்டு தொளையடைந் திருக்கக்கண்டு “இது செய்தவர் யாவர்?” என்று கேட்டார். அர்ச்சுனன் அவரை வலம்வந்து வணங்கி “இது செய்தவன் அடியேன்” என்றான். துரியோதனனுக்கு மாத்திரம் முகம் மாறுபட்டது. மற்றவரெல்லாரும் அர்ச்சுனனைப் புகழ்ந்தனர். ஆசிரியர் துரியோதனனை நோக்கி, “நாம் கற்பிக்காத விஷயத்தை அவனே அறிந்து கொண்டான், பார்த்தாயா. அந்த விநோதத்தை நீ இப்போது செய்துகாட்டு” என்றார். அதற்குள் துரியோதனன் அதை மறந்துவிட்டு, மரத்தோடு மரமாய் நின்றான். ஆசிரியர் “கல்வி முதலிய பேறுகள் அவரவர் முற்பிறப்பில் செய்த பூசாபலத்தின் அளவேயாகும். அதை அறியாமல் பிதாவிடத்திலும் பிதாமகரிடத்திலும் ‘எங்களுக்கு நன்றாய்க் கற்பிக்கவில்லை’ யென்று கோள் சொல்லுவது தகுதியல்ல” என்று சொன்னார்.

46. அறம்

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ்செல்வா
ஈற்றிளம் பெண்டிர் ஆற்ருப் பாலகர்
முதியோ ரென்னுன் இளையோ ரென்னுன்,
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப, இவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்,
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து,
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ ?
இளமையு நில்லா ; யாக்கையு நில்லா.
புத்தே ளுலகம் புதல்வரும் தாரார்.
மிக்க அறமே விழுத்துணை யாவது.

—மணிமேகலை.

47. ஒளிப்பார் & அளிப்பார்

மின்னும் தமனியமும் வெற்றிரும்பும் ஓரினமாய்ப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே—கொன்னே
ஒளிப்பாரும் மக்களாய் ஒல்லுவ தாங்கே
அளிப்பாரும் மக்களா மாறு.

—பொருட்பொருள் விளக்கம்.

48. தாயினருமை

ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கெவ்வோ கைம்மா றியற்றிடுவார் ?
ஆன்ற மதலை நூறுவய தளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருள் முற்றும் அளித்து முறைமுறையே
என்று வழிபா டியற்றிடினும் ஒருநாள் வளர்த்தற் கியையாதே.

—தனிப்பாடல்

49. ஆங்கில அரசாட்சியின் நன்மைகள்

இங்கிலிஷ் அரசாட்சியில் நமக்கும் நமது பொருள்களுக்கும் அபாயமில்லை. நமது முன்னோர்கள் காலத்தில் இப்படி இருந்ததில்லை. இங்கிலண்டில் வழங்கி வருகிற இலக்கியங்களும் சாஸ்திரங்களுமாகிய அரிய பேறுகளைப் பெற்றிருக்கிறோம். பிரகிர்தி சக்திகளைக் கொண்டு மனிதன் திறமையாலும் விடாமுயற்சியினாலும் தனக்கு வேண்டிய சௌகரியங்களை எளிதில் தேடிக்கொள்ளும்படி கண்டுபிடித்திருக்கிற பற்பல வழிகளை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். இவ்விதமான பாக்கியங்களைப் பெற்றிருப்பது மன்றி, நாம் நினைத்தபடி நம்முடைய கருத்தை வெளியிடவும் வர்த்தமான பத்திரிகைகளின் மூலமாகப் பிரசுரஞ் செய்யவும் நமக்குச் சுதந்தரம் கிடைத்திருக்கிறது. அவர்கள் எத்தனையோ காலமாக எவ்வளவோ போராடி வருந்திப்பெற்ற இவ்வித சுதந்தரங்களை நமக்கு எளிதில் அளித்த நன்றியை நாம் போற்றிப் பாராட்டவேண்டும். இதை மறந்து நாம் வரம்பு கடந்து ஏதாவது ஒன்றைச் சொல்வதும் செய்வதும் நமது ராஜபக்திக்குக் குறைவாகும். நாம் இதற்குமுன் இருந்த இருப்பையும், நம்மை முன்னுக்குக் கொண்டுவரும்படி துரைத்தனத்தார் பட்ட பாட்டையும் நினைத்துப்பார்ப்போமாயின், நமக்குக் கிடைத்திருக்கிற இத்தனை நன்மைக்கும் காரணம் அவர்களே என்பது நமக்குப் புலப்படும். இதுவரையில் கிடைத்திருக்கிற சுதந்தரங்கள் போதா வென்று நாம் திருப்தி பிறவாமல் இருக்கவுங் கூடும். இன்னும் நமக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளைக் கேட்பதற்கு யாதொரு தடையும் இல்லை. ஆனால், அவ்விதம் கேட்கும் போது நமது ராஜபக்திக்குக் குறைவுவராமலும் நெடுங்காலமாக வழங்கிவருகிற விதியைக் கடந்து நடவாமலும் உருக்கமுண்டாகும்படி சிநேக பாவனையாய்க் கேட்க வேண்டும். அவ்விதம் கேட்பதற்கு முன்னே, அவை இப்

பொழுது அவசியம் வேண்டுமா, அவை இல்லாமல் நம்மு டைய காரியங்கள் சரிவர நடக்கமாட்டாவா என்று நாம் நன்றாய் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நமக்கு இத்தனை நன்மைகளைச் செய்தவர்கள் இன்னும் செய்யத்தக்க நன் மைகளைச் செய்ய உடன்பட்டிருக்கிறார்கள். நம்மில் கல்வி விற்பத்தியுள்ளவர்கள் மற்றவர்களுக்கு இந்த விஷயங்க ளைத் தெளிவாக விளக்கவேண்டும். துரைத்தனத்தாருக்கும் கல்வி விற்பத்தியில்லாத குடிகளுக்கும் இடையில் நின்று இருவருக்கும் ஒற்றுமையை உண்டாக்குவது கல்விமான் களுடைய கடமை. அப்படிச் செய்யும்போது, துரைத்த னத்தார் குடிகளின் நன்மையை நாடிச் செய்வதனைத்தையும் குடிகளிடத்திலும், அவ்விதமே குடிகளுக்கு துரைத்தனத் தார் செய்யவேண்டிய தனைத்தையும் துரைத்தனத்தாரிடத்தி லும், கல்விமான்கள் அணுவளவும் பிறழாது உள்ளதை உள் ளபடி சொல்லவேண்டும். இந்தியாவை ஆட்சிசெய்வதில் எவ் வளவோ வருத்தமும் சங்கடமும் உண்டு. ஆகையால் தப்புந் தவறுமான விஷயங்களைச் செல்லி அதில் இன்னும் அதிகவரு த்தம் உண்டாகும்படி செய்தலாகாது. நமது மதமும் ஐதிகங் களும் ராஜ பக்தியை வற்புறுத்துவனவே. ஆதலினால் நமக்கு உண்டாக வேண்டிய க்ஷேமங்களுக்கு அதுவே காரணமாகும்.

சுமித்திரை லட்சுமணருக்கு புத்திசொல்லல்

1. இந்த மரவுரி அந்த வனத்தில் கொண்
டேகுடன் ஈதென் வார்த்தை லட்சுமணா
அந்த வார்த்தையே மந்திரமா அண்ணன்
அடிபூசை செய் அடா லட்சுமணா

2. அண்ணன் இவன்மணி வண்ணனே என்றெண்ணி
அரைநொடி பிரியாதே லட்சுமணா
கண்ணின் இமைபோல எண்ணம் எல்லாஞ்செய்து
கட்டிக் காத்திருடா லட்சுமணா

3. வெம்பிய காட்டினில் அரக்கர் வந்தால் அண்ணன்
முன்போய் நீ நில் அடா லட்சுமணு
தம்பி உடையவன் படைக்கஞ்சான் என்னுஞ்சொல்
சாதித்துக்கொள் அடா லட்சுமணு

4. அலை ஆழி புரண்டாலும் அண்ணன் இருக்க உன்னை
ஆரால் என்ன செய்யல் ஆம் லட்சுமணு
மலைமீதில் இருப்பாரைப் பன்றி பாய்வதுண்டோ
மயங்காதே தியங்காதே லட்சுமணு

5. உளங்கொண்டு அண்ணன் எப்படிசொல்வான் அப்படி
ஊழியங் கேள் அடா லட்சுமணு
இளங்கன்று பயம்அறியா தென்றூற் போல நீ
எதிர்த்தொன்றும் சொல்லாதே லட்சுமணு

6. தாயே சீதை உன் தகப்பன் ராமன் இந்த
தலமே வனம் அடா லட்சுமணு
ஆயாசம் பாராதே எள்என்னும் முன் எண்ணெய்
ஆகச் செய்துவாடா லட்சுமணு

7. பின்னுஞ் சடையும் மரவுரியும் காணவோ ராமன்
பிறகே வந்தேன் என்று லட்சுமணு
குன்னமாய் எண்ணுதே தெய்வம்பண்ணிய திருக்
கூத்துக் கென்ன செய்யல்ஆம் லட்சுமணு

8. கர்த்தன் ஆனராமன் சித்தத்திலே எண்ணும்
கட்டளைப் படிதானே லட்சுமணு
புத்திஆகச் செய்தால் அப்போதல்லோ என் தன்
புத்திரன் நீ போய்வாடா லட்சுமணு

51. சோமேசர் முதுமொழிவெண்பா

இன்சொ லிராம னியம்ப விரேணுகைசேய்
துன்பமொழி யேபுகன்ருன். சோமேசா !—வன்புடைய
இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

மேய்த்த திருவள்ளுவனூர் வென்றுயர்ந்தார் கல்விநலம்
துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார். சோமேசா !—உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்ரு ரனைத்திலர் பாடு.

ஐவரில் லாளழுத வன்றேகண் டேக்குற்ருர்
துய்யகங்கை சேய் மூதலோர். சோமேசா !—மெய்யேயாம்
அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

52. சிந்திக்கு முறை

தகப்பன்.—அப்பா மகனே! இப்படி வா. அதோ மைதானத்தில் மேய்கிறதே, அது என்ன?

பிள்ளை.—அது குதிரை.

த.—அது யாருடையது?

பி.—எனக்குத் தெரியாது. அதை நான் முன் எப்போதும் பார்த்ததில்லை.

த.—முன்னெப்போதும் பார்த்திரா விட்டால் அது குதிரையென்று எப்படித் தெரியும்?

பி.—அது மற்றக் குதிரைகளைப்போல் இருக்கிறது.

த.—அப்படியானல், எல்லாக் குதிரைகளும் ஒரே விதமாய் இருக்கின்றனவா?

பி.—ஆம்.

த.—அப்படி அவைகள் ஒரே விதமாய் இருந்தால் குதிரைக்குக் குதிரை வித்தியாசம் தெரிவது எப்படி?

பி.—அவைகள் முழுவதும் ஒரே விதமாய் இல்லை.

த.—குதிரைக்குக் குதிரை பல விதங்களில் ஒத்திருப்பதால், குதிரை வேறு பசு வேறு என்று சுலபமாய்த் தெரிந்துகொள்ளலா மல்லவா?

பி.—ஆமாம்.

த.—குதிரை வேறு பூசனிக்கொடி வேறு என்பதும் தெரிந்துகொள்ளலா மல்லவா?

பி.—குதிரை வேறு பூசனிக்கொடி வேறு என்பது யாருக்குத்தான் தெரியாது?

த.—குதிரைக்கும் பூசனிக்கொடிக்கும் வித்தியாசமென்ன? சொல்லு பார்க்கலாம்.

பி.—அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? குதிரைக்கு உயிர் உண்டு.

த.—மெய்தான். உயிருள்ள ஒவ்வொன்றையும் என்ன என்பார்கள்?

பி.—உயிருள்ளவைகளைப் பிராணிகள் ஜீவஜந்துக்கள் என்கிறார்கள்.

த.—சரி. குதிரைக்கும் பூசனிக்கொடிக்கும் பொதுவான குணம் ஏதாவது உண்டா?

பி.—ஒன்றுமில்லை யென்று நினைக்கிறேன்.

த.—இருக்கிறது. மனிதரில் மிகவும் சிறந்தவனுக்கும் அந்தச் சுவரின் மேலிருக்கிற பாசைக்குங் கூட பொதுவான ஒரு குணம் உண்டு.

பி.—கடவுள் உண்டாக்கினது என்பதுதான்.

த.—ஆமாம். கடவுள் உண்டாக்கிய ஒவ்வொன்றுக்கும் என்னவென்று பெயர் வழங்கும்?

பி.—சிருஷ்டி.

த.—ஆகவே குதிரை என்பது ஒரு சிருஷ்டி; அது ஜீவனுள்ள சிருஷ்டி. அதாவது அது ஒரு பிராணி.

பி.—ஆகவே பூசனிக்கொடி ஜீவன் நீங்கிய சிருஷ்டி. அதுதான் வித்தியாசம்.

த.—அப்படியும் இல்லை. முன் எப்போதும் ஜீவனைப் பெற்றிராததை ஜீவன் நீங்கியதென்று சொல்வது முடியாது.

பி.—ஜீவன் நீங்கினதுமில்லை, ஜீவன் பெற்றதுமில்லையானால், அதை என்னவென்று சொல்வது?

த.—ஜீவன் இல்லாத சிருஷ்டி. ஜீவனுள்ளதும் ஜீவனில்லாததும் என சிருஷ்டியில் இரண்டு விதம் உண்டு. செடிகள் கற்கள் லோகங்கள் ஜீவனில்லாதவை. குதிரைகள் ஜீவனுள்ளவை.

பி.—தோட்டக்காரன் தான் நட்டதில் ஒரு பூசனிக்கொடி செத்துப் போயிற்று, ஒன்று பிழைத்திருக்கிறது என்றானே.

த.—உண்மைதான். அவயவங்களுள்ள பிராணிகள்போல் செடிகளுக்கும் முளைப்பதும் வளர்வதும் அழிவதுமாகிய வாழ்க்கை உண்டு. அவைகளுக்குப் புலன் உண்டோ இல்லையோ என்பது நமக்குத் தெரியாமையால், ஜீவஜந்துக்களைப் போல் அவைகளுக்கு ஜீவன் இல்லை என்கிறோம்.

பி.—அப்படியானால் குதிரையானது ஒரு ஜீவஜந்து என்பது ஏற்படுகிறது.

த.—ஆம். ஆயினும் கெண்டையும் ஒரு ஜீவஜந்துவே, குருவியும் ஒரு ஜீவஜந்துவே. அவைகளுக்கும் குதிரைக்கும் வேறுபாடு என்ன?

பி.—கெண்டை ஜலத்தில் சஞ்சரிக்கிறது: நீஞ்சுகிறது. குருவி பறக்கிறது: வாயுவில் சஞ்சரிக்கிறது.

த.—கெண்டை ஜலத்துக்கு வெளியில் சஞ்சரிக்கக் கூடுமென்று வைத்துக்கொண்டாலும், அது நிலத்தின்மீது நடக்க முடியாதல்லவா.

பி.—அதனால் நடப்பது முடியாது. அதற்குக் கால்கள் இல்லை.

த.—குருவி குதிரையைப் போல் வேகமாய் ஓடுவது முடியாது.

பி.—முடியாது. இரண்டு சிறிய கால்களைக் கொண்டு அது தத்தித் தத்திக் குதித்துப் போகும்.

த.—குதிரைக்குக் கால்கள் எத்தனை?

பி.—நான்கு.

த.—மாட்டுக்கோ?

பி.—நான்குதான்.

த.—ஒட்டைக்கோ?

பி.—அதற்கும் நான்கே.

த.—நாலு கால்கள் இல்லாமல் பூமியில் வசிக்கிற ஜந்துக்கள் ஏவையாகிலும் உனக்குத் தெரியுமா?

பி.—பூச்சி புழு முதலானவை தவிர மற்றவைகளுக் கெல்லாம் நாலு கால்கள் உண்டு.

த.—அவைகளுக்கு என்னவென்று பெயர் வழங்குகின்றது?

பி.—நாற்கால் ஜந்து.

த.—ஆகவே குதிரை ஒரு நாற்கால் ஜந்து. இதற்கும் பறவைகள் மீன்கள் பூச்சிகள் முதலானவைகளுக்கும் உள்ள வித்தியாசம் இதுதான்.

பி.—குதிரைக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசமும் இதுவே

த.—மெய்தான். பறவைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால், அவைகளுக்கும் மனிதர்க்கும் உள்ள வித்தியாசத்தை அவ்வளவு சுலபத்தில் சொல்வது முடியாது.

பி.—அதென்ன? மனிதன் எந்த விதத்திலும் பறவையை ஒத்திருக்கவில்லை.

த.—அப்படியிருந்தும், முற்காலத்து ஞானி ஒருவர் மனிதனை இறகில்லாத இரண்டுகால் பிராணி என்று சொல்லியிருக்கிறார்.

பி.—அவர் ஸங்கதி தெரியாதவர் போலும். இரண்டிரண்டு காலிருந்தாலும், மனிதனுக்கும் பறவைகளுக்கும் பொதுவான குணம் ஒன்றுமே இல்லையே.

த.—குதிரைக்கும் யானைக்கும் ஏதாவது ஒற்றுமை உண்டா, குதிரைக்கும் எலிக்கும் ஏதாவது ஒற்றுமை உண்டா?

பி.—அதை லேசில் சொல்லலாம், யானை மிகப்பெரியது, எலி மிகச்சிறியது. குதிரை பெரியதுமல்ல; சிறியதுமல்ல.

த.—உன் சொக்காய் மேல் உட்கார்ந்திருப்பது என்ன?

பி.—அது வண்ணாத்திப் பூச்சி. அப்பா! எவ்வளவு பெரிதாக இருக்கிறது. இப்படிப்பட்டதை நான் முன் எப்போதுமே பார்த்ததில்லை.

த.—அது எலியைவிடப் பெரியதென்று நினைக்கிறாயா?

பி.—இல்லை இல்லை.

த.—அப்படியிருந்தும் வண்ணாத்திப் பூச்சியைப் பெரிதென்றும் எலியைச் சிறிதென்றும் சொன்னாயே.

பி.—வண்ணாத்திப் பூச்சியளவில் பார்க்கும்போது அது பெரிதே.

த.—ஆம். பெரிதென்பதும் சிறிதென்பதும் அதனதன் மட்டில் இவ்வளவென்று குறிக்காது. ஒரு பொருளோடு ஒரு பொருளை ஒத்திடும்போது தான் அவைகளுக்கு அர்த்தம் உண்டு.

பி.—இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்.

த.—ஓரினமான பொருள்களில் ஒன்றோடொன்றை ஒத்திட்டுப் பார்க்கும்போதுதான் ஒன்றைப் பெரிதென்றும் ஒன்றைச் சிறிதென்றும் சொல்வது முடியும். அளவைக்கொண்டு குதிரை எப்படி யிருக்குமென்று தெரிவிப்பதானால் அது நாயினும் மிகப்பெரிது என்னலாம். மிகவும் மட்டமான குதிரையையும் மிகவும் பெரிதான வேட்டை நாயையும் பார்த்தால் அவைகள் அளவில் ஒத்திருப்பது தெரியும். ஒரு பிராணிக்கும் வேறு பிராணிக்கும் வித்தியாசம் அறிவதானால் அளவு மாத்திரமே அவைகளின் வித்தியாசத்தைத் திட்டப்படுத்திக் காட்டாது: வர்ணமும் அப்படித்தான்.

பி.—ஆம். குதிரைகளில் கறுப்பும் உண்டு, வெளுப்பும் உண்டு, சாம்பல் நிறமும் உண்டு, சிவப்பும் உண்டு, பல நிறம் கலந்ததும் உண்டு.

த.—அப்படிப்பட்ட நிற வேறுபாடுகள் குயிலிடத்தில் கண்டதுண்டா?

பி.—குயிலெல்லாம் கருநிறமானவை.

த.—நிறம் ஒன்றையே ஆதாரமாகக்கொண்டு குயிலைப் பார்த்திராத ஒரு யூரயியனுக்கு குயில் இவ்விதமா யிருக்குமென்று தெரிவிப்பது முடியுமா? ஆகையால் வித்தியாசங்களை அறிவதில் அளவும் நிறமும் போதமாட்டா. நாற்கால் ஜீவன்களுடைய பாதங்களை உற்றுப் பார். அவைகள் ஒரே விதமாய் இல்லை.

பி.—இல்லை. சில ஜந்துக்களுக்கு அடி பருத்து நுனி சிறுத்த நகங்கள் உண்டு. சில ஜந்துக்களுக்குப் பாதத்தில் நகம் இருப்பதில்லை. சில ஜந்துக்களின் பாதங்கள் கனதியாயும் அவலட்சணமாயும் இருக்கின்றன.

த.—கனதியா யிருப்பவை மாட்டுக் கொம்புபோல் இருக்கின்றனவல்லவா.

பி.—ஆம். அப்படிப்பட்ட பாதங்களுக்குக் குளம்புகள் என்று பெயர் வழங்கும்.

த.—குளம்பல்லாதவை விரல்களுள்ளன. ஆகவே நாற்கால் ஜந்துக்களில் குளம்புள்ளன வென்றும் விரல்களுள்ளனவென்றும் இரண்டு பெரும் பிரிவு உண்டு. இதில் குதிரை எவ்வினத்தைச் சேர்ந்தது?

பி.—அது குளம்புள்ளவைகளின் இனத்தைச் சேர்ந்தது.

த.—குதிரைகளில் பலவேறு விதங்கள் உண்டு. குளம்பில்லாத குதிரையைப் பற்றி எப்போதாவது கேள்விப்பட்டதுண்டா?

பி.—இல்லை. எப்போதும் கேட்டதில்லை.

த.—வேற்றூரான் ஒருவன் "ஐயா, உங்கள் தேசத்தில் குதிரைகளுக்குக் குளம்பிருக்கிறது. வேறே சீதோஷ்ண நிலைமையில் உள்ள எங்கள் சீமையில் நாங்கள் குதிரைக்கு வேறு விதமான போஷணை கொடுக்கிறோம். எங்கள் குதிரைகளுக்கு விரல்கள் உண்டு" என்று நம்மிடம் சொல்லத் துணிவானா? அப்படிச் சொன்னாலும் நாம் நம்புவோமா?

பி.—இல்லை. நம்பமாட்டோம்.

த.—குதிரையானது எவ்விடத்திலிருந்தாலும் எவ்வித போஷணையைப் பெற்றாலும் அதற்கு எக்காலத்திலும் உரியதான ஒரு விஷயத்தை அறியலானோம். ஆயினும் மாட்டுக்கும் குளம்பிருக்கிறது: ஆட்டுக்கும் குளம்பிருக்கிறது. ஆகையால் குதிரையின் குளம்புக்கும் ஆடுமாடுகளின் குளம்புக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா என்பதைப் பார்க்கவேண்டும். லாடக்காரன் குதிரைக்கு லாடங்கட்டும்போது பார்த்திருப்பாய். குதிரையின் குளம்பு எப்படியிருக்கிறது?

பி.—குதிரைக்குளம்பு நடுவில் எங்கும் பிளவுபடாமல் ஒரே குடாவடிவமாக இருக்கிறது.

த.—மாட்டின் குளம்பு அப்படி இருக்கிறதா?

பி.—இல்லை. அது இரண்டு பிரிவுள்ளதாக இருக்கிறது.

த.—ஆகவே குதிரையானது குளம்பு பெற்றிருப்பதோடு அக்குளம்பு பிரிவுபடாமல் முழுசாயிருக்கிறது. இப்படிப்பட்ட குளம்புள்ள நாற்கால் ஜந்துக்கள் உலகில் எத்தனை இருக்கின்றன?

பி.—எனக்குத் தெரியாதே.

த.—நமக்குத் தெரிந்தவரையில் இந்தத் தேசத்திலும் மற்றத் தேசங்களிலும் உள்ளவையெல்லாம், குதிரை, கழுதை

காட்டுக்கழுதையில் ஓரினமான ஜீப்ரா என்பவைகளே. இனி நாம் அறிய வேண்டியது குதிரைக்கும் கழுதைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதே.

பி.—இதில் ஒரு கஷ்டமும் இருக்காது. என் குதிரையை யாராவது கழுதையென்று எண்ண முடியுமா?

த.—அப்படியல்ல. நிற்கிற நிலையைக் கண்டும் தோன்றுகிற தோற்றத்தைக் கண்டும் குதிரைவேறு கழுதைவேறு என்று கண் தெரிந்துகொள்ளுகிறது. ஆயினும் ஜந்துக்களின் சாஸ்திரத்தை அறிந்தவர்கள் அந்த ஸங்கதியை அவ்வளவோடு விடாமல், காது பிடரிமயிர் வால் ஆகிய மூன்றையும் பற்றியே குதிரைக்கும் கழுதைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறிப்பார்கள். கழுதையின் காதுகள் எப்படியிருக்கும்?

பி.—மிகவும் நீளமாய்ப் பருமபடியாய் இருக்கும். அதைப் பார்க்கும்போதே எப்படிப்பட்டவர்க்கும் நகைப்புண்டாகும்.

த.—குதிரையின் காதோ?

பி.—குதிரையின் காது சிறியதாய் லக்ஷணமாய் நெறித்திருக்கும்.

த.—பிடரிமயிரில் வித்தியாசம் ஒன்றும் இல்லையா?

பி.—குதிரைக்குப் பிடரிமயிர் நேர்த்தியாய் நீளமாய் வளர்ந்து ஓடும்போது காற்றில் பறக்கும். கழுதைக்குப் பிடரிமயிர் குட்டையாய் ஏகதேசமாக இருக்கும்.

த.—வாலோ?

பி.—கழுதையின் வாலின் நுனியில் சில மயிர்களே இருக்கும். குதிரையின் வால், கத்தரிக்காமலிருந்தால், மயிர் நீளமாய்க் குச்சுக்குச்சாய்த் தொங்கியிருக்கும்.

த.—இதுவரையில் குதிரையைப்பற்றி நாம் குறித்தறிந்தவை என்னவென்று பார்ப்போம். குதிரை நாற்காலினத்

ளைச் சேர்ந்த ஜந்து: பிரிவுபடாத குளம்புள்ளது: குட்டையாய் நெறித்துள்ள காதுகள் உள்ளது: நன்றாய் வளர்ந்த பிடரிமயிருள்ளது. முழுவதும் நீளமான மயிர் மூடிய வாலையுடையது. இந்தக் குணங்களெல்லாம் வாய்ந்த ஜந்து வேறு ஏதாவது உலகில் உண்டா?

பி.—எனக்குத் தெரியாது. இப்பொழுது நீங்கள் குதிரையைக் குறித்துச் சொன்னதெல்லாம் அதிகம் இல்லையே.

த.—பூமியில் நமக்குத் தெரிந்துள்ள ஜீவசிருஷ்டிகளில் மற்ற ஜந்துக்களுக்கும் குதிரைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிய இது போதுமே. இத்தனை நேரமாக நாம் என்ன வேலை செய்திருந்தோம்?

பி.—என்ன வேலை?

த.—நாம் குறித்த ஒரு பொருள் மற்றப் பொருள்களோடு எவ்விதத்தில் வேறுபடுகிறது என்பதைத் திருத்தமாகவும் சுருக்கமாகவும் வரையறுப்பதாகிய வேலை. முதலாவது, மொத்தத்தில் ஒத்திருக்கிற பொருள்களினின்றும், இரண்டாவது, பல அம்சங்களில் ஒத்திருக்கிற மற்றப் பொருள்களினின்றும், நாம் குறித்த பொருளை வேறாகப் பிரித்துக்கொண்டு, இந்தப் பிரகாரம் நாம் குறித்த விசேஷ அம்சங்களில்லாத பொருள்களெல்லாவற்றையும் ஒவ்வொன்றாய்க் கழித்துவந்தால், நாம் குறித்த பொருளின் தன்மையை அறியலாகிறோம். இங்ஙனம் ஒரு பதார்த்தத்தின் சிறப்பியல்புகள் இன்னின்னவை என்று வரையறுத்த வரையறைதான் அதனுடைய இலக்கணம்.

பி.—நான் குதிரையை முன் எப்போதும் பார்த்திராவிட்டால் இவ்வித இலக்கணத்தால் குதிரை எப்படிப்பட்ட ஜந்துவென்று நான் அறிந்துகொள்வது முடியாது.

த.—குதிரையைப் பற்றிய பாவம் என் மனத்தில் உண்டாக வேண்டுமானால் நீ எவ்விதம் அதை உண்டாக்குவாய், சொல், பார்ப்போம்.

பி.—அது பெரிய நேர்த்தியான பிராணி. தாவித்தாவிப் பாய்ந்தோடும். கால்கள் நொப்பமாயிருக்கும். கழுத்து வில்வளைவாயிருக்கும். தோல் மெல்லிதாய் மழமழப்பாக இருக்கும். வால் நிலத்தில் புரளும். கெட்டியாய்க் கனைக்கும். தலையை நெட்டாக நிமிர்த்தி வாயுவேகமாக ஓடும்.

த.—நீ சொன்னது நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் அது வர்ணனை. அது இலக்கணமல்ல.

பி.—இவ்விரண்டுக்கும் வித்தியாசம் என்ன?

த.—வர்ணனை, என்பது ஒரு பொருளை நேரிற் கண்டாற்போலச் சித்திரித்துரைப்பது. அது விரிவாக இருக்கும். இலக்கணம், அந்தப் பொருளைப் பார்க்காதவர்களுக்கு ஒன்றும் சித்திரித்துக் காட்டுவதில்லை. அந்தப் பொருளை மற்றவைகளோடு மயங்காமல் அதனுடைய சிறப்பியல்புகளைக் காட்டி, இது இன்னதல்ல இன்னதேயாம் என்று வரையறுக்கும் வரையறையே அதன் இலக்கணமாம்.

பி.—எனக்கு வர்ணனை பிரியமாயிருக்கிறது.

த.—உன் வயதில் எனக்கும் அப்படித்தான் இருந்திருக்கும். திருத்தமான பாவங்களை பாவித்து அவைகளை நுட்பமாய் விளக்குவதற்குக் கற்பது விசேஷம். இந்நேரமாக நான் குதிரையாவது என்னவென்று அதன் இலக்கணத்தை உனக்குக் கற்பிக்க விரும்பினதில்லை. ஒன்றைப்பற்றிச் சிந்தனை செய்கிற வித்தையை உனக்கு அறிவிக்கவேண்டுமென்பதே என்னுடைய கருத்து.